விலை ரூபா: 5.00 | பக்கங்கள்:-எட்டு | Registered as a News paper in Sri Lanka

01 OCT 2002


# வலம்புரி
# VALAMPURI


சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | புரட்டாதி 14 திங்கட்கிழமை (30.09.2002) | தொலைபேசி- 2223378 | ஒலி 285


ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## ஒக். 31இல் தாய்லாந்தில் 2ம் கட்டப்பேச்சு

# நோர்வே அமைச்சர் ஹெல்கீசன் இந்தவாரம் கொழும்பு வருவார்

## அரசு- புலிகள் பிரதிநிதிகளைச் சந்திப்பார்



(நமது அரசியல் நிருபர்)

**அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையில் தாய்லாந்தில் இடம்பெறவுள்ள இரண்டாம் கட்ட நேரடிப் பேச்சுவார்த்தைக்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் இவ்வாரம் கொழும்பிற்கு வரவுள்ளார்.**

**கொழும்பு வரவுள்ள அவர் அரச தரப்பினருடனும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் சந்தித்துப் பேசவுள்ளார்.**

இலங்கை அரசிற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையே தாய்லாந்தில் இடம்பெற்ற முதற் கட்டப்பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் ஒக்டோபர் மாதம் 31ந் திகதி இரண்டாம் கட்டப்பேச்சுவார்தை நடைபெறவுள்ளது.

தாய்லாந்தில் நடைபெற்ற முதலாம் கட்டப்பேச்சுவார்த்தைகளின் பின் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும், அவற்றினை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் ஆராய்வதற்கும், அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது இடம் பெறவுள்ள விடயங்கள் தொடர்பாகவும் அரசின் உயர் அதிகாரிகளையும் மற்றும் முக்கிய அமைச்சர்க

(08ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புப் படையில்
# கமாண்டர் பதவியை நீக்க சீர்திருத்தக் குழு சிபார்சு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவினால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ தலைமையில் நியமிக்கப்பட்டிருந்த மூன்று உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாப்புத்துறைச் சீர்திருத்தக் குழு தனது முதலாவது அறிக்கையை பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம் கையளித்துள்ளது.

அதில் தேசிய பாதுகாப்புக் கவுன்சிலை விஸ்தரிப்பது, தேசிய தற்பாதுகாப்புச் சபை ஒன்றை அமைப்பது, படைத்துறைப் பிரதானிகளின் கூட்டுக் குழுவிற்கு துறை சார் அனுபவம் பெற்ற தலைவர் ஒருவரை நியமிப்பது போன்ற சிபார்சுகள் செய்

(08ம் பக்கம் பார்க்க)

# மோட்டார் சயிக்கிள் விபத்து கடற்படைச் சிப்பாய் பலி

## மல்லாகத்தில் சம்பவம்

(ஏழாலை)

மல்லாகம் சந்திக்கு அருகில் கடற்படையினரின் மோட்டார் சயிக்கிளும் பொது மகன் ஒருவருடை மோட்டார் சயிக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் கடற்படைச் சிப்பாய் உயிரிழந்தார்.

நேற்றுப் பிற்பகல் 2.30மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் குமாரசிறி ரத்நாயக்க என்ற கடற்படைச் சிப்பாயே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்ற கடற்படையினரது மோட்டார் சயிக்கிளும், தெல்லிப்பழையில் மல்லாகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பொது மகன் ஒருவருடைய மோட்டார் சயிக்கிளுமே மோதி விபத்துக்குள்ளானது.

இதில் பொது மகன் படுகாயமடைந்ததுடன் மோட்டார் சயிக்கிளில்

(08ம் பக்கம் பார்க்க)

# சமாதானத்தை முன்னெடுப்பதற்காக இராணுவக் கட்டமைப்பில் மாற்றம்

## பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன நடவடிக்கை

(கொழும்பு)

அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து நடைபெற்றுவரும் சமாதா

யில் இராணுவக் கட்டமைப்பிற்குள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன ஈடுபட்டுள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தின் கட்

பதவி வகித்த பாதுகாப்பு அமைச்சர்கள் கவனம் செலுத்தாமையால்

(08ம் பக்கம் பார்க்க)

## புதிய மாணவர்

# சமாதானததை முனனெடுபபதறகாக இராணுவக் கட்டமைப்பில் மாற்றம்

## பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன நடவடிக்கை

(கொழும்பு)

அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியில் இராணுவக் கட்டமைப்பிற்குள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன ஈடுபட்டுள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தின் கட்டுக்கோப்பை கடந்த காலங்களில் பதவி வகித்த பாதுகாப்பு அமைச்சர்கள் கவனம் செலுத்தாமையால்

(08ம் பக்கம் பார்க்க)

## புதிய மாணவர் அனுமதி நவம்பரில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த 2ம்,3ம்,4ம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் அடுத்த மாதம் 7ந் திகதி ஆரம்பிக்கப்பட

(08ம் பக்கம் பார்க்க)

### 19வது திருத்தச் சட்டமூலம்

## ஜனாதிபதியுடன் ஜே.வி.பி நாளை சந்தித்து ஆராயும்

(கொழும்பு)

கடந்த வெள்ளியன்று பொ.ஐ.மு.யினதும் ஜே.வி.பி.யினதும் தலைவர்கள் ஜனாதிபதியை சந்தித்து பேசியதைத் தொடர்ந்து 19வது திருத்தம் தொடர்பான பொதுவான அணுகுமுறையொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. அத்துடன் மீண்டும் நாளை செவ்வாயன்று இவர்கள் சந்தித்து பேசவுள்ளனர்.

இதன் போது சுதந்திரக் கட்சி பொ.ஐ.மு, மக்கள் ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. மற்றும் சமசமாஜக் கட்சி ஆகியன 19வது திருத்தச் சட்டமூலத்திற்கெதிராக மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் பற்றிய விவகாரங்கள் குறித்து ஆராயவுள்ளன.

இது பற்றி ஜனாதிபதியின் வெளி

(08ம் பக்கம் பார்க்க)

அன்பு வாசகர்களே!
நாளை உங்களின்
சங்கு நாதம்
விஷேட அரசியல்
கட்டுரையுடன்
தவறாது கேட்டு வாங்குங்கள்

## மல்லாகத்தில் சம்பவம்

(ஏழாலை)

மல்லாகம் சந்திக்கு அருகில் கடற்படையினரின் மோட்டார் சயிக்கிளும் பொது மகன் ஒருவருடை மோட்டார் சயிக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் கடற்படைச் சிப்பாய் உயிரிழந்தார்.

நேற்றுப் பிற்பகல் 2.30மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் குமாரசிறி ரத்நாயக்க என்ற கடற்படைச் சிப்பாயே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்ற கடற்படையினரது மோட்டார் சயிக்கிளும், தெல்லிப்பழையில் மல்லாகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பொது மகன் ஒருவருடைய மோட்டார் சயிக்கிளுமே மோதி விபத்துக்குள்ளானது.

இதில் பொது மகன் படுகாயமடைந்ததுடன் மோட்டார் சயிக்கிளில்

(08ம் பக்கம் பார்க்க)

## நீர்மின் திட்டத்தை எதிர்த்து இ.தொ.கா. ஆர்ப்பாட்டம்

### அமைச்சர் ஆறுமுகம் தலைமை

(தலவாக்கொலை)

ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் மேல்கொத்மலைப்பகுதியில் அமைக்கப்படவுள்ள நீர்மின் திட்டத்தை எதிர்த்து அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நேற்று மாலை நடத்தப்பட்டது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் பல்லாயிரக்கணக்கில் திரண்ட மக்கள் மேல்கொத்மலை நீர்மின் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரி

(08ம் பக்கம் பார்க்க)

## வவுனியா தொலைபேசி அவுட்

(வவுனியா)

யாழ் குடாநாட்டுக்கும் வவுனியாவிற்கும் இடையிலான தொலைபேசி நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் அவுட்டாகியுள்ளது.

(08ம் பக்கம் பார்க்க)

கணனி தொழில் நுட்பத்தோடு, விஞ்ஞான முறைப்படி ஆய்வுகூடத்தில் தரம் உறுதி செய்யப்பட்டது
சமநிலை போசனைப் பதார்த்த கலவையானது




சீ.ஐ.சீ. உரம்

இலங்கையில் சர்வதேச தரம் 9001 ஐ உறுதிப்படுத்திய ஒரே உரம் இதுவே

சீ.ஐ.சீ. பேர்டிலைசர் (பிறைவேட்)லிமிட்டெட்
205.டி.ஆர்.விஜயவர்த்தன மாவத்தை
கொழும்பு – 10

CIC

Telephone : 01 – 688200 – 2 Fax : 01 – 691909 E.mail: cicf @sltnet.lk Website: www.cicagribusinesses.com

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மண்டேலாபோன்று விடுதலை பெற்ற வீரர்கள்
# மனதில் நல்லெண்ணத்தை வளர்க்கவேண்டும்
## பாதுகாப்புஅமைச்சின்செயலாளர்ஒஸ்ரின் வேண்டுகோள்

(ஓமந்தையில் இருந்துஅன்ரனி ஜீவா).

தென்னாபிரிக்காவில் றொபின்தீவில் 27வருடங்கள் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த நெல்சன்மண்டேலா சிறை இருந்து விடுவிக்கப்பட்ட போது பழிவாங்கும்எண்ணத்துடனோ, மனதில்வெறுப்புடனோ வெளியேறவில்லை அதேபோல் விடுதலைபெறும் வீரர்களும் மனதில் நல்லெண்ணங்களை வளர்த்துக் கொண்டு வெளியேற வேண்டும் இவ்வாறு கைதிகள்பரிமாற்றத்தின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின்பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்,

ஓமந்தை சோதனைசாவடியில நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற கைதிகள்பரிமாற்றத்தின் பின்அரசுதரப்பில் அதன் அறிக்கையை வெளியிட்டுவைத்து பேசிய போது ஒஸ்ரின்பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

ஓமந்தையில் இடம்பெற்றுள்ள யுத்தக்கைதிகள் பரிமாற்றநிகழ்வானதுவரலாற்று ரீதியாக மகிழ்ச்சிக்குரிய ஒரு செயலாகும். பிரதமர்ரணில் விக்கிரமசிங்கா ஆரம்பித்துள்ள சமாதான நடவடிக்கைகளின்பின்னர் ஏற்பட்ட கைதிகள் பரிமாற்ற நிகழ்வு சமாதான முன்னெடுப்பின் ஒருமைற்கல்லாகும்'

இக்கைதிகள் பரிமாற்றத்திற்கு விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனது முழுஒத்துழைப்பையும் தந்துள்ளார் இதனையிட்டு நாம மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஒருபோதும் தீர்த்து வைக்கப்படமுடியாது என்று கருதப்பட்ட இனப்பிரச்சினை இன்று கைதிகள் பரிமாற்றத்துடன் பெரியதொருமுன்னேற்றம் கண்டுவருகிறது

இதைப்போலவே எதிர்காலத்திலும் மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றுதல் வேலைவாய்ப்புக்களை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளுக்கும் இராணுவத்தினரதும் விடுதலைப்புலிகளினதும் ஒத்துழைப்பு கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்'

கடந்த இருபதுவருடங்களாகஏற்படாத சமாதானம் இன்று ஏற்பட்டுள்ளமையால் அரசும்விடுதலைப்புலிகளும் இணைந்து சமாதான அபிவிருத்தி முயற்சிகளை முன்னெடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

(ம)

### முதியோர் தின விழா

(அரியாலை)

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் முதியோர் தினவிழா அரியாலை சனசமூகநிலையத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பி-ப4.30மணிக்கு சங்கத்தின் தலைவர் ரி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை முதன்மைவிருந்தினராகவும் நல்லூர்பிரதேச செயலர் நா.வேதநாயகம்மற்றும் யாழ்கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் மீரா அருள்நேசன் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(த-225)

### நிமலராஜன் படுகொலை வழக்கில்
## ஈ.பி.டி.பி உறுப்பினர் இருவர் விரைவில்கைதாவர்

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை சம்பந்தமாக மேலும் இருசந்தேக நபர்கள் கைதுசெய்யப்படவுள்ளனர்;

இக்கொலைவழக்குதொடர்பாக கைதுசெய்யப்பட்ட ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியைச்சேர்ந்த 6சந்தேகநபர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே இவ்விருவரும் கைது செய்யப்படவுள்ளதாக குற்றப்புலனாய்வு பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வழக்கு விசாரணைகள் தொடர்பாக சட்டமாஅதிபர் கமலசபேசனின் ஆலோசனையை குற்றப்புலனாய்வுபிரிவு பொலிஸார் நாடியுள்ளனர்.

(க-8)

## இலங்கையில் யுத்தம் சிம்பாவேயில் நட்டம்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தகாலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட ஆயுதக்கொள்வனவினால் சிம்பாவே அரசுக்கு 160மில்லியன் அமெரிக்க டொலர் நஷ்டம் ஏற்பட்டுள்ளது

ஐந்துவருடங்களுக்கு முன்னர் சிம்பாவேயின் பாதுகாப்பு நிறுவனம் இடைத்தரகர் ஒருவர் மூலமாக இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்தது எனினும் அதற்கான பணத்தினை அந்த நபர் செலுத்துவதற்கு மறுத்துள்ளார்;

இலங்கை இராணுவமும் தான் செலுத்தவேண்டிய இடைத்தரகர்களுக்கான கடன் தொகையை செலுத்த மறுத்துவருகின்றமையே இதற்கான காரணமாகும்.

(க-7)

### மண்டைதீவில்
## போலியோ
### சொட்டுமருந்து

(ஊர்காவற்றுறை)

மண்டைதீவில் 52 குழந்தைகளுக்கு நேற்றுமுன்தினம் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது.

மண்டைதீவில் உள்ள கிராம அலுவலரின் அலுவலகத்தில் வைத்தே 5 வயதிற்குட்பட்ட 52 குழந்தைகளுக்கு போலியோ மருந்து வழங்கப்பட்டது. (க-75)

## நெரிசலில் 16 பேர் பலி 24பேர்காயம்

(புதுடில்லி)

உத்தரப் பிரதேசத்தில் லக்னோவிலுள்ள சார்பா ரயில் நிலையத்தில் நேற்றுமாலை நிகழ்ந்த நெரிசலில் பவுயன் சமாஜக் கட்சியைச் சேர்ந்த 16 தொண்டர்கள் உயிரிழந்துள்ளனர் 24 பேர் காயமுற்றனர். (சு)

## வடக்கு கிழக்கு யுத்தத்தில் பலியான படையினருக்கு நினைவுச் சோலை

(கொழும்பு)

இலங்கையில் கடந்த பல வருடங்களாக தொடரும் யுத்தத்தில் பலியாகிய சுமார் 23 ஆயிரம் படையினரை நினைவுகூரும் வகையில் கண்டியில் நினைவுச் சோலை ஒன்று விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கமைய ரணவிரு சேவை அதிகார சபையுடன் இணைந்து இலங்கை புகையிலைக் கூட்டுத்தாபனத்தால் இந்நினைவுச்சோலை நிர்மாணிக்கப்பட்டது.

எதிர்வரும் அக்டோபர் முதலாம் திகதி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா இந்நினைவுச் சோலையை திறந்து வைப்பார். (க-07)

## திருட்டுச் சந்தேக நபருக்கு விளக்க மறியல்

(அரியாலை)

திருநெல்வேலியில் உள்ள வீடு ஒன்றில் திருடினார்என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த துரைமணி என்பவரது வீட்டில் 800 அமெரிக்க டொலர், விசா மற்றும் கடவுச்சீட்டு என்பன திருட்டுப் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனை அடுத்து அவரது வீட்டிற்கு விறகு கொத்துவதற்காகச்சென்ற எஸ்.ரவீந்திரன் என்பவர் சந்தேகத்தின பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து திருட்டுப்போன பணத்தில் குறித்தளவு பணம் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(த-225)

## சிறுவர் துஷ்பிரயோகத்தை கட்டுப்படுத்தும் நோக்கில்
## புதிய திட்டம் வகுப்பு

(கொழும்பு)

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன அமரதுங்காவினால் சிறுவர் துஷ்பிரயோகத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் இணைந்து பொலிஸார் இத்திட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான பிரச்சினைகளில் விசேட பயிற்சி பெற்ற பொலிஸாரை கொண்ட பிரிவொன்றும் மாதிவெல தலவத்திபிட வீதியிலுள்ள சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை அமைச்சர் ஜோன் அமரதுங்கா நாளை திறந்துவைக்கவுள்ளார்.

(க-08)

### எஸ். டபிள்யு. ஆர். டியின் சிலை உடைப்பு விவகாரம்
## விசாரணை அவசியம்

(கொழும்பு)

பேருவளையில் அமைக்கப்பட்டிருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சிலை சேதப்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக உடனடியாக பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் வேண்டுதல் விடுத்துள்ளார்.

மொரோக்கோவில் நடைபெறும் தொலை தொடர்பு சம்பந்தமான அமைச்சர்களின் விசேட கூட்டத்தில் பங்குபற்றிய அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இந்த சம்பவம்பற்றி கேள்விப்பட்டதும் களுத்துறைச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்புகொண்டு இவ்உத்தரவை விடுத்துள்ளார்.

இச்சம்பவத்தில் ... வர்கள் எந்தக்கட்சி என்றாலும்சரி அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்த அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இன்று எமது நாடு எதிர்கொண்டு இருக்கும் பல வகையான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும்போது சகல மக்கள் கூட்டத்தினரும் ஒற்றுமையாக ஒருமனதுடன் செயற்படவேண்டும் என்றார்.

நாட்டின் தலைவர் ஒருவரின் சிலைக்கு இத்தகைய சேதத்தை விளைவித்ததையிட்டு வன்மையான கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறேன் எனவும் அறிவித்துள்ளார்.

இதேவேளையில சேதப்படுத்தப்பட்ட சிலை மீண்டும் புனரமைக்கப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே.

(க-07)

சிறு விளம்பரம

### தேவை

கொம்பியூட்டர் ரைப்செற்றிங் தெரிந்தவர்கள் தேவை தகுந்தசம்பளம் வழங்கப்படும் உடனே நேரில் வரவும் ப சிவானந்தசர்மா சந்தசாமி கோவில் வீதி,இணுவில், சுன்னாகம்.

(5931)

### புதிய சம்ஸ்கிருதநூல்

லகு ஸ்ரீசக்ரபூஜா விளக்கப் படங்களுடன் வெளிவந்து விட்டது, தொடர்புகளுக்கு ப.சிவானந்தசர்மா கந்தசாமி கோவில் வீதி, இணுவில்.

(5932)

## ஆத்மா சஞ்சிகை
### வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

மனிதம் கலந்தாய் குழுவினரால் இருமாதங்களுக்கு ஒருமுறை வெளியிடப்படும் 'ஆத்மா' சமூகவியல் சஞ்சிகையின் செப்ரெம்பர்-ஒக்டோபர் மாதத்துக்கான இதழ் வெளிவந்துள்ளது (க-8)

## இராசி பலன்

30 - 9 - 2002
புரட்டாதி 14 திங்கள்)
நவமி பி இ. 4.59 வரை
திருவதிரை மு. ப. 8.41 வரை
இராகுகாலம் 7 32 - 9.02
நல்ல நேரம் 12 02 - 1.32
சித்த மிர்தம்

**மேடம்**
காரிய அனுகூலம், உறவினர் வருகை, போசனசுகம், தனலாபம்.

**இடபம்**
மனக்கிலேசம்,மதர்நட்பு, காரிய தாமதம், கௌரவக் குறைவு.

**மிதுனம்**
நலலமுயற்சி, சயனசுகம், பெரியோர் ஆதரவு, நண்பர்கள உதவி.

**கடகம்**
கோபபடுதல், சயன சுகக் குறைவு. முயற்சி தாமதம், சுபசெலவு

**சிங்கம்**
பெருமையடைதல், காரிய சித்தி, மனமகிழ்ச்சி, குடும்ப சுகம்.

**கன்னி**
அதிகாரம், தொழில் மேன்மை, முயற்சி கைகூடும், பிறர் உதவி.

**துலாம்**
ஆன்றோர் மதிப்பு தொழில் சிந்தை,எதிர்பாராத நன்மை. கட்டுப்பாடு

**விருச்சிகம்**
உறவினர்எதிர்ப்பு,போசன சுகம, காரியதடங்கல் அமைதிக்குறைவு.

**தனுசு**
கௌரவம், நண்பர்கள் சந்திப்பு. முயற்சிகைகூடும்; தனவரவு

**மகரம்**
உடலநலம், சுவாரஸ்யம், செய்தொழில்விருத்தி முயற்சி டலிதம.

**கும்பம்**
கௌரவக்குறைவு குடும்பக் கவலை, வியாபார நன்மை சிறு வியாதி.

**மீனம்**
மாணவர் கல்விச்சிறப்பு' ரோகபயம், காரியதாமதம்' பகைவர் நேசம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மூன்றாம் நிலைக் கல்வி டமைச்சினால் தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் சற்கை நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கு இம்மாதம் 27 ஆம் திகதி வர்த்தமானியில் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் நவம்பர் மாதம் 1 ஆம் திகதிக்கு முன்னர் உரிய தொழில்நுட்பக் கல்லூரிக்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். (க-03

## நாட்டு வழக்கில்

லைச் சேர்க்க வேண்டியதாயிற்று. அப்படிச் சேர்த்ததனால் ஆம்பளைப் பிள்ளை, பொம்பளைப்பிள்ளை என்ற கொச்சைப்பதங்கள் வழங்கி வருகின்றன.

இவ்வாறு கொச்சைத் தமிழில் சிதைந்து வழங்கும்சொற்களால் சில வேளைகளில் விபரீதமும் விளைவதுண்டு, சென்னையில் ஹாமில்டன் வாராவதி ஆமிட்டன் வாராவதியாகி, அம்பட்டன் வாராவதி எனச் சிதைந்து, ஆங்கிலத்தில் 'பார்பஸ் பிரிட்ஜ்' என்று மொழி பெயர்க்கப்பட்டிருப்பது நாடறிந்த செய்தியன்றோ? கும்பகோணத்திற்கு அருகே, உப்பிலியப்பன் கோயில் என்னும் திருமால் திருப்பதி ஒன்று உள்ளது. அங்குள்ள பெருமாள் உப்பிலியப்பன் என்று வழங்கப்படுதலால், உப்பில்லாத நிவேதனம் அப்பெருமாளுக்கு அளிக்கப்படுகின்றது. இவ்வாறு செய்ய நேர்ந்ததற்குக் காரணம் கொச்சைத் தமிழ் தான். 'ஒப்பிலியப்பன்' என்ற பெருமாள் திருப்பெயரை உப்பிலியப்பன் என்று சிதைத்தது கொச்சைத் தமிழ். தனக்கு உவமையில்லாத் தலைவனாகிய இறைவனை ஒப்பிலி என்னும் சொல் உணர்த்துவதாகும். 'நின்னொப்பார் பிறரின்றி நீயே ஆனாய்' என்றுதேவாரம் ஈசனைப் பாடியது போன்று, திருவாய் மொழியில் 'தன்னொப்பார் இல்லப்பன்' என்று பாடினார் நம்மாழ்வார். அவர் வாக்கின் அடியாக ஒப்பிலியப்பன் என்ற பெயர் பெருமாளுக்கு வழங்கலாயிற்று. அப்பெயர் உப்பிலியப்பன் எனச் சிதையவே, உப்பில்லாப் பண்டத்தை ஏற்கும்நிலை இறைவனுக்கு ஏற்பட்டுவிட்டது.

## அகராதியும் விண்ணாணமும்

'கர்வம் பிடித்தவனை அகராதி பிடிச்சவன்' என்று கொச்சைத்தமிழிலே கூறுவ

# புலிகளிடம் மேலும் இராணுவக் கைதிகள் இருப்பதாக சிங்கள மக்கள் நம்புவது தவறானது

## விடுதலை பெற்ற கமாண்டர் போயாகொட தெரிவிப்பு

(ஓமந்தை)

தென்னிலங்கையில் சிங்கள மக்கள் நினைத்திருப்பது போல தமிழீழ விடுதலைப் புலிகள் வசம் இராணுவ வீரர்கள் கைதிகளாக இருப்பதாக எனக்குத் தெரியவில்லை என்று நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்ட 'சாகரவர்த்தனா' கடற்படைக் கப்பல்கட்டளை அதிகாரி கமாண்டர் அஜித் குமார போயாகொட எமது செய்தியாளருடன் பேசும் போது தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் விடுதலையான அஜித்குமார போயாகொட ஊடகவியலாளரை சந்தித்தார். அப்போது எமது செய்தியாளரிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில்மேலும் பல இராணுவ வீரர்கள் கைதிகளாக இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி அவர்கள் பலரைக் கைதிகளாக வைத்திருக்கக்கூடிய இடவசதியும் அவர்களிடம் இல்லை. எனவே மேலும் பலர் விடுதலைப் புலிகள் வசம் கைதிகளாக இருக்கிறார்கள் என்ற தென்னிலங்கை மக்களின் நம்பிக்கை தவறானது. நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டவர்களைத் தவிர வேறு எவரையும் நான் அங்கு காணவில்லை.

எமது விடுதலைமூலம் நாட்டின் சமாதானம் மேலும் பலப்படுத்தப்படும். எட்டு ஆண்டுகளுக்குப் பின் நேற்று முன்தினம் நான் விடுவிக்கப்பட்டுள்ளேன். இது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

எமது விடுதலைக்கு உதவிய ஜனாதிபதி, பிரதமர், தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஆகியோருக்கும் நன்றி தெரிவிப்பதாக போயாகொட தெரிவித்தார்.

இதேவேளை, விடுதலையான ஏனைய இராணுவத்தினரும் படையில் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்தனர். (ம-5)

# கண்ணிவெடிகள் அகற்றும் தரப்புகளிடையே இணக்கப்பாடின்மையால் பணிகள் தாமதம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசசெயலகப்பிரிவில் மிதிவெடிகள் அகற்றும்பணியில் அமெரிக்கக்குழு, பாதுகாப்புப்படை, ஹலோரஸ்ட் போன்றவை ஈடுபட்டுள்ள போதிலும் கூட, இவற்றின் மத்தியில் புரிந்துணர்வும், இணக்கப்பாடும் இல்லாமைஇருப்பது பற்றித்தெரிய வருகின்றது

இதன்காரணமாக மிதிவெடிகள்அகற்றும் பணியில் காலதாமதமும், இரட்டிப்புப் பணிகளும் இடம்பெற்றுவருவதாகவும் அறியப்படுகின்றது.

அத்துடன், மிதிவெடி பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும்பணியில் யுனிசெவ், சிறுவர்பாதுகாப்பு நிறுவனம் போன்றவையும் ஈடுபட்டிருப்பதாகவும் அறியப்படுகின்ற சமயத்தில், மிதிவெடிகளினால் பாதிக்கப்படுபவர்களும் அதிகரித்துவருகின்றனர் எனத் தெரியவருகின்றது

இது இவ்விதமிருக்க, இப்பிரதேசத்தில் முதல்முதலில் மிதிவெடிகள் அகற்றும்பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினரின் செயல்பாடுகளைப் புறந்தள்ளிவிட்டு ஏனைய நிறுவனங்கள் தம் மிஷ்டம்போல மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளன.

இவ் அமைப்புகளின் பணிகளை இணைக்கக்கூடிய போக்குகள்எதுவும் ஏற்படுத்தப்படாமையினால், யார், யார் எங்கு எப்பிரதேசத்தில் பணிசெய்ய வேண்டும்என்ற நிலைப்பாடு எடுக்கப்படவில்லைஎன அறியப்படுகின்றது.

இதேவேளை, தென்மராட்சி பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்கும், செயலிழக்கச்செய்வதற்கும் பல வருடங்கள் செல்லலாம் எனக்கூறப்படுகின்றது.

இந்நிலையில் இப்பிரதேசத்தில் மிதிவெடிகள் செயலிழக்கும்பணியில் பிரதேச செயலரின் இணைப்பை ஏற்படுத்திக் கொள்வது நல்லதுஎனபொது மக்கள்தரப்பில் கூறப்படுகின்றது. (உ)

## ஆங்கிலத் திரிபு

கொச்சைத் தமிழில் பல ஆங்கிலச் சொற்கள் கலந்து வழங்கக் காணலாம். 'ஓசி' என்பது அத்தகைய சொற்களில் ஒன்று 'நாசிக்குப் பொடி ஓசி' வெறு வாய்க்கு வெற்றிலை பாக்கு ஓசி. ஓசி என்பது சும்மா கிடைப்பது. விலை கொடாமல் பெறுவது. இந்தச் சொல்லின் வரலாற்றைப் பார்த்தால்ஏறக்குறைய இரு நூற்றாண்டுகளாக இந்நாட்டில் இது வழங்கி வருகிறது என்பது விளங்கும். ஆங்கிலக் கம்பனியார் இந்நாட்டில் ஆட்சி செலுத்திய பொழுது அக்கம்பனியின்

# 19 பேர் கைதாகினர்

(கொழும்பு)

கண்டி வத்திகம நகரிலும் சுற்றுப்புற பிரதேசங்களிலும் குடிபோதையில் பொதுமக்களிற்கு இடையூறு ஏற்படுத்தி வந்த 19 நபர்கள் வத்திகம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்த 19 நபர்களிற்கும் எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்போவதாக வத்திகம பொலிஸ் பொறுப்பதிகாரி டி. கேரத் தெரிவித்துள்ளார். (க-10)

# இலங்கைக்கு உதவிவழங்கல் ஜப்பான் தலைமையில் விசேட மாநாடு

(கொழும்பு)

இலங்கையின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு அவசியமான உதவிகள் குறித்து ஆராய்வதற்காக இடம்பெறவுள்ள சர்வதேச மாநாட்டிற்கு ஜப்பான் தலைமை தாங்க உள்ளது.

இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவிற்கும் அமெரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச்சர் றிச்சட் அமிரெஷ் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான அழைப்பை அமைச்சர் மிலிந்த மொறகொட ஜப்பானுக்கு விடுத்ததாகவும் ஜபபான் அவ் அழைப்பை ஏற்று கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இலங்கையின் புனர் நிர்மாணப் பணிகள் குறித்து ஆராய சர்வதேச

# சமாதானப் பேச்சு குறித்து சர்வதேசத்தில் வரவேற்பு

## நியூயோர்க்கில் பிரதி வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகள்குறித்தும்அரசாங்கத்துக்கும் தமிழீழவிடுதலைப் புலிகளுக்கும் இடையில் காய் ... துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் அடுத்த மாதம் 31 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இரண்டாவது சுற்று பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் யாவும் தற்

போன்று, திருவாய்மொழியில் 'தன்னொப்பார் இல்லப்பன்' என்று பாடினார் நம்மாழ்வார். அவர் வாக்கின் அடியாக ஒப்பிலியப்பன் என்ற பெயர் பெருமாளுக்கு வழங்கலாயிற்று. அப்பெயர் உப்பிலியப்பன் எனச் சிதையவே, உப்பில்லாப் பண்டத்தை ஏற்கும்நிலை இறைவனுக்கு ஏற்பட்டுவிட்டது.

### அகராதியும் விண்ணாணமும்

'கர்வம் பிடித்தவனை அகராதி பிடிச்சவன்' என்று கொச்சைத்தமிழிலே கூறுவதுண்டு. அகம்பாவத்திற்கும் அகராதிக்கும் என்ன தொடர்பு? இவ்விரண்டுக்கும் ஒரு தொடர்பிருப்பதாகப் பாமரமக்கள் கருதுகிறார்கள். அகராதியை ஒருவன் முற்றும் படித்து விட்டால் எல்லாம் தெரிந்து விட்டது என்ற மண்டைச் செருக்கு உண்டாகி விடும் என்பது அவர்கள் கருத்து. 'கல்லாடம் படித்தவனோடு சொல்லாடாதே' என்னும் பழமொழி புலவருலகத்தில் வழங்குதல் போல, 'அகராதி படித்தவனை அணுகாதே' என்ற எச்சரிக்கை பாமர உலகத்தில் எழுந்தது போலும்.

'விண்ணாணம்' என்பது கொச்சைத்தமிழில் வழங்கும் மற்றொரு சொல். 'விஞ்ஞானம்' என்ற அருமையான சொல்லே 'விண்ணாணம்' என்று சிதைந்திருப்பதாகத் தோன்றுகிறது. வக்கணையாகவும் தோரணையாகவும் பேசும் பேச்சுக்கு விண்ணாணம் என்பது பெயர். குற்றாலக் குறவஞ்சி நாடகத்தில் சிங்கி என்னும் பெயருடைய குறத்தியை விண்ணாணச் சிங்கி என்று கூறுகின்றான்; அவள் காதலனாகிய குறவன் விண்ணாணம் பேசும் சிங்கியைக் காணாமல் கவலையுறும் குறவன் பாட்டுச்சாலவும் இனியதாகவும்.

ஆங்கிலச் சொற்கள் கலந்து வழங்கக் காணலாம். 'ஓசி' என்பது அத்தகைய சொற்களில் ஒன்று 'நாசிக்குப் பொடி ஓசி' வெறு வாய்க்கு வெற்றிலை பாக்கு ஓசி. ஓசி என்பது சும்மா கிடைப்பது. விலை கொடாமல் பெறுவது. இந்தச் சொல்லின் வரலாற்றைப் பார்த்தால்ஏறக்குறைய இரு நூற்றாண்டுகளாக இந்நாட்டில் இது வழங்கி வருகிறது என்பது விளங்கும். ஆங்கிலக் கம்பனியார் இந்நாட்டில் ஆட்சி செலுத்திய பொழுது அக்கம்பனியின் சார்பாக அனுப்பிய அஞ்சல் கடிதங்களில் ஓ. சி.எஸ். என்ற முத்திரை இட்டார்கள். ஓ. சி. எஸ். என்பது ஒன் கம்பனிசேர்விஸ்(OnCompany Service) என்பதன் குறுக்கம். ஓ. சி. எஸ். தபால்கள் பில்லை ஒட்டாமல் எங்கும் சென்றமையால் ஓ. சி. யில் போகிறது என்ற சொல்லுக்குச் சும்மா போகிறது என்ற பொருள் வந்தது. சீட்டுக் கச்சேரியில் 'ஆடுதன்' என்ற சொல் அடிக்கடி வரும். ஆடுதன் என்பது ஹார்ட்ஸ் Hearts) என்ற ஆங்கிலச் சொல்லின் சிதைவு வாட்டசாட்டமாக இருப்பவனைப் பார்த்து ஆடுதன் ராஜா மாதிரி இருக்கிறான்' என்று சொல்வதுண்டு.

நாட்டுப் புறங்களில் 'ஏட்டையா' என்பவரைக் கண்டால் ஒரே ஓட்டந்தான். 'ஏட்டையா' என்பவர் ஹெட்கான்ஸ்டபிள். ஆங்கிலச் சொல்லாகிய ஹெட் (Head) என்பது ஏட்டு என்று சிதைந்து வழங்குகின்றது. இவ்வாறு வழங்கும் கொச்சைத் தமிழ்ச் சொற்களை ஆராய்ந்தால், பாமரமக்களின் மனப்பான்மையும், தமிழின் நீர்மைக்குத் தக்கவாறு அவர்கள் பிறமொழிச் சொற்களை எடுத்தாளும் பெற்றியும் நன்கு விளங்கும்.

■

துள்ளார். (க-10)

# சமாதானப் பேச்சு குறித்து சர்வதேசத்தில் வரவேற்பு

## நியூயோர்க்கில் பிரதி வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகள்குறித்தும்அரசாங்கத்துக்கும் தமிழீழவிடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெற்று முடிந்த முதலாவது சுற்றுப் பேச்சு வார்த்தை குறித்தும் சர்வதேச சமூகங்கள் இடையில் பெரும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நியூயோர்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதி வெளிவிவகார அமைச்சர் லால் தர்ம பிரியஹமகே தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் அடுத்த மாதம் 31 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இரண்டாவது சுற்று பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் யாவும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சமாதான சூழ் நிலைகள் தோன்றியுள்ளதை தொடர்ந்து சர்வதேச நாடுகள் பலவும் உதவ முன் வந்துள்ளதால்- விசேட உதவித் திட்டத்துக்கென அபிவிருத்தி முயற்சிகள் பற்றிய விரிவான அறிக்கை யொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் அங்கு தெரிவித்துள்ளார்.

(க-8)

## 19வது அரசியல் சீர்திருத்த பிரேரணை தீர்ப்பு

# ஒக்டோபர் 3 ஆம் வாரத்தில் பாராளுமன்றில் அறிவிப்பு

(கொழும்பு)

அரசியல் அமைப்பு கூட்டத்திற்கான 19 வது அரசியல் சீர்திருத்த பிரேரணை குறித்து உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அடுத்த மாதம் மூன்றாவது வாரத்தில் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படவுள்ளது.

இச் சட்டதிருத்தப் பிரேரணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் இறுதி நாள் கடந்த வியாழக்கிழமை ஆகும்.

நீதிமன்றத்தில் இப் பிரேரணையை எதிர்த்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தொழிற் சங்கங்கள் மற்றும் தனியாரினாலும் 32மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இம் மனுக்கள் அனைத்தையும் விசாரணை செய்வதற்கு தனியான ஒரு நீதிமன்றம் அமைக்கப்படவுள்ளது.

19 வது அரசியல் திருத்தப் பிரேரணையை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் சர்வஜன வாக்கெடுப்பும் அவசியமென்று உத்தரவிடுமாறும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

(க. 8)

ஆராய்வதற்காக இடம்பெறவுள்ள சர்வதேச மாநாட்

சர் மிலிந்த மொறகொடவிற்கும் அமெரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச்சர் றிச்சட் அமீரெஷ் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான அழைப்பை அமைச்சர் மிலிந்த மொறகொட ஜப்பானுக்கு விடுத்ததாகவும் ஜபபான் அவ் அழைப்பை ஏற்று கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இலங்கையின் புனர் நிர்மாணப் பணிகள் குறித்து ஆராய சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கி ஒன்றின் குழு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தாய்லாந்தில் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற முதலாம் கட்டப்பேச்சுக்களை அடுத்து, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவிவழங்குவதில் பல்வேறு நாடுகள் தரப்பில் அக்கறை காட்டப்பட்டு வருவதும் ஏற்கனவே தெரிந்ததே.

(க-07)

---

# காரைநகரில் விழிப்புக்குழு

(காரைநகர்)

காரைநகர் கசூர்னா பீச்சில் கலாசார சீரழிவைத் தடுக்குமுகமாக காரைநகர் பொது மக்கள், கல்வியாளர்கள், இளைஞர்கள் போன்றோர் ஒன்றிணைந்து கலாசார நன்நடத்தை விழிப்புக்குழு ஒன்றை அமைக்கவுள்ளனர்.

அண்மைக் காலங்களில் கசூர்னா கடற்கரையில் சட்டவிரோத மதுபாவனைகள், கலாசார சீரழிவுகள் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

(க-246)

# எழுத்துலகில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய

# வரதருக்கு 'சாகித்திய இரத்தினம்' விருது

'நான் ஒரு பிறவிஎழுத்துப் பைத்தியம் 'பிறவி' என்ற சொல்லை 'என்னுடைய நினைவு தெரிந்தநாளிலிருந்து என்று எடுத்துக் கொள்ளுங்கள்' என்கிறார் 'மறுமலர்ச்சி வரதர்' என்னும் தி.ச வரதராசன் அவர்கள் 'பிறவி' முதல் இன்றுவரை எழுத்தாளராகவும் பல சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் விளங்கும் ஒரே ஒருவர் தி.ச. வரதராசன் அவர்கள்.

1943 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆம் நாளில் ஈழத்தின் இளம் எழுத்தாளர்களாக விளங்கிய சிலர் சேர்ந்து 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் என்ற அமைப்பை ஆரம்பித்தனர்; கனக; செந்திநாதன், அ.செ. முருகானந்தன், அ க. கந்தசாமி மஹாகவி து.உருத்திரமூர்த்தி, தி.ச வரதராசன் ச. பஞ்சாட்சரசர்மா, நாவற்குழியூர் நடராசன் முதலியோர் மறுமலர்ச்சிச் சங்கத்தின் உறுப்பினராக விளங்கினர். இச்சங்கம் 'மறுமலர்ச்சி' என்ற இதழை வெளியிடவும் முடிவு செய்தது. 'முதலில் 'மறுமலர்ச்சி' கையெழுத்து இதழாக வெளிவந்தது இதன் ஆசிரியராக 'வரதர்' விளங்கினார்.

பதினைந்து வயதில் ஈழகேசரி இளைஞர் சங்க வெளியீடான 'கல்வி அநுபந்தம்' இதழில் வரதரின் முதல் எழுத்து வெளியானது. இதற்கு முன்னரே, பள்ளிப் பருவத்தில் 'சமூகத் தொண்டன்' கையெழுத்து இதழின் ஆசிரியராக வரதர் விளங்கினார். அதுமட்டுமன்றிமூளாய்சைவப் பிரகாச வித்தியாசாலைமாணவர் தேர்ச்சிச் சங்கம் வெளியிட்ட கையெழுத்து இதழின் ஆசிரியராகவும் அவர் இருந்தார்.

மூன்று ஆண்டுகள் 'மறுமலர்ச்சி' கையெழுத்துஇதழின் ஆசிரியராக விளங்கியவரதர் அதனை அச்சிட்டு வெளியிட விரும்பினார். ஐவரைச் சேர்த்து ஒவ்வொருவரிடமும் ஐம்பதுரூபாபெற்றுமறுமலர்ச்சியை அச்சுவடிவில் வெளியிடவேண்டுமென்று விருப்பி முயன்றார்; வெற்றியும் பெற்றார். வரதருடன் க.சா. மதியாபரணம், நாவற்குழியூர் நடராசன், பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மா, க.இ. குமாரசாமி ஆகியஐவரும் இணைந்து 'மறுமலர்ச்சி' இதழை அச்சுவாகனம் ஏற்றி வெளியிட்டனர். மேலேகுறிப்பிட்டஇளம் எழுத்தாளர்களுடன் க.இ.சரவணமுத்து, சு வே., 'சொக்கன்' சோ. தியாகராசா (சோதி) சு. இராஜநாயகன் கு. பெரியதம்பி, க.சி. குலரத்தினம் முதலியோர் 'மறுமலர்ச்சியின் முக்கிய எழுத்தாளராக விளங்கினர்.

'மறுமலர்ச்சி' இதழ் வெளிவந்த காலம் (1946 மார்ச் முதல் 1948 ஒக்ரோபர்வரை) ஈழத்து இலக்கிய வரலாற்றில் 'மறுமலர்ச்சிக் காலம்' எனப்படுகிறது இக்கால கட்டத்து எழுத்தாளர்கள் இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம்பெறுகின்றனர் இவர்களுள் சிறப்பித்துக் கூறப்படுபவர் கவிஞர் மஹாகவி ஆவார் இவர் ஈழத்தில் மிகச் சிறந்த நவீனகாலக் கவிஞராகப் போற்றப்படுகிறார். மகாகவியின் முதற் கவிதைத் தொகுதியாகிய 'வள்ளி' வரதரினால் வெளியிடப்பட்டது. மேலேகூறப்பட்ட எழுத்தாளர் அனைவரும் தீவிரமாக எழுதி உயரும் வாய்ப்பைக் கொடுத்த பெருமை 'வரதர்' அவர்களுக்கே உரியது. இவர்கள் மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர்கள் என்றுபோற்றப்படுகின்றனர்.

வரதருடைய இப்பணி 'மறுமலர்ச்சி' இதழோடு முடிந்துவிடவில்லை, புதினம், வெளிச்சம், அறிவுக் களஞ்சியம் முதலிய ஏடுகளையும் வெளியிட்டார். இவ்விதழ்கள்பல எழுத்தாளர்களின் எழுத்தாற்றலைவளர்த்துப் பெருமையும் புகழும்பெற்றன.

நூல் வெளியீட்டிலும் வரதர்காலந்தோறும்பெரும் பணி ஆற்றியுள்ளார் சிறு கதை, கவிதை சிறுவருக்கான கதைகள், சிறுவர் சஞ்சிகைமுதலியவற்றை வரதரே வெளியிட்டு வந்துள்ளார். 'வரதரின் பல குறிப்பு' (Directory) என்ற நூலையும் வரதர் வெளியிட்டுள்ளார்: இது தமிழில் முதன் முதலில் தொகுத்து வெளியிடப்பட்ட சிறந்த நூலாகும். இந்நூல் காலம் முழுவதும் பயன்படக் கூடிய தொகுப்பு நூலாகும்.

மறுமலர்ச்சிக் காலம் முதல் இன்றுவரைஎழுத்துலகில்தலை நிமிர்ந்து நின்று எழுத்தாளராகவும் பதிப்பாளராகவும் விளங்கும் வரதர் இன்று சாகித்தியமன்றத்தினால்வழங்கப்படும் 'சாகித்திய இரத்தினம்' என்ற பட்டத்தைப்பெறுகின்றார். இது அவருக்கு மேலும் உற்சாகத்தை அளித்துப் பலபுதியபணிகளைச்செய்யும் வாய்ப்பை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

# இலங்கையில் ஒற்றை ஆட்சியின் கீழேயே

# சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும்

## ரம்புக்வெல தேரர் கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டில் சமாதானம் ஒற்றையாட்சியின் கீழும், ஒரே அரசாங்கத்தின் கீழும் ஏற்படுத்தப்படவேண்டுமென்று மகாநயக்க தேரர்ரம்புக்வெல ஸ்ரீ விஸ்சிசார தேரர் வலியுறுத்தியுள்ளார்.

தாய்லந்தில் நடைபெற்ற முதற் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் குறித்து விளக்குவதற்காக, மகாநாயக்க தேரரிடம் அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் சென்றபோதே, தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

தேரர் மேலும் கூறுகையில்; அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளைப் பாராட்டுகின்றேன் எனினும் ஒற்றையாட்சியின் கீழேயே தீர்வும் சமாதானமும் எட்டப்படுவது அவசியமானதாகும்.

புனர்வாழ்வுக்கும் புனர்நிர்மாணத்துக்கும் தாராளமாக உதவும் வெளிநாடுகளின் நம்பிக்கையைப் பேணிநடப்பது அரசின்கடமை;

சமாதானப் பயணம் படிப்படியாக முன்னேறவேண்டும் சமாதானம் மிகவும் அவசரமாகத் தேவையானது. வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்குச்சென்று பார்ப்பதன் மூலமே அதன் அரசாங்கத் தேவையும் யுத்தத்தினால்ஏற்பட்ட சேதங்களும் நன்கு புரியும் என்றும் தேரர்மேலும் கூறினார்.

இதேவேளை இதற்குப் பதிலளித்த அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கூறுகையில்;

ஒற்றையாட்சியின்கீழ் பிரச்சினைக்குத் தீர்வுகாண விடுதலைப்புலிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தனிஅரசுக் கோரிக்கையையும் கைவிட்டிருப்பது நல்ல சகுனமாகும்:

அவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீதும் உயர்ந்த நம்பிக்கை வைத்திருக்கின்றனர்என்று பீரிஸ் கூறினார். (இ)

# கைதிகள் பரிமாற்றம் மகிழ்ச்சிகரமான நிகழ்வே

## சுதாமாஸ்டர் தெரிவிப்பு

(ஓமந்தையில் இருந்து அன்ரனி ஜீவா)

குடும்பப் பெறுமானத்தை மதிப்பவர்களுக்கு கைதிகள் பரிமாற்றம் ஒரு சந்தோஷமான நிகழ்வாகும். தேசியத் தலைவர் வே. பிரபாகரன் மனிதாபிமான அடிப்படையிலும். நல்லெண்ண அடிப்படையிலும் காலத்துக்குக் காலம் யுத்தக் கைதிகளை விடுதலை செய்து வந்தார் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் சுதாமாஸ்டர் கைதிகள் பரிமாற்றத்தின் பின் உரையாற்றும்போது தெரிவித்தார்.

ஓமந்தையில் நேற்று முன்தினம் நடைபெற்ற யுத்தக் கைதிகள் பரிமாற்றத்தின் போது விடுதலைப் புலிகளின் சார்பில் உரையாற்றிய சுதாமாஸ்டர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

ஓமந்தையில் இடம்பெற்ற யுத்தக் கைதிகள் பரிமாற்ற நிகழ்வானது, அரசினதும், விடுதலைப்புலிகளினதும் சமாதான முயற்சியில் நம்பிக்கை ஊட்டுவதாகவும், புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு வலுவூட்டுவதாகவும் அமைந்துள்ளது.

கடந்த அரசாங்கத்துடனும் கைதிகள்பரிமாற்றம் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அந்த அரசு மனித நேயத்தை மதிக்கவில்லை. இதனால் கைதிகள் பரிமாற்றம் நடைபெறவில்லை.

தென்னிலங்கையில் இன்றும் நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களும், யுவதிகளும் நீண்டகாலமாக சிறைகளில் வாடுகிறார்கள்: இவர்கள் விடுதலை விடயத்தில் சகல தரப்பினரும் மிகுந்த கவனம் எடுக்கவேண்டும் என்றும் சுதாமாஸ்டர்கேட்டுக்கொண்டார். (ம)

# கமாண்டர் போயாகொட கடற்படையில் மீண்டும் சேர்க்கப்படவுள்ளார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளினால் நேற்று முன்தினம் ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து விடுவிக்கப்பட்ட சாகரவர்த்தனா கப்பலின்கட்டளைஇடும் அதிகாரி கமாண்டன் அஜித்குமார போயாகொட மீண்டும் கடற்படையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

அஜித்குமார போயாகொடவை மீண்டும் கடற்படையில்சேர்த்துக்கொள்வது தொடர்பாக கடற்படைத் தளபதி றியல் அட்மிரல் தயா சந்தகிரி கருத்துத் தெரிவிக்கையில், இதுபற்றி அரசு ஆலோசித்து வருவதாகவும், அவரைக் கடற்படையில் சேர்த்துக் கொள்வது தொடர்பாக அரசு விரைவில் தீர்மானம் எடுக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (ம)

# நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை

(கொழும்பு)

வடமாகாணத்தில் வாழ்கின்ற மக்களுக்கு வழங்கப்படுகின்ற உலர் உணவுநிவாரணம் மாதம் தோறும் மாவட்டங்களில் உரிய நேரத்தில் வழங்க நடவடிக்கை எடுப்பது என்று கடந்த வியாழக்கிழமை வவுனியா செயலகத்தில்நடைபெற்ற மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகள், வவுனியா அரச அதிபர் கே. கணேஷ், மன்னார் அரச அதிபர் வி. விசுவலிங்கம் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மாவட்டம் தோறும் உலர் உணவு நிவாரணம் வழங்குவதில் உள்ளகுறைபாடுகள் குறித்தும் இம்மாநாட்டில் ஆராயப்பட்டது; (க-03)

# புதிய தொலை பேசி இணைப்பு

(காரைநகர்)

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் காரைநகர் டிப்போவிற்கு புதிய தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது; (க-246)

# முதியோருக்கு இரண்டு சதவீத விலைக் கழிவு

(சுதுமலை)

நாளை 1 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதிவரை கொண்டாடப்படவுள்ள முதியோர் வாரத்தை முன்னிட்டு அரசாங்க மருந்தாக்கல் விற்பனை நிலையங்களில் (ஒசுசல) 65 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் மருந்து கொள்வனவு செய்யும்போது இரண்டு சதவீத விலைக்கழிவு வழங்கப்படவுள்ளதாக அதன் தலைவர் திருமதி சுனேத்திரா ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் விற்பனைக் கிளைகள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் விரைவில் திறக்கப்படவுள்ளதாகவும் இக்கிளைகள் மூலம் மக்களிற்கு தரமான மருந்துப் பொருட்களை குறைந்த விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார் (க-252)

# இன்று பிரிவுபசார விழா

(யாழ்ப்பாணம்)

அச்செழு சைவப் பிரகாச வித்தியாலய முன்னாள் அதிபர் இ. குணநாதனின் பிரிவுபசார விழா இன்று பி. ப. 2. 00 மணியளவில் மேற்படி கல்லூரியில் இடம் பெறும்.

அதிபர் இ: இராசசேகரம் தலைமையில் இடம்பெறும் மேற்படி விழாவில் கிளிநொச்சி விவசாயப் போதனாசிரியர் இ சௌந்தரராஜன், அச்செழுகிராம அலுவலர் செ. வசந்தகுமார், கோப்பாய் வடக்கு கிராம அலுவலர் தி.வரதராஜன் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்வர்.

நீர்வேலி செல்லக்கதிர்காம ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கு. தியாகராஜக் குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெறும்: (உ)

# இன்று விசேட கூட்டம்

(தென்மராட்சி)

கிளிநொச்சி மாவட்ட சாரணர் சங்கத்தின் விசேடகூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாவட்ட சாரண ஆணையாளர் வ. செல்வராசாதலைமையில் இக்கூட்டம் நடைபெறும்என சங்கத்தின் செயலாளர் எஸ். சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (க-77)

# பதிவுகளை மேற்கொள்ள அறிவுறுத்து

(சென்மராட்சி

தென்மராட்சி பிரதேசசெயலர்பிரிவில மீள்குடியமர்தல் கொடுப்பனவாகிய 2 ஆயிரம் ரூபாவைப் பெறுவதற்கான விண்ணப்பங்களை இதுவரை தத்தம் கிராம சேவையாளர்களிடம்பதிவுசெய்யத்தவறியவர்கள் உடனடியாக தமதுபதிவுகளைகிராமசேவையாளர்களிடம் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-77)

# பெண்கள் உதைபந்தாட்ட அணி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை மாணவியரின்உதைபந்தாட்ட அணி அங்குரார்ப்பண நிகழ்வு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று பிற்பகல் 2.30மணியளவில் இடம்பெறவுள்ளதாக எஸ். எச். கே. மொகிதீன் தெரிவித்துள்ளார்; (க)

# இன்று ஒரு தகவல்

## பணம் பாதகம் செய்யும்

ஓர் ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அந்த ஊரில் உள்ள இளைஞர்கள் சிலரைக் கூப்பிட்டு வைத்து உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தார். 'பணத்தை அறவழியில் தேட வேண்டும், தகாத வழியில் தேடுகிற பணம் வந்த வழியிலேயே திரும்பிப் போய் விடும்' என்றார். 'அது மட்டுமல்ல, பணம் நண்பர்களைக் கூட விரோதிகளாக மாற்றி விடும்' என்றார். இளைஞர்களில் ஒருவன் எழுந்தான். 'விபரம் தெரியாமல் பேசாதீர்கள் பெரியவரே!' என்றான். அவர் நிமிர்ந்து பார்த்தார்.

'இதோ பாருங்கள்... நாங்கள் நால்வர் இருக்கின்றோம். நாங்கள் நால்வரும் இணைபிரியாத நண்பர்கள். எந்தப் பணமும் எங்கள் நட்பை எதுவும் செய்துவிட முடியாது...!' என்று சவால் விட்டான். மற்றவர்களும் தலையை ஆட்டினார்கள். பெரியவர் ஒன்றும் சொல்லவில்லை. சிரித்துக்கொண்டே போய்விட்டார். அதன் பின்னர் ஒருநாள்... வழக்கம் போல இந்த நான்கு நண்பர்களும் ஒரு மலையடிவாரத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். பக்கத்தில் ஒரு மலைக்குகை இருந்தது. அதனுள்ளே ஒரு சாமியார் தியானம் பண்ணிக்கொண்டிருந்தார். ஒருசமயம் கண்ணைத் திறந்து பார்த்தார். அவ்வளவு தான் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடிவந்தார். 'சாவு என்னைத் துரத்துகிறது... சாவு என்னைத் துரத்துகிறது...' என்று சொல்லிக்கொண்டே ஓடினார்.

இளைஞர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் இந்தச் சாமியார் இப்படிக் கத்திக் கொண்டு ஓடி வருகிறார் என்று நினைத்துக்கொண்டு குகைக்குள்ளே போய்ப் பார்த்தார்கள். அங்கே போய்ப் பார்த்தால் ஓர் ஆச்சரியம்! விலை மதிக்க முடியாத வைரங்கள்..., நகைகள்..., தங்கக் காசுகள் குவியல் குவியலாகக் கிடந்தன. 'இவ்வளவு பெரிய செல்வத்தைப் பார்த்து விட்டு இந்த ஆள் இப்படி அலறியடித்துக் கொண்டு போகிறாரே' என்று நினைத்து அவருக்காகப் பரிதாபப்பட்டார்கள், அங்கே கிடந்த நகைகளையும், காசுகளையும் ஆசையாகக் கையால் அள்ளிப்பார்த்தார்கள் அந்த நாலுபேரும். 'சரி... இதை இப்படியே நான்கு பங்காகப் போட்டால் ஆளுக்கு எவ்வளவு கிடைக்கும்?என்று கேட்க ஆரம்பித்தான் ஒருவன்.

'நான் தான் இதை முதலில் பார்த்தேன்... அதனால் எனக்குக் கொஞ்சம் அதிகமாகக் கொடுப்பது தான் முறை' என்றான் ஒருவன். 'உனக்கு முன்னர் நான் தானே பார்த்தேன்!' என்றான் இன்னொருவன், கொஞ்சநேரம் ஒருவரையொருவர் திட்டிக் கொண்டிருந்தார்கள், அதன் பின்னர் ஆளுக்கு ஆள் அங்கிருந்த இரும்புக் கம்பிகளைக் கையில் எடுத்துக் கொண்டார்கள். அடித்துக்கொள்ள ஆரம்பித்தார்கள். அதில் ஒருவன் செத்துப் போய்விட்டான். இன்னொருவனுக்குப் பலமான காயம், செத்தவனைப் பார்த்ததும் மற்ற மூன்று பேரும் ஒரு சமரசத்துக்கு வந்தார்கள்.

'சரி...நடந்தது நடந்து போய்விட்டது இனிமேல் நடக்க வேண்டியதைப் பற்றி யோசிப்போம்...ஒருவன் செத்துப் போனது யாருக்கும் தெரியாது. இவனை இங்கேயே புதைத்து விடுவோம்; நாம் மூன்றுபேரும் இதைப் பங்கு போட்டுக்கொள்வோம்' என்கிற முடிவுக்கு வந்தார்கள். அதற்குள்ளே அவர்களுக்குப் பசிக்க ஆரம்பித்து விட்டது. ஒருவனைச் சாப்பாடு வாங்குவதற்கு அனுப்பினார்கள். ஆரம்பத்தில் அவன் தயங்கினான். திரும்பி வருவதற்குள் இவர்கள் இருவரும் இருப்பதைச் சுருட்டிக் கொண்டு ஓடிப்போய் விட்டால் என்ன செய்வது என்ற தயக்கம்.

இருந்தாலும் இவர்கள் இரண்டுபேரும் உறுதி கூறி அனுப்பினார்கள், 'அப்படியெல்லாம் செய்யமாட்டோம். தைரியமாகப் போய் விட்டுவா!' என்று. அவன் போனான், அதன் பின்னர் என்ன ஆனது தெரியுமா? இங்கே அடிபட்டுக் கிடக்கின்றானே அவனுக்கு மூச்சுத் திணற ஆரம்பித்தது. தண்ணீர் தண்ணீர் என்று கத்தினான், பக்கத்தில் இருந்தவன் அதைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டான். அவனும் செத்துவிட்டால் ஒருபங்கு குறையுமென்கின்ற நினைப்பு சாப்பாடு வாங்கப்போனவன் திரும்பிவந்தான். பார்த்தான் 'இவன் எப்படிச் செத்துப் போனான்' என்றுகேட்டான். அடுத்தவன் பார்த்தான். 'இப்படித்தான் செத்துப் போனான்' என்றுசொல்லி அவன்தலையில் இரும்புக்கம்பியால் ஓங்கிஅடித்தான். அவ்வளவுதான் சாப்பாடு வாங்கிக்கொண்டு வந்தவனும் செத்துப்போய் விட்டான். இப்போது இருப்பது ஒரே ஆள் தான். 'அப்பாடா! தொல்லைவிட்டது' என்று நினைத்தான்.

அவசர அவசரமாக அவன் வாங்கிக்கொண்டுவந்த சாப்பாட்டைச் சாப்பிட்டான். நகைநட்டையெல்லாம் மூட்டை கட்டிக் கொண்டு கிளம்பினான். அவ்வளவுதான் தலை கிறு கிறு என்று சுற்றியது கண்கள் இருண்டன. மயங்கிக்கீழே விழுந்தான். அவனும் செத்துப்போனான். என்ன ஆனது தெரியுமா? சாப்பாடு வாங்கப் போனவன் அதில்விஷத்தைக் கலந்துகொண்டு வந்திருக்கின்றான் இவனைக் கொல்வதற்கு! கடைசியில் அந்தச் செல்வம் கேட்பாரற்றுக்கிடந்தது.

அதற்குப் போட்டிபோட்டவர்கள், அதை அனுபவிக்க முடியாமல் அழிந்துபோனார்கள். பணம் நண்பர்களைக் கூட விரோதிகளாக மாற்றி விடும் என்று அத்தப்பெரியவர் சொன்னாரே! அது எந்த அளவுக்கு உண்மையாகப் போயிற்று பார்த்தீர்களா?

வாழ்க்கைக்கு பணம் அவசியந்தான். இல்லையென்று சொல்லவில்லை. இருந்தாலும் அதை முறையாகச் சம்பாதிக்கவேண்டும். முறையாகப் பயன்படுத்த வேண்டும் அதுதான் நாம் தெரிந்துகொள்ளவேண்டியது.

என் நண்பன் ஒருவரிடம் இந்தக்கதையைச் சொன்னேன். சொல்லிவிட்டுக்கேட்டேன். 'ஏனப்பா?' நாமிருவரும் பீச்சுக்கு போவதாக வைத்துக்கொள்வோம். அங்கே மணலில் ஒரு தங்க மோதிரம் கிடைக்கிறது. அதைநான் பார்க்கிறேன். எடுத்து உன்னிடம் கொடுக்கிறேன். அந்தமோதிரம் நம்முடைய ஆழ்ந்தநட்பைப் பிரித்துவிடும்என்று நீநினைக்கிறாயா? என்றேன். பிரிக்கிற அளவுக்கு நீங்கள் நடந்துகொள்ள மாட்டீர்கள் என்றான் 'எப்படி? என்றேன். 'உங்கள்கண்ணிலே அதுபட்டு விட்டால் அதன்பின்னர் அதைப்பற்றி என்னிடம் வாயைத்திறந்து சொல்லவே மாட்டீர்களே? அப்படியென்றால் எப்படி நமக்குள்ளே சண்டைவரும்? என்றான்.'

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# நாட்டை துண்டாடுவதை விட அமைதி ஆட்சியே இன்றைய தேவை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

குடியேற்ற வாதக் கோட்பாட்டின் கீழ் நாட்டை பிரிவினைக்குள்ளாக்குவதிலும் பார்க்க, புதிய ஜனநாயக கோட்பாட்டின்படி அமைதியான ஆட்சிமுறை ஒன்றினை ஏற்படுத்துவதே இன்றைய அவசிய தேவையாகும்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காகுளியாபிட்டியவில் இடம்பெற்ற ஜன ஜெய திட்டங்களை மக்களிடம் ஒப்படைப்பதற்கான வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; குடியேற்ற ஆட்சியாளர்கள சமூகங்கள் மத்தியில் பிரிவினை ஏற்படுத்தி தமது ஆட்சி முறையை இலகுபடுத்தியுள்ளனர்:

மறைந்த முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ ஆர் டி. பண்டாரநாயக்கா நாட்டின் விடுதலையை கருத்தில் கொண்டு தமிழர், சிங்களவர், முஸ்லிம், பறங்கியர் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்தார். தமிழ்ச் சமூகத்தினர் அனைவரும் சிங்களத் தலைவர் ஒருவர் மீது வைத்திருந்த நம்பிக்கையே பண்டாரநாயக்காவின் பலமாக அமைந்தது என அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

கால ஓட்டத்தின் பின்னர் இந்த நம்பிக்கை அற்றுப் போக தொடங்கியதை அடுத்து, இன, மத பிரிவினைகள் ஆரம்பித்தன. இதன் விளைவே கடந்த காலத்தில் பேரழிவை ஏற்படுத்திய யுத்தமாகும்.

எனவே பிரிவினவாத கோட்பாடுகளை நீக்கி சகல சமூகத்தினரும் கௌரவமாகவும், சமாதானமாகவும், சுதந்திரமாகவும் சம உரிமைகளுடனும் வாழ்வதற்கு முயற்சி செய்வதே தனது அரசாங்கத்தின் நோக்கமாகும் எனவும் அங்கு தெரிவித்துள்ளார்.

(க-08)

## மழைவேண்டி பாராயணம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறைக் கலாமன்றத்தினர் கடந்த சிலவாரங்களாகமழை வேண்டி மழைப் பதிக பாராயணத்தைஆலயங்கள்தோறும் சென்று ஓதி வருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சி நீங்கும் வகையிலே இந்நிகழ்வை தாம் மேற்கொள்வதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (க-10)

## வானொலி பாவனைக்கு தடை

(காரைநகர்)

காரைநகர் சாலைக்குரிய வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்களில் வானொலியினைப் பாவிப்பதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது;

மேற்படி சாலையில் பயணம் செய்யும் பயணிகளிற்கு பல்லினப் பாடல் இசைக்க விடுவது பல அசௌகரியங்களைஏற்படுத்துவதாகபயணிகள் தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதை அடுத்தே மேற்படி தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத் தடையைமீறி பஸ்ஸில் பாடல் இசைக்கவிடும் சாரதி மற்றும் நடத்துநர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சாலை முகாமையாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-246)

## விசேட அடையாள அட்டை வழங்கல்

(சுதுமலை)

1980 ஆம் ஆண்டு அமுல் படுத்தப்பட்ட உணவுச் சட்டத்தின் கீழ், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு விசேட அடையாள அட்டைகளை இலங்கை பூராவும் விரைவில் வழங்குவதற்கு சுகாதார சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக சுகாதார சேவைகள் அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சகல பிரதிமாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளர்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகளிற்கு சுற்றுநிருபம் ஒன்றை அண்மையில் அனுப்பிவைத்துள்ளார்.

உணவுச் சட்டத்தில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களான பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள் உணவு மருந்து பரிசோதகர்கள், உணவுப் பரிசோதகர்கள் மற்றும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கே இந்த விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன,

(உ-252)

### 19 வது அரசியல் அமைப்புத் திருத்த சட்டம்

## பொ. ஐ. மு. பிரமுகர்கள் பிரதமரை சந்திப்பர்

(கொழும்பு)

இலங்கை அரசியலில் ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைப்பதற்கான 19 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்கள்.

19 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு ஆதரவாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் 19 உறுபபினர்கள் வாக்களிக்க உள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் நம்பிகை வெளியிட்டுள்ளன.

இதேவேளை ரணில் விக்கிரம சிங்காவின் சகோதரத்துவ அரசியலுக்கு ஒத்துழைப்பு வழங்க உள்ளதாகவும் 19 ஆவது அரசியல் அமைப்பு திருத்த சட்டத்திற்கு ஆதரவு அளிப்பதாகவும் பொதுஜன ஐக்கியமுன்னணியின்பாராளுமன்ற உறுப்பினர் றிச்சட் பத்திரண உறுதி அளித்துள்ளார்.

இதேவேளையில் 19 ஆவது திருத்த சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறை வேறப் போவதில்லை என பொதுஜன ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரும் தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-7)

## மத்தியஸ்தர்களுக்கு சான்றிதழ்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்,மாவட்ட வலைப் பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், சித்தியடைந்த வலைப் பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று பி.ப.2.30 மணியளவில் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்

யாழ்.அரச அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராக. இந்நிகழ்வில கலந்து கொள்வார்.

இலங்கை வலைப்பந்தாட்ட சங்க அனுசரணையுடன் இந்நிகழ்வு நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

## உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் இருந்து நிகால் இடைநீக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிக்காபண்டாரநாயக்கா குமாரணதுங்கவின் பாதுகாப்பு பிரிவு,முன்னாள் பணிப்பாளர் நிகால் கருணாரட்ண உதவிபொலிஸ் அத்தியட்சகர் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுளளார்.

கடந்த 25ஆம் திகதியில் இருந்து இவரது பதவி இடைநிறுத்தப்பட்டுள்ளது பொதுச் சேவை ஆணைக்குழு இதற்கான உத்தரவை வழங்கியுள்ளது.

பொதுத் தேர்தல் காலப் பகுதியில் மாத்திரட்டப்பகுதியில் இடம்பெற்ற வன்முறைகளுடன் இவருக்குத் தொடர்பிருப்பதாக காரணம் காட்டியே இச்சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இவருடன் ஜனாதிபதிபாதுகாப்பு பிரிவைசேர்ந்தமேலும் 9பேர் சேவையில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளதும் நிகால் கருணாரட்ண கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கட்டாய விடுமுறையில் வீட்டுக்கு அனுப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## பண்பாட்டுச் சின்னங்கள் பிரதேச ரீதியாக சேகரிப்பு

(காரைநகர்)

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் காணப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், பொருட்கள், இயற்கைக் காட்சிகள் பண்பாட்டுச் சின்னங்கள், அடையாளங்கள் என்பவற்றின் புகைப்படங்களை பண்பாட்டலுவல்கள் திணைக்களக் கல்வி அமைச்சு சேகரித்து வருகிறது.

பிரதேச ரீதியாக அவ்வப் பகுதி கலாசார உத்தியோகத்தர்கள் மூலம் சேகரிக்கப்படும் இப் புகைப்படங்களை ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பும் படியும் இப்படங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டு சிறந்த படங்களிற்கு பரிசுகளும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-246)

# போர் முறையில் மாற்றம் செய்வதையிட்டு இந்தியா சிந்திக்கும்

## துணைப்பிரதமர் அத்வானி தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவிற்குள் பயங்கரவாதிகளை ஊடுருவச் செய்து பாகிஸ்தான் நடத்தி வரும் பயங்கரவாத யுத்தத்தை எதிர் கொண்டு வரும் இந்தியா, தனது போர் முறையை மாற்றிக்கொள்வது குறித்து சிந்திக்கும் அவசியம் ஏற்பட்டுள்ளதென துணைப் பிரதமர் அத்வானி கூறியுள்ளார்.

பாகிஸ்தான் தூண்டிவரும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தின் மூலம் இருநாடுகளுக்கும் இடையேஏற்கனவே ஒரு நிழல்யுத்தம் நடந்து வருகிறது என்றும் இதற்குப் பதிலடியாக இதுவரை இந்தியா மேற்கொண்டு வரும் போர் முறையைத் தொடரலாமா என்பது குறித்து யோசனை நடத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் நடைபெற்று வரும் சட்டமன்றத் தேர்தல்களை வேடிக்கை நாடகம் என்று வர்ணித்தபாகிஸ்தான் இதில் மக்களை பங்கேற்க வேண்டாம் எனபயங்கரவாத இயக்கங்கள் மூலம் மிரட்டல் விடுத்துள்ளது.

ஆனால் அதையும்தாண்டிஎம் மக்கள் பெருமளவிற்கு வந்து வாக்களித்தது இந்தியா மேற்கொண்டு வரும் ஜனநாயக நடவடிக்கைகளுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்றும் உலகம் அதனைஒப்புக்கொண்டுள்ளதுஎனவும்அவர் மேலும் தெரிவித்தார். (சு)

# நேபாளத்தில் மோதல் 76மாவோ போராளிகள்பலி

(காத்மண்டு)

நேபாளத்தில் 76 மாவோ போராளிகள அரசுப்படையினரால் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த 3 நாட்களில்100ற்கும் அதிகமான மாவோ போராளிகளை நேபாளபாதுகாப்புப் படையினர் கொன்றிருப்பதாக அந்நாட்டு அதிகாரிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் 100இற்கும் அதிகமான அரசுப்படையினரை கொன்றதற்குப் பழி வாங்கும் நடவடிக்கையாக இது அமைந்துள்ளது என்றும் நேபாளப்படையினர் தமது பாதுகாப்பை தீவிரப்படுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவோபோராளிகளுக்கும் நேபாள அரசுக்குமிடையே நடந்த மோதலில் இதுவரை 4 ஆயிரம்பேர் பலியாகியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (சு)

# குற்றச்சாட்டின் பேரில் 18 பொலிஸார் கைது

(பலஸ்தீனம்)

இஸ்ரேலுக்கு ஒத்துழைத்த குற்றச்சாட்டின் பேரில் 18 பலஸ்தீன பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காஷவின் மேற்குக் கரையோரப்பகுதியில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாகப் பலஸ்தீனப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ஹமாஸ், அல் அக்ஷா படையணிமற்றும்அல்பதாஹ்வின் சிரேஷ்ட உறுப்பினர்களின் நடமாட்டம் குறித்து மேற்படி பொலிஸார் இஸ்ரேலுக்கு தகவல் வழங்கியதனாலேயே கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சு- 04)

# நால்வர் கைது

(வாஷிங்டன்)

சர்வதேச நாணய வங்கி அதிகாரிகளுக்கும் உலக வங்கி நாணய அதிகாரிகளுக்குமிடையில் வாஷிங்டனில் பேச்சு வார்த்தை நடைபெற இருந்த இடத்திற்கு அருகில் வெடிமருந்துகளுடன் காணப்பட்ட 4 பேரை அமெரிக்க பொலிஸார் கைது செய்துள்ளனர். (க-4)

# அல்-காயிதா பயிற்சி முகாம் ஈரானில் கண்டுபிடிப்பு

## அமெரிக்கப் புலனாய்வு அறிக்கை

(வாஷிங்டன்)

ஈரானின் கிழக்குப் பகுதியில் அல்-காயிதா பயிற்சி முகாமொன்று அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஈரானில் ஆப்கானுடனான எல்லைப்பகுதியில் மேற்படி பயிற்சி முகாம் இருப்பதாக என். பீ. சி செய்தி ஸ்தாபனம் செய்தியை வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானிலுள்ள அல்-காயிதா பயிற்சி முகாம் போலவே அவை தோற்றமளிப்பதாகவும் தெரிகின்றது.

இவ்வாறான அல்-காயிதா பயிற்சி முகாமொன்று இருப்பது குறித்து ஈரான் அரசு அறிந்துள்ளதா என்ற விடயம் தெரியாதாயினும், ஈரானிய இராணுவம் மற்றும் புலனாய்வுப் பிரிவினரும் இவ்விடயம் குறித்து அறிந்திருக்கின்றனர் என்றும்,

அல்-காயிதா தலைவர்கள் இருவருடன் அதன் அங்கத்தவர்கள் ஈரானில் அடைக்கலம் புகுந்ததாக வாஷிங்டன் போஷ்ட் முன்னதாக அறிவித்தது. ஆனால் ஈரான்மறுப்புத் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது.

எனினும்ஈரான் மீதுஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை அமெரிக்க தொடர்ந்தும் சுமத்தி வருவதாக ஈரானிய வெளியுறவு அமைச்சர்குற்றஞ்சாட்டியுள்ளார். (சு 04)

# பங்களாதேஷில் கைக்குண்டுத்தாக்குதலில் 25 பேர் படுகாயமடைந்தனர்

(டாக்கா)

பங்களாதேஷிலுள்ள சந்தைக்கட்டடமொன்றின் மீது இனந் தெரியாத நபர்கள் மேற் கொண்ட கைக்குண்டு தாக்குதலில் 25 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தலைநகர் டாக்காவில் இருந்து 185 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சுபைகிரா நகரிலுள்ள சந்தைக்கட்டடத்தின் மீதே இந்தக் கைக்குண்டு வீச்சு நடைபெற்றுள்ளது.

இக் குண்டுத் தாக்குதல் நடந்த வேளை சந்தையில் மக்கள் கூடியிருந்தனர் என்றும் இக் குண்டு உள்ளூரில் தயாரிக்கப்பட்டது என்றும் 2, 3 குண்டுகளே வீசப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சு-4)

# காவிரி நீர் பிரச்சினைக்கு சுமுகமான முறையில் தீர்வு

(கர்நாடகம்)

காவிரி நீர் பிரச்சினைக்கு நீதிமன்றத்தை அணுகாமல் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண முன்வரவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிற்கு கர்நாடக முதலமைச்சர் கிருஷ்ணா அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை, காவிரி நீர் கண்காணிப்புக் குழுவினர் மேட்டூர் அணையைப்பார்வையிட்டதன் பின்னரே நீர் இருக்கும் நிலைவரம் குறித்து அறிக்கையொன்று சமர்ப்பிக்க முடியுமென்று உயர் நீதிமன்றத்திற்கு மத்திய அரசு கூறியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-04)

# தேவைக்கு அதிகமாகஉள்ள அதிபர், ஆசிரியர்களை இடம்மாற்றநடவடிக்கை

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் தேவைக்கு மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களையும் அதிபர்களையும் உடனடியாக இடமாற்றம் செய்ய கல்வி, மனிதவள கலாசார அமைச்சின் தேசிய பாடசாலைப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை தேசிய பாடசாலைகள் பிரிவின் பணிப்பாளர் பீ.எச்.பீ. கீனகே சகலதேசிய பாடசாலை அதிபர்களுக்கும், மாகாணக்கல்விப்பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

தேசிய பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள அதிபர், ஆசிரியர்களை உடனடியாக இடமாற்றம் செய்யும்படி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அறிவித்ததையடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-03)

# விடுதலையான இராணுவத்தினருக்கு பதவி உயர்வு வழங்குவது குறித்து ஆராய்வு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் விடுதலையான 7 இராணுவ வீரர்களுக்கும் பதவி உயர்வு வழங்குவது குறித்து ஆராயப்பட்டு வருவதாக இராணுவவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்ல இது குறித்து தெரிவிக்கையில், இவர்களுக்கு பதவி உயர்வு வழங்குவது குறித்து அவர்கள் கடமையாற்றிய பிரிவுகளிலிருந்து சிபார்சுகளை எதிர்பார்த்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் விடுதலையான 6 இராணுவத்தினருக்கு இரு மாதச்சமபளக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் இவர்களது விடுதலைக் காலம் முடிவுற்றதும் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார். (க-08)

# ஆசிரியர் சம்பள நிலுவை வழங்கப்படுகிறது

(கொழும்பு)

சேவையின் போது பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொண்ட வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களிற்கான சம்பள நிலுவை கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 10 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு கல்விப்பணிப்பாளர் ஐ எம் இஸதீன் தெரிவித்துள்ளார். இலங்கை ஆசிரியர் சேவையின் பதவி உயர்களைப் பெற்றுக் கொண்டவர்களிற்கான சம்பள அதிகரிப்பு நிலுவையின் 40 சதவீதம் கடந்த யூன்மாதம் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையே தற்போது வழங்கப்படுகின்றது. (க-10)

## சர்வதேச சிறுவர் மாநாடு

# பண்டத்தரிப்பில் கோலாகல ஆரம்பம் பல்லினத்தவர்களும் பங்கு பற்றினர்

(தென்மராட்சி)

கொழும்பு மட்டக்களப்பு, மன்னார், மற்றும் யாழ்ப்பாணம் கத்தோலிக்க மறை மாவட்டங்களைச் சேர்ந்த 150 க்கு மேற்பட்ட சிறுவர்கள் பங்கு கொண்டசர்வதேச சிறுவர் தினமாநாடு பண்டத்தரிப்பிலுள்ள தியான இல்லத்தில் கடந்த சனிக்கிழமை முதல் ஆரம்பமானது.

கரித்தாஸ் நிறுவனத்தின் இலங்கைக் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இம் மாநாட்டில் பல இன, மத, மொழிகளைக் கொண்ட சிறுவர்கள பங்கு கொண்டு புரிந்துணர்வு, ஒத்துழைப்பு சகோதரத்துவம் எனும் தொனிப் பொருளில் சமாதான சகவாழ்வை அர்த்தம் கொண்டதாக்கும் வகையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிகழ்வின் ஆரம்ப வைபவத்தின் போது யாழ். மறை மாவட்டத்தின் ஆயர்மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் யாழ். நாகவிகாரையின் பிரதம குருவண ஞானானந்ததேரர் யாழ். முஸ்லிம் பள்ளி வாசலைச் சேர்ந்த மௌலவிமுகைதீன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகப் பங்கு கொண்டிருந்தனர்.

அங்கு இடம் பெற்ற ஆரம்ப நிகழ்வில்யாழ். ஆயர்தோமஸ் சௌந்தரநாயகம்உரையாற்றுகையில்,

யுத்தத்தினால் காயப்பட்ட பூமியாக இந்த நாடு மாறிவிட்டது. அந்தக் காயங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள் அவற்றின் தன்மைகளை உணர்ந்திருப்பீர்கள். இதனால் இங்கு விதவைகள் வலதுகுறைந்தோர் அனாதைகள் உள நோயாளர்கள் போன்றவர்களை பரிசாக எமக்கு விட்டுச் சென்றுள்ளது இந்தக்கொடிய யுத்தம்,

இன்று இங்கு இடம்பெறுகின்ற நிகழ்வுகளில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை நடை முறைப்படுத்தும் பணியில் சிறுவர்களாகிய நீங்கள் தான் ஈடுபடப்போகின்றீர்கள் யுத்தத்தினால் அழிக்கப்பட்ட பூமியைக் கட்டியெழுப்ப வேண்டியவர்கள்நீங்கள்தான்.

நாட்டில்சமாதானத்தினைக் கட்டியெழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும் உங்களுக்கே உரியதாகும். என்றார்.

யாழ் நாகவிகாரையின் பிரதம குருவானவண. ஞானாந்த தேரர் அங்கு உரையாற்றும் போது,

நாட்டில் சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும்கட்டியெழுப்புகின்ற தூயபணியில் சிறுவர்கள் பங்கு கொள்வது நல்ல அடையாளமாகும். சிறுவர்கள் தான் எமது நாட்டின் செல்வங்கள் சர்வதேச சிறுவர் தின மாநாட்டில் நாட்டின்பல பாகங்களிலும் இருந்துசிறுவர்கள் பங்கு கொண்டு தொடர் பாடல்களை விருத்தி செய்து உறவுகளை வளர்ப்பதற்கு இத்திட்டம் நல்லதொரு களமாக அமைந்துள்ளமை மிகவும்மெச்சக்கூடியதாகும் என்றார்.

யாழ். பள்ளிவாசலைச் சேர்ந்த மௌலவி முகைதீன் தனது உரையில்,

நாட்டிலுள்ள சகல மதங்களுக்கும் சகலவிதமான உரிமைகளும் கிடைக்க வேண்டும் சமாதானம் மக்களின் உரிமையாகும் நாட்டில் இன்று துளிர்விட்டுள்ள சமாதான காலத்தினைப்பயன் கொண்டதாக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும். இப்பணியில் சிறுவர்களின் பங்கு அளப்பரியானதாகும் எனக் கூறினார்.

கரித்தாஸ் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர்நியூட்டன் பெர்னாண்டோவின் நெறிப்படுத்தலில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் இடம் பெற்றன.

இதில் பங்கு கொண்ட சிறுவர்கள் தியானம் கருத்துப்பரிமாற்றல், உறவுகளை மேம்படுத்தல் திறமைகளைவெளிப்படுத்தல் போன்றவற்றில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணம் கியூடெக் நிறுவனத்தின்பணிப்பாளர் வண. பிதா சீ.ஜீ. ஜெயக்குமார் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

பயனில் சொல்பாராட்டு
வானை மகன்எனல்
மக்கட் பதடியெனல்

குறள்

## வலம்புரி

### கைதிகள்

#### உண்ணாவிரதம்

களுத்துறைக் கைதிகள் தம்மை விடுதலை செய்யத் தவறின் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாந் திகதி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்

தம்மை விடுதலை செய்யுமாறு கோரி பல தடவைகள் களுத்துறைக் கைதிகள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

'கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம்' என்ற செய்தி வெளியானதும் அரசியல் வாதிகள் கைதிகளைச் சென்று பார்வையிடுவர். அவர்களோடு உரையாடுவர். உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறும் தாம் அரசாங்கத்துடன் பேசி உங்களின் விடுதலைக்கு உதவுவதாகவும் வாக்குறுதி அளிப்பர். இதனை நம்பிக் கொள்ளும் கைதிகள் தமது உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ளுவர்.

சிறைக்குச் சென்ற அரசியல்வாதியே நீராகாரம் கொடுத்து உண்ணா நோன்பை நிறைவுசெய்து வைப்பார். அம்மட்டில் அவரின் புகைப்படங்கள் பேட்டிகள் எனப் பல வடிவங்களில் பத்திரிகைகள் பிரசுரிக்கும். அப்பாடா! கொஞ்ச நாளைக்கு இவ்வளவு விளம்பரமும் போதும்என்றவாறு அந்த அரசியல்வாதி தன்னுடைய வேலையைத் தொடங்கி விடுவார்.

கைதிகளுக்குக்கொடுத்த வாக்குறுதியையோ அல்லது அது குறித்து அரசாங்கத்துடன்பேசியதோ கிடையாது. விடுதலை கிடைக்குமென நம்பியிருந்த கைதிகள் ஏமாற்றமடைவதுதான் மிச்சம்.

இந்நிலையில் மீண்டும் களுத்துறைக் கைதிகள் உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர். தம்மை உடனடியாக விடுதலை செய்யக்கோரி எதிர்வரும் ஒக்டோபர் முதலாந்திகதி சாகும் வரையிலான உண்ணா [illegible]ன்பை ஆரம்பிக்க[illegible]ள கைதிகள் தமது உண்ணாவிரதத்திற்கு முன்னதாக தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே கைதிகளின் அறிவித்தலை அரசு கவனத்தில் கொண்டு அவர்களை விடுதலை செய்ய முன்வரவேண்டும். இல்லையேல் விபரீதமான முடிவுகள் ஏற்படவும் அது சமாதானத்தைப் பாதிக்கவும் வாய்ப்புகள் உருவாகும்.

# நாட்டு வழக்கில் பேசப்படும் கொச்சைத் தமிழ்

# ஏட்டுத் தமிழில் சேர்ந்து இழிவை ஏற்படுத்துகிறது

**டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை**

பச்சைக் குழந்தைகள் பேசும் பொழுதும், பாமர மக்கள் பேசும் பொழுதும் கொச்சை மொழிகளைக் கேட்கலாம். பாமர மக்கள் பேசுந் தமிழில் பொருளற்ற அடுக்குச் சொற்கள் மிகுந்திருக்கும் 'பல்லு கில்லு தேய்ச்சாச்சா? காப்கீப்பி சாப்பிட்டாச்சா? வீடுகீடு கிடைக்குமா? மழை கிழை உண்டா? ''என இவ்வாறு வரும் அடுக்குச் சொற்கள் பலப்பல இவற்றில் முதல் சொல்லுக்குப் பொருள் உண்டு அடுத்து எதுகையாக வரும் சொல்லுக்குப் பொருளில்லை இப்படி வெற்று எதுகையில் வரும் சொற்கள் ககரவர்க்கத்தில் தொடங்கக் காணலாம்.

இன்னொரு வகையான அடுக்குப் பேச்சும் தமிழிலே உண்டு. வம்பு தும்புக்குப் போகாதே, தக்குப்புக்கின்னு நடக்காதே, தண்டா மூண்டா பண்ணாதே, காச்சுப் பீச்சின்னு கத்தாதே- இவை போன்ற அடுக்குச் சொற்களிலும் முதற் சொல்லல அடுத்துவரும்சொல்லுக்குப் பொருள் இல்லை ஆயினும் தொடர்ந்து வரும் சொல்ல ககரவக்கத்திலேதான் தொடங்க வேண்டும் என்ற கட்டுப்பாடில்லை. இத்தன்மை வாய்ந்த அடுக்கு மொழிகள் மெல்ல மெல்ல இக்காலப் பாட்டிலும் உரையிலும் ஏறிவிட்டன. வாட்டசாட்டமாய், திட்டவட்டமாய், கொஞ்சநஞ்சம், பாக்கிசாக்கி, சாலமாலம் முதலிய சொல்லடுக்குகளை நவீன நூல்களிற் காணலாம்.

## எதுகைப் பேச்சில் எழுந்த மோகம்

இவற்றைப் பார்க்கும் போது எதுகைப் பேச்சில் பாமர மக்களுக்கு உள்ள மோகம் நன்றாகத் தெரிகின்றது. எதுகையும், மோனையும் பாட்டுக்குத் தான் அழகு என்பதில்லை. பேச்சுக்கும் அவை நன்று என்று பொது மக்கள் கருதுகின்றார்கள். அதனாலன்றோ எதுகை மோனை என்பதை 'எகனை மொகனை' என்று ஆக்கினார்கள்? மோனை என்ற சொல்லோடு இசையும் வண்ணம் எதுகை என்னும் இலக்கியப் பதத்தை 'எகனை' என்று ஆக்கிவிட்டார்களே!

இவ்வாறு எதுகை நயத்திற்காக மாற்றப்பட்ட மற்றொரு சொல ''நன்மை தின்மை'' என்பது நன்மைக்கு மாறானது தீமை என்று இலக்கியத் தமிழ் கூறும். ஆயினும் நன்மை, தீமை என்று சொல்லும் பொழுது எதுகைநயம் இல்லையல்லவா? அதற்காகத் தீமை என்பதைத் தின்மை என்றாக்கி நன்மை தின்மை என்று நாடோடித் தமிழில் வழங்கலாயினர். நாளடைவில் நன்மை தின்மை இலக்கியத் தமிழிலும் இடம்பெற்று விட்டது. கவியரசர் என்று போற்றப்படும் கம்பரே அதை எடுத்தாண்டுவிட்டார் என்பர்.

'நன்மையும் செல்வமும்
நாளும் நல்குமே
தின்மையும் பாவமும்
சிதைந்து தேயுமே'

என்ற பாட்டில் நன்மையும் தின்மையும் எதுகையில் அமைந்து அழகு செய்கின்றன.

## போலித் தன்மை நீங்குதல்

கொச்சைத் தமிழில் பல வேறு தொழில்களுக்கும் உரிய சொற்கள் கலந்திருக்கும். சேலை துணிகளுக்குச் சாயம் ஏற்றுதல் தமிழ் நாட்டுப் பழமையான தொழில். சாயம் ஏற்றுபவனுக்குச் சாயக்காரன் என்பது பெயர், சாயத்தில் கெட்டியானதும் உண்டு. மட்டமானதும் உண்டு. கெட்டிச் சாயம் சலவைக்கு நிற்கும், மட்டச்சாயம் ஒரு சலவையில் கரைந்து போகும், இதிலிருந்து 'சாயம் வெளுத்துப் போச்சு' என்ற வசனம் எழுந்தது. ஒருவனுடைய போலித்தன்மை நீங்கி உண்மை துலங்கும் போது அவன் சாயம் வெளுத்துப் போச்சு என்பார்கள். இதைப் போலவே கொச்சைத் தமிழில்வழங்கும்மற்றொருவாசகம் 'காது குத்துதல்'என்பது. காது குத்துதல் தட்டார் தொழில், காதிலே கடுக்கன், தோடு முதலிய நகைகளை அணிவதற்காக இளமையில் காது குத்தும் வழக்கம் இந்நாட்டில் உண்டு. காது நகையில் எவ்வளவுதான் ஆசையிருப்பினும காதைக் குத்தும் பொழுது நோகத்தான் செய்யும்! கூர்மையுள்ள கருவியைக் கையிலே தாங்கி! காது குத்தப் போகிறேன என்று சொல்லிக் கொண்டு தட்டார் வருவாராயின் குழந்தைகள் காதைப் பொத்திக்கொண்டு கதறி அழத்தொடங்கிவிடும். இதற்காகக் காது குத்த வரும் தட்டார்கள் கைக்குள்ளே கருவியை மறைத்து வைத்துக் கொண்டு. காதைப் பார்ப்பவர்கள்போல நெருங்கிவந்து, வெடுக்கென்று குத்திவிடுவார்கள். இதிலிருந்து காது குத்துதல் என்ற பதத்திற்கு ஏமாற்றுதல் அல்லது வஞ்சித்தல் என்ற பொருள் வந்து விட்டது. இப்படியே காக்காய் பிடித்தால் குல்லாப்போடுதல், கம்பி நீட்டுதல் முதலிய சொற்களும் கொச்சைத்தமிழில்வழங்கக் காணலாம்.

## காலாடிப்பேட்டை

சென்னையில் கொச்சைத் தமிழ்வழக்குஅதிகமாக உண்டு 'காலாடி, கில்லாடி, லம்பாடி' முதலிய சொற்களை அடிக்கடி கேட்கலாம். காலாடிஎன்பது சோம்பேறியைக்குறிக்கும், சோதா என்றும் அப்பேர்வழியைச்சொல்வதுண்டு. சென்னைக்கு அருகேயுள்ள திருவொற்றியூரில் காலாடிப் பேட்டைஎன்றபகுதியொன்று உள்ளது. காலாடிகளுக்கும் அவ்வூருக்கும்பெயர்ப்பொருத்தத்தைத்தவிரவேறு எவ்விதப் பொருத்தமும் இருப்பதாகத் தெரியவில்லை, நெசவுத் தொழில் செய்யும் மக்களே பெரும்பாலும் அப்பேட்டையில் வாழ்கின்றார்கள், அப்படியானால் காலாடிப் பேட்டைஎன்றபெயர் எப்படி அதற்கு வந்தது?என்றால், அது ஒருவிந்தையானசெய்தி. சென்னைத் துரைத்தளத்தில் காலாட் என்ற ஆங்கிலேயன் மூன்று ஆண்டுகள் கவர்னராய்இருந்தான், தன் பெயரை நிலை நாட்டுவதில் அவனுக்குப் பேராசை. திருவொற்றியூரில் புதிதாக ஒரு பேட்டையை உண்டாக்கி, 'காலெட் பேட்டை என்று அதற்குப் பெயர் கொடுத்தான். 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது எனபது போல 'காலெட் பேட்டை, காலாடிப் பேட்டையாய் விட்டது.

ஏட்டுத்தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கு எத்தனையோ வகையில் வேறுபாடு உண்டு. அவற்றுள் ஒன்றைப் பார்ப்போம், பொருளுடையவனைச் செல்வன் என்பது ஏட்டுத் தமிழ் பணக்காரன் என்பது பேச்சுத் தமிழ், இரவலன் என்பது ஏட்டுத்தமிழ் பிச்சைக்காரன என்பது பேச்சுத்தமிழ், இவ்வாறு பல சொற்களில், காரன் என்பது ஆண்பாற் பெயர் விகுதியாகவும், காரி என்பது பெண்பாற் பெயர் விகுதியாகவும் வழங்கக்காணலாம். வீட்டுக்காரன், வேலைக்காரன்தோட்டக்காரன், சமையற்காரன் இவை ஆண்பாற் பெயர்கள் வீட்டுக்காரி, வேலைக்காரி, சமையற்காரி, தோட்டக்காரி இவை பெண்பாற் பெயர்கள். ஆங்கில வாடை அதிகமாக வீசும் இடங்களில், வேலைக்கார், தோட்டக்கார் சமையற்கார்என்றுஈறுகெட்டு வழங்குதலும் உண்டு இதற்கும மேலாகக் கொச்சைத் தமிழ்சென்னையில்கொழுந்து விட்டுவளர்ந்திருக்கிறது. அண்ணன், தம்பி, அப்பன், மாமன் இவர்களை முறையே அண்ணங்காரன், தம்பிக்காரன், அப்பங்காரன், மாமங்காரன என்று கூறுவதைக் கொச்சைத்தமிழில் கேட்கலாம். அப்படியே அக்காளை அக்காக்காரி, என்றும் அம்மையை அம்மைக்காரி என்றும், மாமியை மாமிக்காரி, என்றும் வழங்குவர்.

## எழுத்துக்கள் முறைபிறழ்தல்

நல்லசில சொற்களில்வேண்டாத எழுத்துக்கள் புகுந்து விகாரப்படுத்தும் பொழுது அவை கொச்சைத்தமிழாய் விடும். எண்பது என்பது ஒரு நல்ல சொல். அதை எண்பளது என்று விகாரப்படுத்துவர் தஞ்சை நாட்டார். இப்படியே சேவை, கோவை, தேவை என்னும் சொற்கள் முறையே 'சேர்வை, கோர்வை தேர்வை' என்று கொச்சைத் தமிழில் வழங்குகின்றன. தமிழின் சிறப்பெழுத்து என்று பாராட்டப்படுகின்றழகரம் கொச்சைத்தமிழில் மெத்தச் சிதையும். பாமர மக்கள் நாவில் 'ழகரம்' திட்டவட்டமாக வருவதில்லை திருவிழாவைத் திருவிஷா என்பர்சோழ நாட்டார். சென்னையில் பழம் பயமாகும். கழுதை கயிதையாகும். கிழவி கேவியாவாள். கேழ்வரகு கேவரகாகிக் கூவரகாகும்.

இன்னும் கொச்சைப் பேச்சிலேஎழுத்துக்கள் முறை பிறழ்ந்துஒலிக்கும். மதுரையை 'மருதை' என்றும் குதிரையை குருதை என்றும் கொச்சைத் தமிழர் கூறுவர். அபராதம் என்பதை அவதாரம் என்பர். காஷாயம் என்ற வட சொல் காயாசம் ஆகும்.

ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பது போல ஒரு பொருளைக் குறிப்பதற்கு இரு சொற்கள் கொச்சைத்தமிழில்வழங்கும். கூறைப்புடைவை என்பதுஅப்படிப்பட்ட சொல். தமிழ் நாடெங்கும் கூறையென்ற முன்னாளில் வழங்கிற்று. புடைவை என்பது அதன் பொருள். புடைவை நெய்யும் நாட்டிற்கு கூறை நாடு என்ற பெயர அமைந்தது அதுதான் மயூரத்துக்கு அருகேயுள்ள கொரநாடு. நாளடைவில் கூறை என்பது அரும்பதமாய் விட்டது. அதன் பொருள் மழுங்கிவிட்டது; அதனால் கூறைப்புடைவை'என்று இப்போது வழங்குகின்றது. பழுதை என்பது ஒரு பழமையான சொல். கயிறு என்பது அதன் பொருள. இப்போது இரண்டையும் சேர்த்துப் 'பழுதைக் கயிறு' என்று கூறுகிறார்கள்.

## இரு மொழி இணைப்பு

இவ்வாறு இரு வேறு மொழிச் சொற்களைஇணைத்துப் பேசும் முறையும் கொச்சைத் தமிழில் உண்டு, ''கேட்டு வாசல், சாப்புக்கடை முதலிய வார்த்தைகளில் ஆங்கிலமும் தமிழும் இணைந்து வருகின்றன. 'நல்லவருக்கு அடையாளம் சொல்லாமல் பறையாமல் போவது'' என்று தென்நாட்டிலே ஒரு பழமொழியுண்டு, சொலலாமல் பறையாமல்' என்பதில், சொல்லாமல் என்பது தமிழ் பறையாமல் என்பது மலையாளம். ஆண் குழந்தையை, ஆம்பளப் பிள்ளை என்றும் பெண் குழந்தையைப் 'பொம்பளப் பிள்ளை' என்றும், கொச்சைத் தமிழ் கூறும். ஆண் பிள்ளை என்ற சொல்லில் பிள்ளை என்பது குழந்தைப் பருவத்தைக் குறிப்பதாகும். அப்படியே பெண் பிள்ளை என்ற சொல்லிலும் பிள்ளை என்பது குழந்தை நிலையைக் குறிக்கும், நாளடைவில் ஆண்பிள்ளையின் சிதைவாகிய ஆம்பளை என்பதும், பெண்பிள்ளையின் சிதைவாகிய பொம்பளை என்பதும் பருவத்தைக் குறியாது, பொதுவாக ஆண் வர்க்கத்தையும், பெண் வர்க்கத்தையும் குறிப்பனவாயின. ஆகவே, குழந்தைகளைக் குறிப்பதற்கு மேலும் பிள்ளை என்ற சொல்

(3 ம் பக்கம்பார்க்க)

### தினசரி தியானம்

### பொறுமை

இப்புதுமையான உலகில் நேர்மையானவர்கள் துன்புறுகிறார்கள். பொல்லாதவர்கள் செழிப்படைகிறார்கள். ஆகவே, இவ்வுலகம் தலைகீழ் விகிதத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணருங்கள். மனிதன் இயற்கையாகவே அவசரப்படுபவன். உடனடியான பலன்களை எதிர்பார்க்கிறவன். ஆன்மீக இராச்சியத்தில் பலன்கள் உடனடியாக வர மாட்டா. பெரும்பாலும் அவைவெளியில் தெரிய மாட்டா. பொறுத்திருந்து ஆன்மீகப் பலன்களைப் பெறுங்கள்.

சுவாமி சிவானந்தர்

# இஸ்ரேலிடம் கொள்வனவு செய்த இரண்டு யுத்தக் கப்பல்களும் பழுது!

## அரசிற்குப் பெரும் நட்டம

(கொழும்பு)

சிறீலங்காக் கடற்படைக்கென சுமார் 60கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட கடற் படைக்கப்பல்கள் இரண்டு பயன் படுத்தமுடியாத நிலையில் உள் ளதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடற்படையின் 50வது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு 2000 ஆண்டு கடற்படைத்தளபதி யாக இருந்து சுசில் திரேசவினால் இஸ்ரேலிடமிருந்து இவ்விரு கப் பல்களும் கொள்வனவு செய்யப் பட்டன.

நான்கு மிந்திர, பூர்ணிஹம ஆகிய இவ்விரு கப்பல்களும் கொள்வனவு செய்யப்படும் போது மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்ததே இதற்கு அடிப்படைக் காரணம் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலிடம் இருந்து கொள் வனவு செய்யப்பட்ட இந்த இரண்டு கப்பல்களும் ஏவுகணை பொருத்திய கப்பல்களாகும்.

சுமார் 60கோடி ரூபா செல வில் கொள்வனவு செய்யப்பட்ட இக்கப்பல்கள் கொள்வனவு செய்யப்படும் போதே இருபது வருடங்கள் பழைமை வாய்ந்த தாகும்.

தற்போது தெகிவளைக் கடற் பிரதேசத்தில் இக்கப்பல்கள் நங் கூரமிடப்பட்டுள்ளன. (ந-8)

# திருமலையில் கைது செய்த 7 படையினை புலிகள் விடுதலை செய்ய வேண்டும்

## டக்ளஸ் எம்.பி கோரிக்கை

(கொழும்பு)

திருகோணமலை வில்கம் விகாரையில் கைது செய்யப்பட் டுள்ள 7 படையினரையும் விடுவி ப்பதற்கு புலிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈ.பி,டி.பி கட்சியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா வேண்டு கோள் விடுத்துள்ளார்.

சமாதான சூழல் பலமடைந்து வரும் தற்போதைய நிலையில் சமாதானச் சூழலைப் பாதிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்த மீறல் சம்பவங்கள் அங்காங்கே இடம்பெறுவது கவலைக்குரிய விடயம்.

திருகோணமலையில் கைது செய்யப்பட்ட படையினரை விடு விப்பது குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் முன் வைத்த கருத்துக்களை விடுத லைப்புலிகள் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (த)

# ஐ.சி.சி கிரிக்கெற் போட்டி மழையால் ஒத்திவைப்பு

(கொழும்பு)

கொழும்பில் நடைபெற்ற ஐ.சி.சி மினி உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணிக்கும் இந்திய அணிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டி மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்றைய போட்டியில் முத லில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களின் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 244 ஓட்ட ங்களைப் பெற்றது. 245 ஓட்டங் களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி இரண்டு ஓவர்களின் முடி வில் 14 ஓட்டங்களை பெற்ற நிலையில் மழை காரணமாக ஆட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. இவ் ஆட்டம் இன்று பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகும்.

இலங்கை அணியில் சனத் ஜெயசூரியா 74 ஓட்டங்களையும் சங்கக்கார 54 ஓட்டங்களையும் அத்தப்பத்து 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய அணியின் பந்து வீச் சாளர்களான ஹர்பஜன்சிங் 3 விக கெட்டுக்களையும், அக்காக்கார், டெண்டுல்கர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ந-5)

### மோட்டார்...

சென்ற மற்றைய கடற்படைச் சிப் பாய் காயங்கள் எதுவும் இன்றி அதிர்ஷ்டவசமாகத் தப்பிக் கொ ணடார்.

மோட்டார் சயிக்கிள்கள் இர ண்டும் பலத்த சேதமடைந்துள் ளன. உயிரிழந்த கடற்படைச்சிப் பாயின் சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்க ப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருகி ன்றனர். (த-12)

### சமாதானத்தை...

படைத்துறையில் பாரிய பின் னடைவுகள் ஏற்பட்டுள்ளது.

இப்பின்னடைவுகளை அடுத்து படைத்துறையில் மாற்றங்களை ஏற்படுத்தி படையினர் மத்தியில் கட்டுக்கோப்பை வளர்க்கும் வகை யில் நடவடிக்கை இடம்பெறவுள் ளன.

இராணுவத் துறையில் செய் யப்படவிருக்கும் மாற்றங்கள் தற் போதைய சமாதான முயற்சியை

### வவுனியா...

வவுனியாவில் நேற்று முன் தினம் முழுநாளும் புயல் காற்று டன் கூடிய பலத்த மழை பெய்த தினால் தொலைபேசி இணைப்பு க்கள் துண்டிக்கப்பட்டுள்ளதாக ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

இதேவேளை வவுனியாவிற் கான மின்னிணைப்புக்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் கடந்த இரண்டு நாட்களாக வவுனியா நகரம் இருளில் மூழ்கி யுள்ளது. (ம)

### நீர்மின்...

விக்கும் வாசகங்கள் கொண்ட சுலோக அட்டைகளையும் பதாதை களையும் தாங்கிய வண்ணம் ஊர்வலமாகச் சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங் கைத் தொழிலாளர் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகா ணசபை உறுப்பினர்கள், உள்ளூ ராட்சி சபை உறுப்பினரகள் கல ந்து கொண்டனர். (ம)

## மதுவரித் திணைக்களம் வெற்றி பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வி யியல் கல்லூரி நடத்திய உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலா சாலையை எதிர்த்து விளையாடிய யாழ் மதுவரித் திணைக்களம் சம்பியனானது. (ந)

### கமாண்டர்...

யப்பட்டுள்ளன.

தேசிய தற்பாதுகாப்புச் சபை பாதுகாப்பு அமைச்சர் தலைமை யில் வாரம் ஒரு தடவை கூடி இராணுவத்துறை சார் நடவடிக் கைகளை திட்டமிடும் கமாண்டர் என்று இப்போது அழைக்கப்படும் முறை கைவிடப்பட்டு இராணுவ அதிகாரிகள் தலைவர், கடற் படை அதிகாரிகள் தலைவர், விமா னப்படை அதிகாரிகள் தலைவர் என்ற பெயர்கள் அமுலுக்குக் கொண்டுவரப்படவுள்ளன.

மேற்படி சிபார்சுகள் ஆயுதப் படைகளின் பிரதம தளபதியான ஜனாதிபதியின் ஒத்துழைப்புடன் அங்கீகரிக் கப்பட்ட பின்னரே அமுல் செய்யப்பட முடியும். சீர்திருத்தக் குழு தனது அடுத்த கட்ட அறிக்கையை இவ்வாண்டு முடிவதற்கு முன் கையளிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த)

### நோர்வே...

ளையும் பிரதியமைச்சர் விடார் ஹெல்கீசன் சந்தித்துக் கலந்து ரையாடவுள்ளார்.

அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களையும், அதிகாரி களையும் சந்திக்கவிருக்கும் நோர்வேயின் பிரதி வெளிவிவ கார அமைச்சர் விடார் ஹெல்கீ சன் அடுத்து வரும் வாரங்களில் வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர்க ளையும் சந்திக்கவுள்ளார்.

இச் சந்திப்பின் போது அரசு-புலிகள் நிலைப்பாடு குறித்து இரு தரப்பினருடனும் சில முக்கிய விடயங்கள் தொடர்பாக மனம் விட் டுப் பேசவுள்ளதாக நோர்வேத் தூதுரக வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

இது இவ்வாறு இருக்க தாய் லாந்தில் இடம்பெற்ற முதற் கட்ட ப்பேச்சு வார்த்தைகள் தொடர்பா

# கொமாண்டர் போயாகொட மீண்டும் பிரதமருடன் சந்திப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதான முயற்சிகளில் பெரிதும் ஈடுபாடு காட்டி வருகின்றனர். அர சுக்கும் விடுதலைப்புலிகளுக் கும் இடையில் இடம்பெற்று வரும சமாதான முயற்சிகள் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையில் செயற்பட்டு வருகின்றார்கள். இவ்வாறு விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட கடற்படை அதி காரி கமாண்டர் அஜித்குமார போயாகொட பிரதமர் ரணில விக்கிரமசிங்காவிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளால் விடுவி க்கப்பட்ட கடற் படைக் கொமாண் டர் அஜித்குமார போயாகொட பிரதமர் ரணில் விககிரம சிங்கா வை நேற்று தனிப்பட்ட முறையில் சந்தித்து உரையாடினார்.

அச் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவிக்கையில்

சிறையில் இருந்த காலங்க ளில் விடுதலைப்புலிகளின் உயர் மட்டத் தலைவர்களை சந்திக்க முடியாது போனாலும் விடுத லைப்புலிகளின் அரசியல் துறை நிர்வாகப் பொறுப்பாளர் சுதா மற் றும் புலித்தேவன் ஆகியோரை சந்தித்து உரையாடும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர்களின் உரை யாடல்களில் சமாதானத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை வெளிப்பட்டது எனக் கூறிய அவர், முல்லைத்தீவு வைத்தியசாலையில் எந்த விதமான அடிப்படை வசதிகளும் இல்லை என்றும் இதனால் நோயாளர்கள் கஷ்டப்படுகின் றார்கள் என்றும் பிரதமரிடம் தெரிவித்தார். (ம)

# தென்னிலங்கை தூதுக்குழு தமிழ்செல்வனுடன் சந்திப்

(கிளிநொச்சி)

வறிய மக்களுக்காக உழைப் போர என்ற அமைப்பினர் தென் னிலங்கையிலிருந்து நேற்று வன் னிக்கு சென்று அங்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ் செல்வனை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

தென்னிலங்கையிலிருந்து வந்த இந்த அமைப்பினர்கள் நிர்கொழும்பு, சிலாபம், ஜாஎல, வத்தள்ள ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

சுமார் 40 பேர் அடங்கிய இத் தூதுக்குழுவினர் கிளிநொச்சி யிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் நடுவப் பணியகத் சு.ப. தமிழ்செல்வனை சந்தித் பேச்சு நடத்தியுள்ளனர்.

இச் சந்திப்பை அடுத் தமிழழ விடுதலைப்புலிகளி முக்கிய உறுப்பினர்களி ஒருவரான வே.பாலகுமா மற்றும் அருட்திரு என்.எஸ். ணரத்தினம் அடிகளார், க கழகப் பொறுப்பாளர் குமரன் ஆகியோரையும் த்துப் பேச்சுவார்த்தை தியுள்ளனர். பேச்சுவார்த் களை அடுத்து இக் குழுவ ஆனையிறவை பார்வையி பின்பு மடுத் தேவாலயத்து செல்லவுள்ளனர்.

COOL LAMINATING

ப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-12)

## சமாதானத்தை...

படைத்துறையில் பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளது.

இப்பின்னடைவுகளை அடுத்து படைத்துறையில் மாற்றங்களை ஏற்படுத்தி படையினர் மத்தியில் கட்டுக்கோப்பை வளர்க்கும் வகையில் நடவடிக்கை இடம்பெறவுள்ளன.

இராணுவத் துறையில் செய்யப்படவிருக்கும் மாற்றங்கள் தற்போதைய சமாதான முயற்சியை வெவ்வேறு வழிகளிலும் பாதிகாதவாறு பார்த்துக் கொள்வதற்காகவே இம்மாற்றங்கள் இடம்பெறவுள்ளதாக இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)

## புதிய...

விருப்பதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெற்றுள்ள புதிய மாணவர்கள் நவம்பர் மாதம் 15ந் திகதி சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

(ம)

நகரம் இருளில் மூழ்கி யுள்ளது.

(ம)

## நீர்மின்...

விக்கும் வாசகங்கள் கொண்ட சுலோக அட்டைகளையும் பதாதைகளையும் தாங்கிய வண்ணம் ஊர்வலமாகச் சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளுராட்சி சபை உறுப்பினரகள் கலந்து கொண்டனர்.

(ம)

## ஜனாதிபதியுடன்...

விவகார ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் கருத்துத் தெரிவிக்கையில்:

19வது திருத்தச் சட்டமூலம் நாட்டைச் சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்லும் பல கட்சி ஆட்சி முறைக்குச் சாவு மணியாகவும் அது இருக்கும். நமது எம்.பிப் பதவிகளைக் காப்பாற்றுவதற்கு கட்சி மாறுவதையும், அதே வேளை அந்த எம்.பிக்களின் உறுப்புரிமைகளை அவர்கள் சார்ந்திருக்கும் கட்சியே ரத்துச் செய்யமுடியாதிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)


அன்பு மாணவர்களே!
உங்கள் வலம்புரியில் மிகவிரைவில் எதிர் பாருங்கள்.

பிரபல ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்ட க.பொ.த(சா/த) மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்.

மிக விரைவில்



# உடன் தேவை

பத்திரிகை விநியோகஸ்தர்கள் உடன் தேவை. மோட்டார் சைக்கிள் சொந்தமாக வைத்திருப்பவர்கள் மட்டும் நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர

வலம்புரி
சிவன்பண்ணை வீதி
15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.


நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் அடுத்து வரும் வாரங்களில் வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர்களையும் சந்திக்கவுள்ளார்.

இச் சந்திப்பின் போது அரசு-புலிகள் நிலைப்பாடு குறித்து இரு தரப்பினருடனும் சில முக்கிய விடயங்கள் தொடர்பாக மனம் விட்டுப் பேசவுள்ளதாக நோர்வேத் தூதுரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது இவ்வாறு இருக்க தாய்லாந்தில் இடம்பெற்ற முதற் கட்டப்பேச்சு வார்த்தைகள் தொடர்பாகவும் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆலோசனை நடத்துவதற்காக வன்னிக்கு வரும் மார்க்கம் குறித்து இதுவரை எந்தவிதமான முடிவுகளும் எடுக்கப்படாத நிலையில் பிரதி அமைச்சர் விடார் ஹெலகீசன் கொழும்புக்கு வரவுள்ளார்.

எது எவ்வாறாயினும் அடுத்த மாதம் 31ம் திகதி நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தைகளுக்குரிய முக்கிய விடயங்கள் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியிருப்பதால் அன்ரன் பாலசிங்கம் அடுத்து வரும் இருவாரங்களில் வன்னிக்கு வருவாரென்றும் சுயாதீனச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம)

# முல்லைக் கடலில் இருவர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் மீன் பிடித் தொழில் ஈடுபட்டிருந்த இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இளையதம்பி தணிகாசலம் (வயது 37), மாணிக்கம் விசுவலிங்கம் (வயது 65) ஆகிய் இருவருமே கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்களாவார். (ம)

னிலங்கையிலிருந்து நேற்று வன்னிக்கு சென்று அங்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

தென்னிலங்கையிலிருந்து வந்த இந்த அமைப்பினர்கள் நிர்கொழும்பு, சிலாபம், ஜாஎல, வத்தள்ள ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

சுமார் 40 பேர் அடங்கிய இத் தூதுக்குழுவினர் கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விடுதலைப்

இச் சந்திப்பை அடுத் தமிழழ விடுதலைப்புலிகளி முக்கிய உறுப்பினர்களி ஒருவரான வே.பாலகுமா மற்றும் அருட்திரு என்.எஸ். ணரத்தினம் அடிகளார், க கழகப் பொறுப்பாளர் குமரன் ஆகியோரையும் த்துப் பேச்சுவார்த்தை தியுள்ளனர். பேச்சுவார்த் களை அடுத்து இக் குழுவ ஆனையிறவை பார்வையி பின்பு மடுத் தேவாலயத்து செல்லவுள்ளனர்.


COOL LAMINATING

நினைவுமலர்க் கவர்கள் ரூபா 1.50 க்கு Laminating செய்து கொடுக்கப்படும்.

பிள்ளையார் அச்சகம்
A Graphic Arts Industry
நல்லூர்



அன்பு வாசகர்களே.

நாளை
வலம்புரியின்
வாரமலர்
சங்கு நாதம்

அரசியல்,
அறிவியல்,
ஆன்மீகம்
அதுவே உங்கள்
சங்குநாதம்
நாளை
செவ்வாய்க்கிழமை




தவறாது கேட்டு வாங்குங்கள்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.09.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள்-20 விலை:- 14.00

# சங்கு நாதம்


Sankunatham

06. ஒக்டோபர். 2002

சங்கு:- 03 வள்ளுவர் ஆண்டு 2033 தொலை பேசி:- 2223378 நாதம்:- 31

பக்கம்-02

அரசியல் அலசல்

பக்கம்-08

மௌனத்தின் தேடல்கள்

பக்கம்-11

மகளிர் உலகம்

பக்கம்-14

சிறுவர் அரங்கம்

பக்கம்-16

சினிமாச் சிதறல்

## அரசு - புலிகள் கைதிகள் பரிமாற்றம்

## காணாமல் போனோர் நிலை என்ன?




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் வாரமலர்

# அரசு - புலிகள் கைதிகள் பரிமாற்றம்

# காணாமல் போனோர் நிலை என்ன ?

புரிந்துணர்வு ஒப்பந்தம் அதனூடாக ஏற்பட்ட யுத்த நிறுத்தம் - பொருளாதாரத் தடை நீக்கம், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விடுதலைப்புலிகளின் அரசியல் பணி, ஏ-9 யாழ்- கண்டி வீதி திறப்பு, புலிகள் மீதான தடை நீக்கம், தாய்லாந்துச் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற பட்டியலில் கைதிகளின் பரிமாற்றமும் இடம்பெற்றுள்ளது.

கைதிகளின் பரிமாற்றம் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இரண்டாவது தடவையாக நடைபெற்றுள்ளது. அரசும் விடுதலைப்புலிகளும் கடந்த 28ஆம் திகதி செய்து கொண்ட கைதிகளின் பரிமாற்றத்தில்




எத்தனை பேர் விடுதலை செய்யப்பட்டார்கள் என்பது முக்கியமல்ல. அரசாங்கத்திற்கு எதிராகத் தாக்குதல் நடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலி உறுப்பினரகளும், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் அவர்களால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த இராணுவ வீரர்களுமே விடுதலை பெற்றுள்ளார்கள்.

அதாவது போர்க்களத்தில் களமாடிய இருசாரார் தமக்கிடையே போர்க் கைதிகளைப் பரிமாற்றம் செய்துள்ளனர். இந்நடவடிக்கையானது அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வையும இரு தரப்பும் சமாதானத்தில் உறுதி பூண்டுள்ளனர் என்பதையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

## முதலாவது கைதிகள் பரிமாற்றம்

விடுதலைப் போராட்ட வரலாற்றில் அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையே முதலாவது கைதிகள் பரிமாற்றம் 1986இல் நடைபெற்றது.


1986ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் தளபதி விக்ரரின் தலைமையில் மன்னார் அடம்பனில் இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இரண்டு இராணுவ வீரர்கள் உயிரோடு கைது செய்யப்பட்டனர். 13பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட 13இராணுவ வீரர்களின் சடலங்களும் விடுதலைப்புலி



களால் கைப்பற்றப்பட்டது. புலிகளால் கைப்பற்றப்பட்ட சடலங்கள் நல்லூர் வீதியில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாற்றில் இராணுவ வீரர்களை உயிரோடு பிடிப்பதும், அவர்களது சடலங்களைக் கைப்பற்றுவதும் 1986இல் இடம்பெற்ற மன்னார்த் தாக்குதலிலேயே புத்துருப் பெற்ற தெனலாம். விடுதலைப்புலிகளால் இரண்டு இராணுவ வீரர்கள் உயிரோடு கைது செய்யப்பட்ட சம்பவம் வடபுகுதியில் மட்டுமன்றி தென்னிலங்கையிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

1983ஆம் ஆண்டு யூலை மாதம் 23ஆம் திகதி திருநெல்வேலியில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலில் பலியான 13இராணுவ வீரர்களுக்காக ஓர் பெரும் இனக்கலவரம் ஏற்பட்டிருந்தது. இதனால் சர்வதேசத்தில் இலங்கைக்கு அவமானமும் ஏற்பட்டது. இத்தகைய சம்பவங்கள்



நடந்து மூன்று வருட காலத்திற்குள் விடுதலைப்புலிகள் அமைப்பு அதீத வளர்ச்சி கண்டு பெரும் தாக்குதல்களை நடத்தியதோடு, இரண்டு இராணுவ வீரர்களையும் அவர்களது முகாமிற்குள் வைத்து உயிரோடு கைது செய்ததுள்ளதெனில் அதன் பரபரப்பு தென்னிலங்கையில் எப்படியிருந்திருக்குமென்பதைக் கற்பனையில் கண்டுகொள்வது கடினமே.

## ஐ.தே.க. அரசுக்குப் பெருந் தலையிடி

இரண்டு இராணுவ வீரர்கள் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளார்கள் 13பேர் கொல்லப்பட்டுள்ளார்கள் என்ற செய்தி தென்னிலங்கை எங்கும் காட்டுத் தீ போல் பரவியதால் இராணுவத்தில் உள்ள ஒவ்வொருவரினது பெற்றோர்களும், உறவினர்களும் அரச நிர்வாக, இராணுவ அலுவலகங்களை நோக்கிப் படையெடுக்கலாயினர்.

கைது செய்யப்பட்டவர்கள் யார்? இறந்தவர்கள் யார்? என்பது அவர்களின் கேள்விகளாக இருந்தது. இதற்குப் பதிலளிப்பதும் படையெடுத்து வரும் உறவினர்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதும் அரசிற்குப் பெரும் தலையிடியாக இருந்தது.

## விஜய குமார ரணதுங்கா யாழ்ப்பாணம் வருகை

விடுதலைப்புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட இரண்டு இராணுவ வீரர்களையும் மீட்கும் முயற்சியில் சமாதானத்தில் நாட்டமுடையவராக இருந்த சிறிலங்கா மக்கள் கட்சித் தலைவரும் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கணவருமான காலஞ்சென்ற விஜய குமார ரணதுங்கா யாழ்ப்பாணம் வருகை தந்து அப்போது விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாணத் தளபதியாக இருந்த கேணல் கிட்டு (சதாசிவம் கிருஷ்ணகுமார்) வுடன் பேச்சுக்கள் நடத்தியிருந்தார். இராணுவ வீரர்கள் இருவரையும் விடுவிப்பதற்காக விஜயகுமார ரணதுங்கா யாழ்ப்பாணம் வருகை தந்தபோது அவரது பாரியாரும் தற்போது நாட்டின் ஜனாதிபதியாகவும் இருக்கின்ற திருமதி சந்திரிகா குமாரதுங்காவும் உடன் வந்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் நிபந்தனை

புலிகளால் அடம்பனில் வைத்துக் கைது செய்யப்பட்ட இரண்டு இராணவ வீரர்களையும் விடுதலை செய்வதற்காக புலிகளுடன் பேச்சு நடத்த யாழ்ப்பாணம் வந்திருந்த விஜய குமார ரணதுங்காவிடம் விடுதலைப் புலிகள் ஓர் நிபந்தனையை முன் வைத்தனர்.

அதாவது தம்மால் கைது செய்யப்பட்ட இராணுவ வீரர்கள் இருவரையும் விடுதலை செய்வதாக இருந்தால் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட தமது போராளிகளான அருணாவையும், நெல்சனையும் விடுதலை செய்யவேண்டும் என நிபந்தனை விதித்தனர்.

இச் செய்தியோடு கொழும்பு புறப்பட்ட குமாரதுங்கா அரசாங்கத்திடம் அதைத் தெரிவித்தார்.

இந் நிபந்தனைக்கு அரசு முதலில் மறுப்புத் தெரிவித்ததாயினும் இறுதியில் அப்போதைய நெருக்கடிகளை தவிர்க்கும் நோக்குடன் புலிகளின் நிபந்தனைக்கு அரசு சம்மதம் தெரிவித்தது.



யாழ். கோட்டை முன்னிலையில் கைதிகள் பரிமாற்றம்

புலிகள் விதித்த நிபந்தனைகளை அரசு ஏற்றுக்கொண்டதை அடுத்து கைதிகளின் பரிமாற்றம் யாழ்ப்பாணம் கோட்டைக்கு முன்பாக நடைபெற்றது. இதில் புலிகளின் சார்பில் கேணல் கிட்டுவும், ரஹீமும் கலந்து கொண்டனர். அரசின் சார்பில் யாழ் கோட்டை இராணுவத் தளபதியாக இருந்த கொத்தலாவலையும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதியமைச்சராக இருந்த வின்சன்ட் பெரேராவும் கலந்து கொண்டனர்.

இதன் போது புலிகளால் சிறைப்



பிடிக்கப்பட்ட இரண்டு இராணுவ வீரர்களும் விடுவிக்கப்பட பதிலுக்கு இராணுவத்தால் கைது செய்யப்பட்ட விடுதலைப்புலிப் போராளிகள் அருணாவும், நெல்சனும் விடுதலை செய்யப்பட்டனர்.

இக் கைதிகள் பரிமாற்றம் அன்று விடுதலைப்புலிகளின் பலத்தை நிரூபிப்பதாக இருந்தது. எனினும் அன்று இடம்பெற்ற கைதிகளின் பரிமாற்றம் யுத்த நிறுத்தத்தின் மத்தியிலோ அன்றி சமாதான முயற்சிகளின் முன்னெடுப்பிலோ நடைபெறவில்லை. மாறாக யுத்தத்தின் மத்தியில் நடைபெற்ற ஓர் கைதிகள் பரிமாற்றமாகவே அது அமைந்திருந்தது.

ஆனால் தற்போது நடைபெற்றுள்ள கைதிகள் பரிமாற்றம் முன்னையதை விட பன்மடங்கு வித்தியாசமானது. புரிந்துணர்வு ஒப்பந்தம அமுலில் இருக்கும் போது - சமாதானப் பேச்சுக்கள் நடக்கும் போது கைதிகள் பரிமாற்றம் நடந்திருப்பதால் அதன் முக்கியத்துவம் உயர்வுடையது.

## ஜனாதிபதியின் விதிப்பயன்

1986ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்த போது விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்ட இரண்டு இராணுவ வீரர்களை விடுதலை செய்வதற்காக தனது கணவர் விஜய குமாரதுங்காவுடன் யாழ்ப்பாணம் வந்தவர் சந்திரிகா குமாரதுங்கா.

எனினும் அவர் ஆட்சியில் இருந்த போது கைதிகளின் பரிமாற்றத்தை மேற்கொள்ளமுடியாமல் போனமை அவரின் விதிப்பயன் என்றே கூற வேண்டும். பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டனவாயினும் அவை அனைத்தும் கோவைகளில் குறிக்கப்பட்டு வெறும் அறிக்கை வடிவங்களில் இருந்தனவே ஒழிய அவற்றுக்கு செயல் வடிவம் கொடுக்கப்படவில்லை.

ஆனால் பிரதமர் ரணில் விக்கிரசிங்கா முக்கியமான விடயங்களைத் துணிந்து நடைமுறைப்படுத்தி வருவது இங்கு நோக்குதற்குரியது.

## கைதிகளின் விடுதலை தொடருமா ?

அரசும் விடுதலைப்புலிகளும் போர்க் கைதிகளை பரிமாறியுள்ளமை சமாதான முயற்சியின் ஓர் மைல் கல் என்பது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோவின் கணிப்பு. இங்கு யுத்தக் கைதிகளின் விடுதலை என்பது ஒன்றுக்கொன்று என்ற அடிப்படையில் நடைபெறவில்லை. அதாவது விடுதலைப் புலிகள் தம்மிடம் இருந்த 7இராணுவத்தினரை விடுதலை செய்ய, அரசு புலிகள் சமர்ப்பித்த பட்டியலில் இருந்து 13புலிகளை விடுதலை செய்துள்ளது. எனவே இங்கு விடுதலைப் புலிகள் பரிமாறிய 7பேருக்குச் சமமாக அரசும் 7பேரை விடுதலை செய்தது என்ற நிலைமை ஏற்படவில்லை.

எனவே கடந்த 28ஆம் திகதி அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையே நடைபெற்ற யுத்தக் கைதிகளின் பரிமாற்றம் ஓர் புரிந்துணர்வின் அடிப்படையில், சமாதானத்தை மையமாகக் கெண்டு நடைபெற்றது என்பதை உணரமுடியும்.

இதேவேளை சிறைகளில் உள்ள ஏனைய கைதிகளையும் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உறுதிபடத் தெரிவித்துள்ளார். பிரதமரின் இவ்வறிவிப்பு சிறைகளில் வாடுகின்ற கைதிகளுக்கு ஆறுதலைத் தராவிடினும் அவர்களின் உறவினர்களுக்கு ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது.

## காணாமல் போனவர்களின் முடிவு என்ன ?

அரசும் விடுதலைப்புலிகளும் போர்க் கைதிகளைப் பரிமாறிக் கொண்டாலும் காணாமல் போன அப்பாவித் தமிழ் மக்கள் மற்றும் இராணுவத்தினர் விடயத்தில் அரசு பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளது. 1996ஆம் ஆண்டு முதல் யாழ்



குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்கள் இன்னமும் தென்னிலங்கைச் சிறைகளில் இருப்பதாக அவர்களின் உறவினர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

**விதுரன்**

அதேபோல் தாக்குதல் சம்பவங்களின் போது காணாமல் போன படையினர் விடுதலைப்புலிகளிடம் உள்ளனர் என்பது காணாமல் போன படையினரின் பெற்றோரின் நம்பிக்கை.

காணாமல் போனவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என அவர்களின் உறவினர்கள் வடக்கிலும், தெற்கிலும் நம்பிக்கொண்டிருக்கும் போது தம்மிடம் எந்தப்படையினரும் கைதிகளாக இல்லை என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அதேபோல் தென்னிலங்கையில் உள்ள எந்தச் சிறையிலாவது காணமல் போனவர்கள் இருப்பார்களாயின் அவர்களை மீட்டுத் தருவதாகப் பிரதமர் கூறியிருக்கிறார். இந்நிலையில் தென்னிலங்கைச் சிறைகளில் நடத்திய தேடுதலில் எந்த இடத்திலும்



காணாமல் போனவர்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

எனவே வடக்கிலும் தெற்கிலும் காணாமல் போனவர்கள் இல்லவே இல்லையா? என்ற கேள்வி எழுகின்ற போது அதன் தாக்கம் அரசுக்குப் பெரும் சிக்கலைக் கொடுக்கவே செய்யும்.

எனினும் தென்னிலங்கையில் காணாமல் போனவர்கள் போராடப் போன படையினர். ஆனால் வடக்கில் காணாமல் போனவர்கள் அப்பாவிப் பொதுமக்கள். அப்பாவிப் பொது மக்களிற்கு நேர்ந்த கதியை படையிர் வெளிப்படுத்த வேண்டிய காலம் நெருங்கி விட்டது.

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
வவுனியா, கொழும்பு
விலை ரூபா:- 14.00

## அதிகாரக் குறைப்புச் சட்டமூலம்

# ஆடுகளத்தில் ஜனாதிபதி - பிரதமர் வீரர்கள் அணி மாறியும் களமாடுவர்!

அரசியற் சட்டத்திற்கான 19ஆவது திருத்தச் சட்ட மூலத்தை நிறைவேற்ற விடமால் தடுப்பதில் ஜனாதிபதி விடா முயற்றியுடன் செயற்பட்டுவருகிறார் என்பது அவரது அண்மைக கால‌ப் பேச்சுக்க



ளிலிருந்து தெரிகிறது. இதே திருதத்தை நிறை வேற்றியே தீருவது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் கங்கணங் கட்டி நிற்கிறார். சட்ட மூலத்தை தடுத்து நிறுத்தும தனது முயற்றிகளில் முக்கியமாக, பாராளுமன்றத்தை மூன்று ஆண்டுகளுக்கு கலைப்பதில்லை என்ற வாக்குறுதியை ஜனாதிபதி சபாநாயகருக்கு எழுத்து மூலம் வழங்கியிருக்கிறார். இதனால் பாராளுமன்றத்தைக் காப்பதற்கு ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களை நீக்கும் சட்ட மூலத்தை கொண்டு வரும் தேவையே அரசாங்கத்திற்கு இல்லாமல் போகலாம என்று கண்களை மூடிக்கொண்டு பால் குடிக்கும் பூனைக் குட்டியைபபோல ஜனாதிபதி சிந்திக்கிறார். ஆனால் அவரது கடிதத்தை ஐ.தே.முன்னணி ஒரு பொருட்டாகக் கருதவில்லை.

ஜனாதிபதியின் கட்சிக் காரரான ஜெயராஜ், பெர்னான் டோபுள்ளே அவர்களே ஜனாதிபதி தனது வாக்குறுதிகளிலிருந்து மாறி விடுவார் என்று எச்சரிக்கிறார்.

### பாராளுமன்றம் கலைக்கப்படலாம்

டிசம்பர் ஐந்தாம் திகதியின் பின்னர் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்து விடலாம் என்ற பதியில் அமிழ்ந்திருப்பவர்கள் ஐ.தே.முன்னணி எம்.பி.க்கள் மட்டுமல்லர். சுதந்திரக் கட்சியின் எம்.பிக்களும் இதே பீதியில் இருப்பவர்களே. தனது கட்சியின் எம்.பிக்களை தனனிடமுள்ள அதிகாரங்களே கலக்கமடையச் செய்வதனால ஜனாதிபதி கதிகலங்கி நிற்பதும், தன்னிடமுள்ள அதிகாரங்களே தனது உயிரைப் பாதுகாக்க உத்தரவாதமாயிருக்கின்றன என்று ஜனாதிபதி நம்பியிருக்க, திருத்தச்சட்ட மூலத்தைக் கொண்டு வரும் ரணில் விக்கிரமசிங்க இதே எம்.பிக்களுக்கு மீட்பராகத் தெரிவதும இன்று பொ.ஐ.முன்னணிக்குள் தோன்றியுள்ள சிக்கல்களுக்கு காரணமாகும்.

இரு தலைமைகளும் இடியப்பச் சிக்கலுக்குள் மாட்டிக் கொண்டுள்ளன, ஒரு வயது நிரம்பிய தனது அரசை ஜனாதிபதியின் அதிகாரங்கள் கலைத்து விடலாம் என்ற பயம் ஒரு புறம், இனி மேல் கிடடாது என்று நம்பும் சமாதான வாய்ப்புக்கள் பாராளுமன்றக் கலைப்பினால் நாசமாகி விடலாம் என்றும் ஐ.தே.மு அச்சமடைந்துள்ளது. இத்தகைய தளத்திலிருந்தே 19ஆவது திருத்தச் சட்டமூலம் உருவாகியது. மொத்தம் 29வரையான மனுக்கள் இதற்கு எதிராக தாக்கல் செய்யப்படுமளவிற்கு நிலைமை உக்கிரமடைந்துள்ளது. வெளிப்படையாகக் கூறுவதானால் முன்னாள் அமைச்சர்கள் நால்வர் இதனை ஆதரிக்கின்றனர். எனினும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேறறப்பட வேண்டிய சட்டமூலமாச்சே! மொத்தம் 19 பொ.ஐ.முன்னணி எம்.பிக்களின் ஆதரவாவது தேவை . ஜனாதிபதியின் அதிகாரம் பறகளைப் பிடுங்கும் சட்டமாயிற்றே? திருத்தச்சட்ட மூலம நிறைவேறும் பட்சத்தில் அதிகாரம் பறிக்கப்பட்ட ஜனாதிபதியாகவே பதவி வகிக்க வேண்டும். அவரேகற்பனை செய்துபயமடைவது போன்று அவரின் பாதுகாப்புகளும் குறைக்கப்படலாம்.

### கறுப்பு ஆடுகளை ஜனாதிபதி தேடுகிறார்

இந்நிலையில் ஜனாதிபதி அந்த கறுப்பு ஆடுகள் 19 பேர்களையும் தனது கட்சிக்குள் தேடும் பிரயத்தனத்தில் இறங்கியுள்ளார். நுணுக்குக்காட்டிகளின் முன் எம்.பிக்கள் நிறுத்தப்பட்டனர். ஒவ்வொரு எம்.பியாக அழைத்து தனித் தனியாக சந்தித்தார். திகதியிடப்படாத இராஜினாமா கடிதங்களை வாங்கினார் என்றும் செய்திகள் வந்தன. பாராளுமன்றக் குழுவைக் கூட்டினார். கலந்துரையாடினார். மத்திய குழு, மாவட்டக் குழு என்று கட்சியின் குழுக்கள் பலவற்றையும் கூட்டினார். ஆராய்ந்தார். தாம் விசுவாசத்துடன் இருப்பதாக எம்.பிக்கள் தெரிவித்தனர். முன்னைய அனுபவம் ஜனாதிபதியை உறுத்தியது. மன ஆறுதல் ஏற்பட மறுத்தது.

வெளிவிவகார ஆலோசகரை அழைத்து உள்விவகாரங்களைக் கையாளுமாறு முன்னரே கேட்டிருந்தார். தூது அனுப்பியும், தீர்வுத்திட்டங்களை வகுத்தும் எடுத்த முயற்சிகள் வீணாகி விட்டன. பொ.ஐ.மு. எம்.பிக்கள் எவருமே ஆதரித்து வாககளிக்கக் கூடாது என்று கடும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார். அரசாங்கத்தின் சட்டமூலத்திற்கு திருத்தங்கள் சமர்ப்பிப்பது என்ற முன்னைய நிலைப்பாடும் இப்பொழுது கைவிடப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் சரத் அமுனுகமாவும் அறிக்கைகளை வெளியிட்டு 19ஆவது திருத்தத்திற்கு ஐ.தே.கவின் வாக்குகள் மட்டுமே கிடைக்கும். அதற்கு மேலதிகமாக ஒரு வாக்கும் கிடையாது என்று சபதம் பூண்டுள்ளார். தமது கட்சியினருக்கு தென்பூட்டும் பிரசாரத்தை செய்ய வேண்டும் என்பது தகவல் அதிகாரியாக இருந்த அனுபவம் பெற்றவருக்கு சுலபமான வேலை. இப்பொழுது தொட்டிலை ஆட்டும் இவரே ஆரம்பத்தில் பிள்ளை



யைக் கிள்ளி விட்டவர் ஆவார். தென்மாகாணத்தின் பொலிஸ் நிலைய மொன்றில் டிசம்பர் மாதம் 15ஆம் திகதி பொ.ஐ.முவின் அரசாங்கம் அமைந்து விடும் என்று இவர் அடித்துச் சொன்ன கதைகள் பத்திரிகைகளை அலங்கரித்தன. ஜனாதிபதியின் கடிதங்களை நம்பக் கூடாது என்று ஐ.தே.மு முடிவு செய்தமைக்கு இவரது சபதமும் காரணமாக இருக்கலாம்.

### மனச்சாட்சிச் சட்டமூலம்

ஜனாதிபதி தனது பதவியின் அதிகாரங்களைக் காப்பாற்றுவதற்கு தனது கட்சி எம்.பிக்களின் பதவிகளை பலியிடத்திட்டமிட்டுள்ளார் என்ற அச்சம் ஒருபுறம் இருக்க மனச்சாட்சிச்சட்ட மூலம் இருக்கவே இருக்கிறது என்று அபயமளிக்கும் ஐ.தே. முன்னணியினர் ஆயத்தங்களை மிகவும் நுட்பமாக மேற் கொண்டு வருகின்றனர். ராகு காலம விலக்கி சுபநேரம் பார்த்து திருத்தச்சட்ட மூலத்தை சபையில் சமர்பித்தது மட்டுமன்றி எதிர்கட்சியின் மூத்த உறுப்பினர்களை வைத்தே இதற்கான பிரச்சாரத்தையும் முன்னெடுத்து வருகின்றனர்.

முன்னாள் அமைச்சர் பௌசியும், றிச்சாட் பத்திரனவும், சட்டமூலத்தை பகிரங்கமாகவே ஆதரித்துப் பேசுகின்றனர். சட்ட மூலத்தை ஆதரிப்பின், ரணிலின் கரங்களைப் பலப்படுத்துவேன் என்று மட்டும் றிச்சாட் பத்திரன கூறவில்லை. சட்டமூலம் நிறைவேறியதும் இந்த ஆட்சியே 10 ஆண்டுகளுக்குத் தொடர வேண்டும் என்று பிரேரணை கொண்டு வருவேன் என்றும் கூறியுள்ளார். எம்.பிக்களுக்கு நாவில் நீரை ஊற வைக்கலாம என்றும் எண்ணுகிறார். அதாவது எம்.பிக்களுக்கு 'போணஸ்' உம் உண்டு என்று கூறப் பார்க்கிறார்.

முன்னாள் அமைச்சர் ரொனிடீ மெல் பகிரங்கமாக கருத்து எதனையும் கூறவில்லை. இவரது கடந்த கால அரசியல் நடத்தை போக்குகளும் முக்கிய கூட்டங்களுக்கு இவர் சமூகமாளிக்காதிருப்பதும் இவர் கருத்துக் கூறும் தேவையை இல்லாமற் செய்கின்றன. ஜெயராஜ் பெனர்னான்டோ புள்ளே எஸ்.பீ. திஸாநாயக்க குழுவினருடனேயே கட்சி மாறுவார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆனால் தொகுதி மக்கள் வீட்டின் முன் ஆர்ப்பாட்டம் செய்ததனால் வாக்காளரின் அன்புக் கட்டளையை மீற முடியாது போயிருந்தது. பொ.ஐ.முவின் 20 எம்பிக்கள் திருச்சட்ட மூலத்தை ஆதரிப்பர் என்று ஐ.தே.மு நம்புகிறது. பிரதமர் நியூயோர்க்கில் இருந்து அளித்த பேட்டி ஒன்றிலும் இந்த நம்பிகையை வெளியிட்டுள்ளார்.

### இறுதிச் சந்தர்ப்பம்

உள்நாட்டுப் போரை முடித்து வைத்து சமாதானத்தை ஏற்படுத்தும் இன்று தோன்றியுள்ள வாய்ப்பு இதுவரை என்றுமே ஏற்பட்டதில்லை. எதிர்காலத்திலும் இவ்வாறு ஏற்படுவதற்கில்லை. இதுவே இறுதிச் சந்தர்ப்பமென்று புத்தியீவிகள் மட்டத்திலிருந்து விடுக்கப்படும் செய்திகள் பெரும் அச்சுறுத்தலாகவும் உள்ளன. இந்த யதார்த்த நிலையே சமாதானத்தை விரும்பும் இலங்கையர்கள் மத்தியில் மன மாற்றத்தையும் கட்சி வரம்புகளைக் கடந்து சிந்திக்கும் நிலையையும் மனச்சாட்சியையும் தூண்டுவனவாகவுள்ளன. இதுவே எம்பிக்களை மனச்சாட்சிப்படி சிந்திக்க வைப்பனவாகவும் உள்ளன. இன்றைய கட்டத்தில்பாராளுமன்றம் கலைக்கப்படுவதால் சமாதான முயற்சிகள் இடையில் நிறுத்தப்பட்டு விடலாம். பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவதற்கு சந்தர்ப்பமாக அமைந்து விடலாம் என்ற அச்சமே மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்குமென்று ஐ.தே. முன்னணியினருக்கு நம்பிக்கையூட்டுவதாகவும் இருக்கிறது.

திருத்தச்சட்ட மூலத்தை ஆதரிக்க வேண்டுமென்றும் பொ.ஐ.மு தலைமை தனது பிடிவாதப் போக்கினையும் மாற்றிக் கொள்ள வேண்டுமெனவும் கட்சிக் குள்ளிருந்தே குரல்கள் எழுந்துள்ளன. கருத்து முரண்பாடுகள் மேலும் தீவிரமடைந்தால் முன்னணி பிளவுபடலாம் என்றும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. ஜனாதிபதி தானே சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தின் உள்ளடக்கம் என்ன? 3



ஆண்டுகளுக்கு பாரர்ளுமன்றத்தைக் கலைக்க மாட்டேன் என்பது. காட்டப்பட்ட காரணம் என்ன? இன்றைய காலகட்டத்தில் பாராளுமன்றத்தை கலைப்பதில் தீங்குகளே விளையுமென்பது. சட்டமூலத்தை ஆதரிப்பதற்கு மட்டும் ஏன் இந்த வெறுப்பு.

**சர்வன்**

ஜனாதிபதியின் நோக்கங்களுக்கு சட்ட அந்தஸ்த்தை வழங்குவதே 19ஆவது திருத்தம் என்கிறார் பெனார்ன்டோபுள்ளே.

#### நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை ஒழிப்பு

இது பற்றி பிரதமர் தனது கருத்தை தெரிவித்திருக்கிறார். தனது அதிகாரங்கள் துண்டு துண்டாகக் குறைக்கப்படுவதை ஜனாதிபதி வெறுக்கிறார். நிறைவேற்றதிகார முள்ள ஜனாதிபதிப் பதவி ஒழிக்கப்படுவதை விரும்புகிறார்.நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து விட்டால் அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் தானும் போட்டியிட்டு பிரதமர் ஆகலாம் என்று மனப்பால் குடிக்கிறார். இது பிரதமரின் கருத்து அவ்வாறாயின் எல்லாமே தனது பதவிக்காகவா? இந்நிலையில் எம்.பிக்களும் தமது பதவிகளுக்காக சிந்திப்பது தர்க்கரீதியானதல்லவா?

ஜே.வி.பியின் சமாதான எதிர்ப்பு சிந்தனைக்கு செவிமடுத்து சட்ட மூலத்தை எதிர்க்க நினைக்கும் ஒரு போக்கும் சமாதான நடவடிக்கைகளை ஆதரித்து போருக்கு முடிவுகட்டும் சந்தர்ப்பத்தைத் தவறவிடலாகாது என்ற ஒரு சிந்தனைப் போக்கும், எம்.பிக்கள் மட்டத்தில் உள்ளது.

# மனையடி சாஸ்திரம்



(சென்றவாரத் தொடர்ச்சி...)

சுவரானது வீட்டினுள்ளே விழுந்தால் மனையுரிமையாளருக்குத் துன்பங்கள் உண்டாகும்.

மனைகளின் சுவர்கள் வைக்கும போது நான்கு வர்ணத்தாருக்கும் ஏற்ற வகையில் சுவரின் உயரத்தை வைக்க வேண்டும். அந்தணர்க்கும் அரசருக்கும் பத்து சாண்கள் உயரமும் வைசியர் மனைகளுக்கு ஒன்பது சாண்கள் உயரமும் மற்றவர் மனைகளுக்கு எட்டுச் சாண் உயரமும் சுவர்கள் வைக்க வேண்டும்.

மனைகட்கு முதன்மையாகச் சுவர்கள் வைக்கும் போது, இந்தச சுவர்களில் ஏதேனும் ஒன்று எட்டுத் திசைகளில் எந்தத் திசைகளில் சாய்கிறதோ, அந்தந்த திசைக்குரிய பயன்கள் பின் வருமாறு:

அக்கினி மூலையில் சுவர்களில் பிளவுகண்டால் சிறு சண்டைகளும் கலகங்களும் உண்டாகும்

தெற்கு மூலையில் பிளவுகண்டால் நோய்களால் துன்பங்களுமுண்டாகும்.

தென் மேற்கு மூலையில் பிளவு கண்டால் மனைக்கு அழகும், புதிய கவர்ச்சியும் உண்டாகும்.

மேற்குத்திசையில் பிளவுபட்டால் நற்பலன்கள் உண்டாகும்.

வடமேற்குத் திசையில் பிளவு கண்டால் நோய்களால் துன்பமுண்டாகும்.

வடக்குத் திசையில் பிளவு கண்டால் செல்வங்கள்செழிக்க வாழ்வார்கள்.

வடகிழக்குத்திசையில் பிளவு கண்டால் மனையில் வாழ்வோர் மனது சஞ்சலப்படுவார்கள்.

### அடி அளவுகளின் பயன்கள்

உலகிலுள்ள மக்கள், இயற்கையின் உற்பாதங்களான காற்று, மழை, வெயில், குளிர் முதலிய வற்றிலிருந்தும் இருள், ஒளி இவற்றிலிருந்தும் பாதுகாப்பாக வாழ்வதற்காகத்தான் வீடுகளைக் கட்டிக் கொண்டு வாழ்கிறார்கள். அவரவர் பொருள் வசதிக்குத் தக்கவாறு, வசதிகள் மிக்க வீடுகள் கட்டப் பெறுகின்றன. வீட்டிற்கான அளவுகளில் மனிதர்கள் ஐந்தடிக்கு மேல் உயரமாக வளர்வதாலேயே ஐந்தடிக்குள் அறை, கூடம் அமைப்பது பொருத்தமற்றதாகையால் ஆறு அடி முதலாக 120 அடிகள் வரை அகல நீளம் வைப்பதன் அடிக்கணக்கைக் கொண்டு பலன்களைக் கூறியுள்ளனர்.

### அகல நீள அளவுப் பயன்கள்

6அடிகள் அகலமாகவோ அல்லது நீளமாவோ வைத்தால் கடவுள் கிருபையால், அந்த மனையுரிமையாளர் சௌபாக்கியங்களுடன் சிறப்பாக வாழ்வார்! நன்மை உண்டாகும்.

7அடிகள் அகலமோ நீளமோ வைத்தால் தரித்திரம்.

8அடிகள் அகலமோ நீளமோ வைத்தால் ஹீனமடைந்த குடும்பமாக இருந்தாலுங்கூட, தெய்வத்தின் திருவருளால், குடும்பம் தழைத்து செழித்து வளர்ச்சி பெறும். ராஜயோகம் உண்டாகும்.

9அடிகள் அகலம் அல்லது நீளம் வைத்தால் மனையாளரின் மனைவிக்கு தோஷமும் குடும்பத்தில் தரித்திரங்களும் துன்பங்களும் உண்டாகும்.

10 அடிகள் அகலம் அல்லது நீளம் வைத்தால் பொருள்கள் புதியதாகச் சேரும். பசுக்களால் விருத்தியுண்டாகும்.அறுசுவை உணவுக்குப் பஞ்சமிராது.

11அடிகள் அகலம் அல்லது நீளம் வைத்தால் பொருள்கள் மிகுந்து, பால் பசுக்களால் மகிழ்ச்சியும் வளமும் பெற்று வாழ்வார்கள்; நன்மைகள் விளையும்.

12அடிகள் அகலம் அல்லது நீளம் வைத்தால், நாள் தோறும் துன்பங்களும், சஞ்சலங்களால் துயரமும் உண்டாகும். மக்கள் மரணமடைவார்கள்.

13அடிகள் அகலம் அல்லது நீளம் வைத்தால், மழையில்லாமல் பயிர்கள் வாட்டமுறுவது போல துன்பமடைவார்கள். நோயினால் வேதனையுண்டாகும்.

14அடிகள் அகலம் அல்லது நீளம் வைத்தால், பொருள்களின் இழப்பும், அண்டைய அயலான் உதவியின்றி வாழவும் நேரும். கவலைகள் வாட்டும்.

15அடிகள் அகலமோ நீளமோ வைத்தால் துன்பம் நேரிடும்.

16அடிகள் அகலம் அல்லது நீளம் வைத்தால் செல்வங்கள் சேரும். பொருள் வளம் குன்றாது வாழ்வார்கள்.

17அடிகள் அகலம் அல்லது நீளம் வைத்தால் எதிரிகள் வணங்குவர்.

18அடிகள்அகலம் அல்லது நீளம் வைத்தால் பொருள்கள் நாசம், வீடு நாசம்.

19அடிகள் அகலம் அல்லது நீளம் வைத்தால் வறுமை, மக்கட்பேறு இல்லை.

20 அடிகள் அகலம் அல்லது நீளம் வைத்தால் வேளாண்மைப் பலிதம், சுகபோகம் ஏற்படும்.

21அடிகள் அகலம் அல்லது நீளம் வைத்தால் நன்மை உண்டாகும்.


22அடிகள் அகலம் அல்லது நீளம் வைத்தால் பகைவர் அழிவர்.

23அடிகள் அகலம் அல்லது நீளம் வைத்தால் தீமையுண்டாகும்.

24அடிகள் அகலம் அல்லது நீளம் வைத்தால் லாப நஷ்டம் சமமாக இருக்கும், வயது குன்றும்.

(தொடரும்)

# அர்த்தமுள்ள இந்து மதம்



அங்கே 'மலை அரசி', 'அழகிய தேவி நாச்சியார்' என்ற இரண்டு தேவதைகள் உண்டு.

மலையரசியின் கோவில் ஒரு சிறிய குடிசை; அவ்வளவுதான்.

உள்ளே சிலை கிடையாது; ஒரு சமாதி மேடு மட்டுமே உண்டு.

அழகியதேவியின் கோவில் சுண்ணாம்புச் சுவரால் ஆனது தான் என்றாலும், ஒரு தேவதைக் கோவில என்ற அளவில், சிறியதாகவே இருக கின்றது.

இந்தத் தேவதைகளை 'நாச்சியார்' என்ற பட்டப் பெயரோடு அழைக்கிறார்கள்.

'நாச்சியார்' என்ற பட்டம் முக்குலத்து ராணிகளுக்குரிய பட்டமாகும்.

'தேவி' என்ற பொருள் தருவது அந்தப் பட்டம்.

பெரும்பாலும், பாண்டிய நாட்டில் ராமநாதபுரம் ஜில்லாவில் மட்டுமே, இந்தப் பட்டப் பெயர் அதிகம்.

முக்குலத்துத் தாய்மார்கள், மற்ற ஜாதிப் பெண்களை வாழ்த்தும்போது, ''நாச்சியார் நல்லா இருக்கணும்!" என்று வாழ்த்துவார்கள்.

பல இடங்களில் 'நாச்சியார் கோவில்கள்' என்ற கோவில்கள் உண்டு. 'நாச்சியாபுரம்' என்ற ஊர்கள் உண்டு.

'நாச்சியப்பன்', 'நாச்சியம்மை' என்ற பெயர்கள் அதனடியாகத் தோன்றியவையே.

ஆகவே, இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள அம்மன்களில் பல, முக்குலத்து வீரப்பெண்மணிகளாக இருந்திருக்க வேண்டும்.

'எங்களூர் மலையரசி நாச்சியாரோடும் கூடப்பிறந்த பெண்கள் ஐந்து பேரென்றும், அவர்கள் எழுவரும் தேவதைகள்' என்றும் கூறுகிறார்கள்.

பக்கத்துப் பக்கத்து ஊர்களில் ஒவ்வொரு தேவதைக்கும் கோவில் இருக்கிறது.

எல்லாத் தேவதைகளின் பெயர்களும் அழகான தமிழ்ப் பெயர்கள்.

ஆகவே, 'சிறு தேவதை வணக்கம், ஆவி நம்பிக்கையில் எழுந்ததே' என்று திட்டமாகக் கொள்ளலாம்.

நான் 'சிவகங்கைச் சீமை' படம் எடுத்துக் கொண்டிருந்த போது

## குட்டித் தேவதைகள்

அது பற்றிய விவரங்களைச் சேகரிப்பதற்காக சிவகங்கைப் பகுதிக்கும் போயிருந்தேன்.

அங்கே 'நரிக்குடி' என்ற ஊர்!

இருபது வீடுகளே இருக்கும் அந்த ஊரில் ஒரு பழங்காலக் கல் சத்திரம்.

'யாத்ரீகர்களுக்கு இரவு பகலாக உணவு பரிமாறிய இடம் அது' என்று சொல்லுவார்கள்.

மருதுபாண்டியர் ஆட்சிக் காலத்தில், அந்தச் சத்திரத்தில் ஓர் இளம் பெண்ணும் அவள் கணவனும் வந்து தங்கியிருந்தார்களாம.

இரவு நேரத்தில், அவள் கணவனைச் சில பேர் கூட்டிக் கொண்டு போய்க் கொலை செய்து பக்கத்தில் இருக்கும் கண்மாய்க்குள் போட்டுக் கல்லை வைத்து விட்டார்களாம்.

அவன் வளர்த்த நாய்க்குட்டி ரத்தக்கறையோடு ஓடிப்போய், அவன் தலைவியின் சேலையைக் கவ்விக் கூட்டி வந்து சடலத்தைக் காட்டிற்றாம்.

அவள் அழுது புலம்ப, ஊரெலலாம் கூடி மருது பாண்டியனுக்குச் செய்தி அனுப்பினார்களாம்.

மருதுபாண்டியர் வருகிற நேரத்தில், அந்தப் பெண் தன் கணவனோடு உடன்கட்டை ஏறுவதற்கு தயாராக இருந்தாளாம்.

மருதுபாண்டியர் எவ்வளவோ தடுத்தும் கேளாமல், தான் கட்டியிருந்த சேலை, கழுத்தில் போட்டிருந்த கருமணி, கைகளில் போட்டிருந்த வளையல்கள் அனைத்தையும் கழற்றி வைத்துவிட்டு, வெள்ளைச் சேலையைக் கட்டிக்கொண்டு, உடன்கட்டை ஏறிவிட்டாளாம்.

அவள் அணிந்திருந்த ஆடை அணிமணிகளை ஓர் ஓலைப் பெட்டியில் வைத்து, மருதுபாண்டியர் வம்சாவிழியில் ஒரு குடும்பத்தினர், பல தலைமுறையாகப் பூஜித்து வருகிறார்கள்.

மருதுபாண்டியனது ஆண் வாரிசுகள் அனைவரையும் வெள்ளைக்காரர்கள் கொன்று விட்டதால், பெண் வாரிசுகளே பாது காத்து வருகிறார்கள்.

175 ஆண்டகளாக ஒரே பரண் மீது அந்தப் பெட்டி இருக்கிறது.

நாங்கள் போயிருந்தபோது, எத்தனையோ வருஷங்களாக அந்தப பெட்டியின் மீது போடப்பட்ட காய்ந்த மாலைகளைப் பார்த்தோம்.

அவர்களைக் கெஞ்சிக் கேட்டு முதன்முறையாக அந்தப் பெட்டியைக் கீழே இறங்கிக் காட்டச் சொன்னோம்.

**கவிஞர் கண்ணதாசன்**

அது பழங்காலத்து ஓலைப்பெட்டி, ஆதலால் தொட்ட இடம் மட்டும் கையோடுவந்து கொண்டிருந்தது.

பிறகு, அப்புறமாகப் பலகை கொடுத்து இறங்கிப் பார்த்தோம்.

அந்தச் சேலையையும், கருகமணியையும் பார்த்தபோது நான் கண்ணீர் விட்டு அழுதுவிட்டேன்.

அதைப் பாதுகாத்துக் கொண்டிருந்த முக்குலத்து மூதாட்டி, பாட்டின் மூலமே அவ்வளவு விஷயங்களையும் சொன்னார்.

(பாண்டிய நாட்டுப் பெண்களுக்குப் பாடல் என்பது உடம்போடு பிறந்தது.)

இன்றைக்கும், குட்டித் தேவதைகள் மிக அதிகமாக உள்ள நாடு பாண்டிய நாடுதான்.

ஆகவே இந்துக்களின் ஆவி நம்பிக்கை அழிக்க முடியாத நம்பிக்கை என்பது புலனாகிறது.

இன்றும், ஆவிகள் பற்றிய பல்வேறு செய்திகளை நாம் பத்திரிகைகளில் பார்க்கிறோம்.

அதில் எனக்கு ஓரே ஆசை.

தமிழகம் முழுவதிலும் உள்ள குட்டித் தேவதைகள் பற்றிய விவரங்களை யாராவது சேகரிக்க வேண்டும்.

அந்தத் தேவைகள், பற்றிய கர்ண பரம்பரைச் செய்திகளையும் விசாரித்து எழுத வேண்டும்.

அப்படி முழுமையான விவரங்களுடன் கூடிய ஒரு நூலை யாரவது முயன்று ஊர் ஊராகப் போய் அதையே வேலையாக வைத்துக் கொண்டு எழுதுவாரானால், அந்த நூலுக்கு ஒரு நல்ல சன்மானம் தரவும், அதை என் நண்பர்கள் மூலம் வெளியிடவும் நான் தயாராக இருக்கிறேன்.

* * *

## உலவும் ஆவிகள்

இறந்து போனவர்களுடைய ஆவிகள் தங்கள் குடும்பத்தினரைக் கண்காணிக்கின்றன என்பதற்கு, மறுக்க முடியாத ஆதாரங்கள் கிடைக்கின்றன.

ஆவி உலகில் உலவுகிற சிலர், தங்களுக்குப் பிரியமானவர்களின் உடலில் புகந்து கொண்டு, அவர்களையே மீடியமாக வைத்து, மற்றவர்களோடு பேசுகிறார்கள் என்பதும் உண்மை.

தினமணி கதிர் பத்திரிகையில் காங்கிரஸ் பிரமுகர் திரு.பி.ஜி. கருத்திருமன் அவர்கள், இது பற்றி இரண்டொரு கட்டுரைகள் எழுதியிருந்தார்கள்.

இறந்து போனவர்களுடைய ஆவி தங்களுக்குப் பரியமானவர்கள் உடலில் புகந்து பேசுவதும் உண்டு. வேறு உடல்களை மீடியமாகக் கொண்டு பேசுவதும் உண்டு.

எனக்கே இதில் அனுபவம் உண்டு.

1941ஆம் ஆண்டு என் உடன் பிறந்த நாலாவது சகோதரி இறந்து போனார்.

அவருக்கு இரண்டு பெண்களும், ஒரு பையனும் உண்டு.

அந்தப் பெண்களில் மூத்த பெண்மீது, என் சகோதரியின் ஆவி வந்து பேசுவது உண்டு.

ஏதாவது முக்கியமான பிரச்சினைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது என் சகோதரியின் ஆவி தன் மகள் உடம்பில் வந்து பேசும்.

அந்தப் பெண்ணுக்கு நான் மாமன்!

சாதாரண நேரங்களில் 'மாமா' என்றழைக்கின்ற அந்தப் பெண், ஆவி வந்து அழைக்கும்போது, 'தம்பி' என்றழைக்கும்.

மற்ற உறவினரையும், என் சகோதரி எப்படி அழைப்பாரோ, அப்படியே அழைக்கும்.

மேலும், குரலும் என் சகோதரியின் குரலாகவே இருக்கும். இதை நான் பலமுறை கண்டிருக்கிறேன்.

ஆவி வந்து சொன்ன விஷயங்களெல்லாம் நடந்திருக்கின்றன.

இறந்து போனவர்களுக்குப் பிரியமான பதார்த்தங்களைச் செய்து நாம் படையல் நடத்துகிறோம் அல்லவா? அந்தப் பதார்த்தங்களை ஆவிகள் உண்ணுகின்றன என்பது ஜதீகம்!

தர்க்கத்திற்கு இது நிற்க முடியாது என்று வாதிடுவோரும் உண்டு.

ஆனால் இறந்து போனவர்களுடைய ஆவி பற்றிய பல சம்பவங்களைத் தம் வாழ்நாளிலேயே கண்டிருக்கிறார் மதுரை ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

அவர் கூறியுள்ள சில அனுபவங்களை அப்படியே இங்கு எடுத்துக் கொடுப்பது வாசகர்களைச சிந்திக்க வைக்கும்.

அவர் சொல்லியுள்ள பல விஷயங்களில் சிலவற்றை மட்டுமே நான் இங்கே தருகிறேன்.

***இறந்தவர்கள் மீடியமாக இருப்பவர்களுக்குத் தெரியாத பாஷையில் அறிவித்தல்:***

தூத்துக்குடியில் வருமான வரி ஆபீசராக இருந்த ஓர் இஸ்லாமியர், இறந்தவர்களோடு பேசுவதன் உண்மையை அறிய வேண்டும் என்று, எமது தம்பியார் வீட்டிற்கு வந்து இருந்தார்.

(தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும் விஞ்ஞானத் துளிகள்

## குடிநீரும் யாழ் குடாநாடும்

மனிதன் தனக்குத் தேவையான குடிநீரை ஆறுகள், குளங்கள், கிணறுகளிலிருந்து பெறுகின்றான். மனிதனின் நேரடியான,மறைமுகமான நடவடிக்கைகளால் மலங்கள், சேதனக் கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள் போன்ற மாசாக்கிகளால் இந் நீர் மூலங்கள் மாசடைகின்றன. நோயை விளைவிக்கக் கூடிய நுண்ணங்கிகள் பிரதானமாக மனித மலம், விலங்குகளின் மலம், போன்றன நீருடன் கலந்து மனித உணவுக் கால்வாயை அடைவதால் மனிதனுக்கு தைபோயிட் தராதைபோயிட், கொலரா, வயிற்றோட்டம் போன்ற பல் நோய்களை உண்டாக்குகின்றன.

நகரசபை பரிசோதனைச் சாலைகளிலும் நீர்த் திணைக்கள பரிசோதனைச் சாலைகளிலும் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள மூலம் குடிநீரின் தரம் அறியப் படுகின்றது. மாசடைந்த நீரில் கொலிபோம் பக்ரீயாக்கள், *Salmonella, Shigella, Vibrio* போன்ற நோய் உண்டாக்கிகள் காணப்படுகின்றன. *Salmonella, Shigella, Vibrio* போன்றன மாசடைந்த நீரில் உள்ளனவா என பரிசோதனை மூலம் கண்டறிவது கடினம். ஏனெனில் அவற்றின் எண்ணிக்கை குறைவாகக்காணப்படுவதும் கண்டுபிடிப்பது கடினமாக இருப்பதும் நீண்ட நேரம் எடுக்கும் என்பன காரணங்கள் ஆகும்.

குடிநீரின் தரம் தீர்மானிக்கப்படுவது அந்த நீரில் கொலிபோம், பக்ரீயாக்கள் உள் ளனவா அல்லது இல்லையா என் பதை உறுதிப்டுத்துவதில் தங் கியுள்ளது. கொலிபோம்கள் பொதுவாக மலம் மூலமாகவே நீர் நிலைகளைச் சென்றடைகின்றன. கொலிபோம்கள் நீரில் இருப்பின் ஏனைய பக்ரீயாக்களும் அந்நீரில் காணப்படலாம் என்ற முடிவிற்கு வரலாம். இத்தகைய நீர் குடிப்பதற்கு உகந்ததல்ல. 100ml நீர் மாதிரியில் கொலிபோம்கள் இருப்பது பரிசோதனை மூலம் காட்டப்படவில்லையெனில் அந்நீர் குடிப்பதற்கு உகந்தது. 100ml நீரில் 4 கொலிபோம்களை விட அதிகம் காணப்படின் அந்நீர் குடிப்பதற்கு உகந்ததல்ல. குடிநீரின் சுகாதார இயல்பைத் துணியும்போது கொலிபோம் பக்ரீயாக்களுக்கான சோதனையே மேற்கொள்ளப்படும். ஏனெனில் இவை நீரில் அதிக எண்ணிக்கையில் இருப்பதும் கண்டுபிடிப்பது சுலபமாக இருப்பதும் குறைந்த நேரம் போதுமானதாக இருப்பதும் பரிசோதனையை இலவாகுவாகச் செய்யக் கூடியதாக இருப்பதுமே ஆகும்.

கொலிபோம் பக்ரீயாக்களின் சியப்பியல்புகளாவன:

1. காற்றுவாழ் அல்லது அமையத்திற்கேற்ற காற்றின்றி வாழ் பக்ரீயாக்கள்.
2. கிராம் எதிர்வகைக்குரியன.
3. அக வித்திகளை உண்டாக்குவதில்லை.
4. கோல் உருவானவை.
5. இலக்றோஸ் கரைசலை 35°C வெப்பநிலையில் 48 மணித்தியாலத்தில் நொதிக்கச் செய்து வாயுவைப் பிறப்பிக்கக் கூடியன.

***Escherichia coli, Enterobacter, Klevsiella, Aerobacter*** என்பன பொதுவாகக் காணப்படும் கொலிபோம்களாகும்.

விவசாயக் கைத்தொழில் இரசாயனக் கழிவுப் பொருட்கள் நச்சுப்பதார்த்தங்கள் இரும்பு ஐதரொட்சைட் ஐதரசன் சல்பையிட் கல்சியம் காபனேற் என்பவற்றால் நிலக்கீழ் நீர் மாசடைகிறது. யாழ் மாவட்ட மழை வீழ்ச்சியில் 30-32 வீதமானது அதாவது வருடாந்தம் 1255mm நிலக்கீழ் நீராகச செல்கிறது. மாசடைந்த நிலக் கீழ் நிரீல் அதிகளவு குளோரைட்டு காணப்படும். யாழ் குடாநாட்டு நிலக்கீழ் நீரில் குளோரைட்டின் செறிவு 400-900mg/l அளவுக்கு அதிகரித்துள்ளது. நகரமயமாக்கலின் விருத்தியும் விவசாய நடவடிக்கைகளுமே யாழ் குடாநாட்டு நிலகீழ் நீரை அதிகளவில் மாசாக்குகின்றன. விவசாயச் செய்கையில் மேலதிகமாக இரசாயனப் பொருட்களைப் பாவிப்பதும் சுகதாரமான மலகூடங்கள் இல்லாமையும் பாரிய கழிவுக் குழிகள் காணப்படுவதுமே நிலகீழ் நீர் மாசடைவதன் காரணங்களாகும்.

இலங்கையில் யாழ் குடாநாட்டிலேயே நிலக்கீழ் நீரில் அதிகளவு நைத்திரேற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. யாழ் குடாநாட்டு நிலக்கீழ் நீரில் நைத்திரேற்றின் அளவு உலக சுகதார நிறுவனத்தால் நிர்ணயிக்கப்பட்ட

**K.சுகந்தன் B.Sc.**
**அலிகார் தேசிய பாடசாலை**
**ஏறாவூர்,**
**மட்டக்களப்பு.**

நியம அளவிலும் பார்க்க 100-150வீதத்தால் அதிகரித்துள்ளது. யாழ் குடாநாட்டில் 1983ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி 80வீதமான கிணறுகளில் அதிகளவு மல நாட்டமுள்ள கொலிபோம்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. யாழ் குடாநாட்டில் விவசாயிகள் மேலதிகமாக அதிகளவு உர வகைகளை பாவிக்கின்றனர். யூரியா உரத்தில் 46வீதம் நைதரசன் உண்டு. உரங்களிலுள்ள நைதரசன் சேர்வைகளில் 75வீதமானது நிலக்கீழ் நீரைச் சென்றடைகின்றது. நைத்திரேற் சேர்வைகளால் மனிதனுக்கு நீலக் குழந்தை அறிகுறி, மெதமோகுளோபிமியா நரம்பு பிறழ்ச்சி போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. யாழ குடாநாட்டில் வாழும் மக்களுக்கு பிரதானமாக நகரப்பகுதி அரியாலை, கொழும்புத்துறை, சுண்டுக்குளி போன்ற இடங்களில் வாழும் மக்களுக்கு பல நிறுவனங்கள் குடிநீரை விநியோகிக்கின்றன. இந்நீரில் எந்தளவிற்கு சுகாதாரம் பேணப்படுகின்றது என்பது தெரியவில்லை. யாழ் குடாநாட்டில் உள்ள சில தொற்று நோய்களுக்கு இதுவும் காரணமாக அமைகின்றதோ என்பது கேள்விக்குரியது.

### இவ்வாரப் புதிர் 16

**கடிகாரமொன்று ஒரு நாளுக்கு 15 நிமிடங்கள் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. ஒரு நாள் பகல் 12.00மணிக்குச் சரியான நேரத்திற்கு கடிகாரம் திருப்பி வைக்கப்பட்டது. மறுநாள் காலை 4.00 மணிக்கு கடிகாரம் என்ன நேரம் காட்டும்?**

சரியான விடையைக் கூப்பனில் எழுதி 04.10.2002 இதற்கு முன்னர்

பத்திராதிபர்,
யாழ்.விஞ்ஞான சங்கம்(A)
மே/பா.விலங்கியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

சரியான விடை எழுதும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா 100 ரூபா பரிசாக வழங்கப்படும்.

*புதிர் இல.14*
**சரியான விடை :10ரூபா**

*சரியான விடை எழுதி அனுப்பியோரில் பரிசு பெறும் அதிர்ஷ்ட சாலிகள.*

**1. கிரிஷாந்தி செல்வரட்ணம், யாழ் மல்லாகம் மகா வித்தியாலயம், மல்லாகம்.**

**2. கந்தையா ரஜீவன், யாழ் மல்லாகம் மகாவித்தியாலயம், மல்லாகம்.**

**3. தர்மலிங்கம் கார்த்திக், காளிகோவிலடி, அம்மன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

புதிரிற்கான பரிசுப் பணத்தை அன்பளிப்புச் செய்வோர்,
**நெல்லியடி சனசமூக நிலையம்**
நெல்லியடி, கரவெட்டி.

**குறிப்பு : புதிர்ப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் தமக்குரிய பரிசுப் பணத்தினை வாரநாட்கள் தோறும் யாழ். பல்கலை க்கழக விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் காலை 10.00மணி முதல் மாலை 4.30மணிவரை பெறறுக் கொள்ளலாம்.**

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 16**

**சரியான விடை** :-................................
**முழுப்பெயர்** :-................................
**முகவரி** :-................................
................................
**கையொப்பம்** :-................................

# மரண விளையாட்டு

**அன்பு வாசகர்களே!**

சங்குநாதத்தில் 25 தொடராக வெளி வந்த மரண விளையாட்டை ''மாயவன்'' என்ற புனை பெயரில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் க.பொ.த. உயர்தர உயிரியல் பிரிவு மாணவன் மகேந்திரன் யதீஸ் எழுதியிருந்தார். செம்மணி வீதி நல்லூரை வதிவிட விலாசமாகக் கொண்ட யதீஸ் சிறுவயதிலேயே சிறுகதை எழுத்தாளராக மிளிர்ந்தவர். அவருடைய எழுத்தாற்றல் மேலும் விருத்தி காண சங்குநாதம் வாழ்த்துகிறது.

ஆசிரியர்.

தொடர்கதை

அங்கம் 25

மாயவன்

விருதுகள் வழங்கும் வைபவம் ஆரம்பமாகியது. முதலில் அரவிந் அழைக்கப்பட்டான். எல்லோரது கரகோசமும் பலமாக எழுந்தது. காமிரா பிளாஸ்கள் மின்னின. ஒவ்வொரு அடியையும் சீராக எடுத்து வைத்து நிமிர்ந்த நிலையில் முகத்தில் மகிழ்ச்சி பொங்க மேடையில் ஏறி விருதை பெற்று எல்லோருக்கும் வணக்கம் செலுத்தி மேடையில் இருந்த பிரதிநிதிகள்உட்பட அனைவருக்கும் கைகுலுக்கி விட்டு இறங்கி தன்நண்பர்களுக்கும் கைகுலுக்கி தன் இருப்பிடத்தில் அமர்ந்தான்.

அடுத்து ரம்யா அழைக்கப்பட்டாள் விறைத்து நின்று சல்யூட் அடித்து கை குலுக்கி விருதினைப் பெற்றாள். தேவராஜ் மேலும் கூறினார். ''மிஸ் ரம்யா அவர்களுக்கு க்ரைம் பிரான்ச் ஹெட் ஒபிசராக பதவி உயர்வும் வழங்கப்படுகிறது'' என்று கூற மீண்டும் சல்யூட் அடித்து விட்டு ஏனையோருக்குக் கை கொடுத்து விட்டு தன் இருப்பிடத்தில் இருக்க அர்ஜுன், ப்ரியா ஆகியோருக்கு தொடர்ந்து விருதுகள் வழங்கப் பட்டன.

அடுத்து விஜய், ரஞ்சித், எட்வேட் ஆகியோர் அழைக்கப் பட்டனர். விருதுகளை பெற்றதும் நாட்டிற்கு இவர்கள் அளித்த சேவையை முன்னிட்டு விடுதலை வழங்கப்படுவதுடன் மூவருக்கும் இன்ஸ்பெக்டர் பதவிகளும் வழங்கப் படுகிறன. அதே நேரம் இவர்களின் ஏனைய இரு நண்பர்களான அபிநாஷ், ஜெகன் இருவரும் தீவிரவாதிகளுடனான மோதலில் மரண மடைந்து விட்டார்கள். அவர்க ளையும இதே நேரம் நினைவு கூர்தல் அவசியமாகும். ஆகவே அவர்களின் ஆத்மா சாந்தியடைய இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் என்று தேவராஜ் கூற எல்லோரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.

பினனர் இந்திய பாகிஸ்தான் பிரதிநிதிகள் தங்கள் உரையில் இந்த அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையில் எந்த வித கெட்ட நோக்கமும் இல்லை. இது நல்ல நோக்கமே என்று கூறி அரவிந் அன்கோவைப் பாராட்டினார்கள்.

* * *



சிறிது நேரத்தில் விழா முடிய நண்பர்கள் ஏழு பேரும் ஒன்றாகக் கூடினார்கள். அரவிந், ''டியர் ப்ரண்ட்ஸ்! இன்று மாலை நீங்கள் எல்லோரும் எனது வீட்டிற்கு வாருங்கள். பார்ட்டி ஒன்று ஏற்பாடு செய்துள்ளேன். அதற்கு நீங்கள் அனைவரும் தவறாது வர வேண்டும். அதில் ரம்யாவைப் பற்றிய சஸ்பென்ஸ் ஒன்று உடைபடும். அதே போல அர்ஜுன் ப்ரியாவைப் பற்றிய ஒரு சஸ்பென்ஸை உடைப்பான் என நினைக்கிறேன். நிச்சயமாக நீங்கள் அனைவரும் ஈவினிங் எனது வீட்டுக்கு வாருங்கள் ஓ.கே.'' என்றான்.

ரம்யா, ப்ரியா இருவரின் கண்களும் ஒரு வினாடி சந்தித்து மீண்டன.

ஓ.கே. அரவிந் மீண்டும் ஈவினிங் வீ வில் மீற் என்று விடை பெற்றனர்.

* * *

ஈவினிங் அரவிந்த் வீட்டில் விஜய், எட்வேட், ரஞ்சித், ஆகியோர் விடை பெற்று சென்ற பின் ரம்யா அரவிந்தை நோக்கி ''அரவிந்! இனியும் என்னால் பொறுக்க முடியாது விரைவாக சொல்லுங்கள் என்னைப் பற்றி என்ன சஸ்பென்ஸ் உள்ளது'' என்றாள்.

ஒன் மினிற் ப்ளிஸ் கம் மெடம் ரம்யாவை தனியே அழைத்துச் சென்று ரெடியாக வைத்திருந்த பொக்கேயை கையளித்தான்.

அதன் லேபிளில் ரம்யா! நான் உங்களை முதன் முதலில் கண்டதிலிருந்து மௌனமாக விரும்பத் தொடங்கி விட்டேன். உங்களுடைய நல்ல முடிவிற்காகக் காத்திருக்கிறேன். உங்கள் முடிவு என்ன என்பதைக் கூறவும்''.

படித்து முடிந்ததும் பொக்கேயில் இருந்த ஒரு ரோஜாப பூவை எடுத்து மௌனமாக அரவிந்திடம் நீட்டினாள் ரம்யா.


அரவிந்த் ஆனந்தத்தால் துள்ளினான். அப்படியானால.... அப்படியானால் ரம்யா நீங்க........''

''உம் நான் உங்களை லவ் பண்ணுகிறேன் அதை எப்படி தெரிவிப்பது என்று தான்.........''

ரம்யா கூறிய அதே நேரம் ப்ரியாவும் அர்ஜுனிடம் அதே வசனத்தைக் கூறிக் கொண்டிருந்தாள்.

இரண்டு காதல் ஜோடிகளும் இனித் திருமணம் எனும் வானில், சிறகு விரிக்கப் போகும் வண்ணப் பறவைகள்.

முற்றும்



# கம்ப்யூட்டர்க் கல்வி





கொஞ்சம் பெரிய சைஸ் வீடியோ கேம் மாதிரி பட்டின்கள், திரையுடன் இருக்கிறது இந்தக் கருவி. கூடவே ஒரு குச்சியும் தருகிறார்கள். பெயர் சிம்யூட்டர் (**Simputer** என்பதன் விரிவு **Simple, inexpensive, multilingual computer**). நீங்கள் பல் கலைக் கடித்துக் கொண்டாவது 25,000 ரூபாய் கொடுத்து ஒரு ''சீ' கம்பியூட்டர் வாங்கி விடுவீர்கள். கிராமப்புறங்களில் வசதி இல்லாதவர்கள் என்ன செய்வார்கள்? அவர்களுக்கும் பிசினஸ் நடககிறது. அவர்களுக்கும் தங்கள் வேலை இன்னும் வேகமாக, கச்சிதமாக நடக்க வேண்டும். ஆனால் வயற்காட்டு வேலையை விட்டு விட்டு புதிதாக டைப்பிங், ஆங்கிலம், கம்பியூட்டரை இயக்குவது ஆகிய விஷயங்களைக் கற்றுக் கொண்டிருக்க முடியாது. இவர்களை மனதில வைத்து உருவாக்கப்பட்டதுதான் சிம்பியூட்டர்.

இந்தக் குட்டி கம்பியூட்டர் கிராமங்களில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும் என்று எதிர்பார்க்கலாம்.

## சிம்பியூட்டரைப் பயன்படுத்துவது சுலபம்

சிம்பியூட்டரைப் பயன்படுத்துவது மிக மிக சுலபம். இது தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, கன்னடம் ஆகிய் மொழிகளில் இயங்குகிறது. ரைப் செய்யத் தேவையில்லை. தமிழில் பேசினால் போதும், அல்லது சிம்பியூட்டருடன் வரும் குச்சியில் அந்தக் குட்டித் திரையில் இருக்கும் எழுத்துக்களைத் தட்டினால் போதும். பார்க்க விளையாட்டுப் பொருள் மாதிரி இருந்தாலும் சிம்பியூட்டர் 32 எம்.பி.**RAM**, 16 எம்.பி ஃப்ளாஷ் மெமரி, ஜி.என்.யூ/லீனக்ஸ் ஒபரேட்டிங் சிஸ்டத்தில் இயங்கும் சக்தி வாய்ந்த கருவி. இதில் பயன்படுத்தப்படும் இன்டெல்லின ''ஸ்ராங் ஆர்ம்'' சிப், குறைந்த அளவு மின் சக்தியைத்தான் செலவு செய்கிறது. டெலிஃபோன் லைனுடன் இணைத்தால் ஈ-மெயில் அனுப்பலாம், இன்டநெற்றில் உலவலாம்.

பிரவுசிங் மற்றும் பல வேலைகளைச் செய்ய உதவுவது இதன் **IML** முதுகெலும்பு. **IML (Information Markup Language)**, **XML**-ஐ அடிப்படையாகக் கொண்டு சிம் பியூட்டருக்காகவே உருவாக்கப் பட்ட ஒரு மார்க் அம்மொழி. இதன் விலை ரூ.10,000 (உற்பத்தி அளவு 100,000 யூனிட்களைத் தாண்டி விட்டால் விலை ரூ.9,000 ஆகக் குறைக்கப்படும்) இது **PalmPC** - யின் அண்ணன் போல் தெரிந்தாலும் பாமை விட அதிக வேகமும் ஸ்டோரேஜ திறனும் உள்ளது. சமீபத்தில் இந்தியாவில் வந்திறங்கிய லேட்டஸ்ட் பாம்.பி.சிகள் ரூ.8,000தான் ஆகின்றன. ஆனால் அவை படித்த பிசினஸ் மேன்களுக்காக உருவாக்கப்பட்டவை.

## குறைந்த விலையில் சாதனம்



இந்திய அறிவியல் கழகத்தின் (**IISc** - இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃசயின்ஸ், பெங்களூர்) நான்கு பேராசிரியர்கள், ஆன்கோர் சாஃப்ட்வேர் நிறுவனத்தைச் சேர்ந்த மூன்று நிபுணர்கள் ஆகியோர் அடங்கிய ஒரு டீம்தான் சிம்பியூட்டரை உருவாக்கியிருக்கிறது. சாதாரண மக்கள் தங்கள் தாய் மொழியில் பயன்படுத்தும் வகையில் கம்பியூட்டருக்கு மாற்றாக குறைந்த விலையில் ஒரு சாதனத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தில் 1998இல் சிம்பியூட்டர் பணியைத் தொடங்கினார்கள். சிம்பியூட்டரை சமூக மாற்றத்திற்கான ஒரு கருவியாக முன் வைத்து அதைப் பிரபலப்படுத்துவதற்காக சிம்பியூட்டர் அறக் கட்டளை ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஐ.ஐ.எஸ்சி. ஆன்கோர் சாஃப்ட்வேர் ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்த கம்பயூட்டர் நிபுணர்கள் இதன் உறுபபினர்கள்.

ரூ.9,000 என்பது எந்த விவசாயிக்கும் எட்டாத விலைதான். ஆனால் ஒரு விவசாயிகள் சமூகம் சேர்ந்து ஒரு சிம்பியூட்டரை வாங்கினால் அதைப் பலர் பயன்படுத்தலாம். இந்த வசதியைத் தருவது சிம்பியூட்டரின் ஸ்மார்ட் கார்ட் அம்சம். கிராமத்துப் பள்ளிக் கூடம், கடைகள், ஒரு கிராமத்துத் தபால் காரர் என்று யார் வேண்டு மானாலும் சிம்பியூட்டரை இரவலாகத் தரலாம். இரவல் வாங்கும் நபர் தனது ஸ்மார்ட் கார்ட்டில் தன்னைப் பற்றிய தகவல்களை, வரவு செலவுக் கணக்குகளை ஏற்கனவே சிம்பியூட்டர் மூலம பதிவு செய்து வைத்திருப்பார். இரவல் பெற்ற சிம்பியூட்டரில் கார்டைச் செருகி, பழைய தகவல்களைத் திருத்திக் கொள்வார். சிம்பியூட்டரை வைத்து வங்கிக் கணக்கில் எவ்வளவு மிகுதி இருக்கிறது என்று பார்க்கலாம், ரயில் டிக்கெட்களை முன் பதிவு செய்யலாம்.

இன்னும் பல அதிசயங்களைச் செய்யலாம். ஸ்மார்ட் கார்ட இருக்கும் போது இப்படி ஒரு சிம்பியூட்டரை எத்தனை பேர் வேண்டுமானாலும் பயன்படுத்த முடியும்.

## இலகுவாகப் பயன்படுத்தலாம்

சிம்பியூட்டரின் மிகப் பெரிய பலம், அதன் எளிமைதான். எழுத படிக்கத் தெரியாதவர்கள் கூட இதைப் பயன்படுத்த முடியும். சிம்பியூட்டரில பல மொழி வார்த்தைகள் அதன் ஒலித் தொகுப்பில் பதிவு செய்யப் பட்டிருக்கிறது. **IML** தொழில் நுட்பம், எழுத்து வடிவிலிருக்கும் தகவலை ஒலி வடிவமாக்கிப் படித்துக் காட்டுகிறது. ரைப் செய்வதற்கு சிம்பியூட்டருடன் தரப்படும் குச்சியால் திரையில் தெரியும் கீபோர்டைத் தட்ட வேண்டும். இது சிம் பியூட்டர் பயனாளிகளின் தேவைக்கு ஏற்ற சிறிய அளவு ரைப்பிங் வேலைக்குப் பொருந்தும், குறுநாவல், காவியம் எழுதுவதற்கெல்லாம் சிம்பியூட்டர் ஒத்து வராது. தேவைப்பட்டால் அதனுடன் ஒரு கீபோர்ட்டை இணைத்து டைப் செய்து கொள்ளலாம்.


சிம்பியூட்டரை மார்க்கெட்டிங் செய்வது பைக்கோபிட்டா சிம்பியூட்டர்ஸ் (ஐ.ஐ.எஸ்.சி., ஆன்கோர் முயற்சி), ஆன்கோர் சாஃப்ட்வேர், வி.எக்ஸ்.எல். இன்ஸ்ட்ருமென்ட்ஸ் ஆகிய நிறுவனங்கள். இந்திய அரசு சிம்பியூட்டரை பெரிய அளவில் வாங்கும் என்று நம்புகிறார் இதை உருவாக்கியவர்களில் ஒருவரான ஐ.ஐ.எஸ்.சி. பேராசிரியர் ஸ்வாமி மனோகர். ஆளுக்கு ஒரு சிம்பியூட்டர் என்பது நினைத்துப் பார்க்க முடியாத விஷயம். ஆனால அரசு சிம்பியூட்டரை வாங்கி விநியோகித்தால் பிறகு எல்லாமே சாதாரண மக்கள் கைக்கு எட்டும் நிலைக்கு வந்து விடும். ஒரு ஸ்மார்ட் கார்டீன விலைரூ.50 முதல் 100வரை சிம்பியூட்டரின் வாடகை 1 மணி நேரத்திற்கு ரூ10 அல்லது 15 என்று நிர்ணயிக்கப்படலாம்.

## சர்வதேச நிறுவனங்கள் ஆர்வம்

இப்போதே சிம்பியூட்டரை உற்பத்தி செய்ய அமோகமான டிமாண்ட் இருக்கிறது. அமோகமான என்றால் வருடத்திற்கு 10 லட்சம். சர்வதேச அளவில் சில ராட்சத நிறுவனங்கள் சிம்பியூட்ரில் ஆர்வம் காட்டத் தொடங்கியிருக்கின்றன. சிம்பியூட்டரைப் பெரிய அளவில் உற்பத்தி செய்யத் தொடங்கி விட்டால் வெளி நாட்டில் வசிக்கும் வசதியானவர்கள் கூட அவற்றை கிராமங்களில் விநியோகத்துப் புண்ணியம் கட்டிக் கொள்ளலாம். அது சரி, ஒரு சுவாரஸ்யமான விஷயத்தைக் கவனித்தீர்களா? சாதாரண பயனாளிகள் பயன்படுத்துவதற்குக் கடினமாக இருக்கும் ஜி.என்.யூ /லீனக்ஸை ஒபரேட்டிங் சிஸ்டமாக வைத்து இந்த நிபுணர்கள் எழுத, படிக்கக் கூடத் தெரியாதவர்கள் பயன் படுத்தக் கூடிய ஒரு கம்பியூட்டரை உருவாக்கியிருக்கிறார்கள்.

* * *

# இன்ரநெற்றை விழுங்கப் போகும் சூப்பர் வைரஸ்?



வைரஸ் புரோகிராம்களை எழுதும் கம்பியூட்டர் கிரிமினல்கள் '' தாங்கள் ஃப்ரீயாக இருக்கும் நேரத்தில் இன்டர் நெட்டையே கைக்குள் போட்டுக் கொள்ள முடியும்'' அதிர்ச்சியாக இருக்கிறதா? இது மூன்று பெரிய தகவல் தொழில் நுட்பத்துறை நிபுணர்கள் ஆராய்ச்சி நடத்திக் கண்டு பிடித்த விஷயம்.

இன்டர்நெட்டுடன் இணைக்கப்பட்ட ஒரு கோடி கம்பியூட்டர்களை சில மணிநேரங்களில் தாக்கி செயலிழக்க வைக்கக் கூடிய மிக ஆபத்தான சூப்பர் வார்ம் (வார்ம் என்றால் அளவில்லாமல் குட்டி போடும் வைரஸ் வகை) ஒன்றை வெகு விரைவில் எதிர்பார்க்கலாம். என்று இந்த நிபுணர்கள் சொல்கிறார்கள்.

சமீபத்தில் தாக்கிய **SQLsnake** என்ற வார்ம் இது வரை 6இலட்சத்திற்கு மேற்பட்ட கம்பியூட்டர்களைத் தாக்கி தொடர்ந்து அட்டகாசம் செய்து வருகிறது. இதுவரை நெட்டைத் தாக்கிய டிஜிட்டல் கிருமிகளிலேயே இதுதான் மிக வலுவானது. இதை விட ஆபத்தான சூழ்நிலை ஏற்படலாம் என்று நிபுணர்கள் எச்சரித்திருக்கிறார்கள்.

''ஒரு கிரிமினல் பத்து லட்சம், அல்லது 10 மில்லியன் (ஒரு கோடி) இன்டர்நெட் ஹோஸ்ட்களைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியும்''என்கிறது ஒரு அறிக்கை. இந்த அறிக்கையைத் தொகுத்தவர்கள் கம்பியூட்டர் பாதுகாப்பு நிறுவனமான சிலிக்கன் டிஃபென்ஸின் ஸ்டுவர்ட் ஸ்டானிஃபோர்ட், ஐ.சி.எஸ்.ஐ இன்ரநெற் ஆராய்ச்சி மையத்தின் வொன் பாக்ஸன், பெர்க்கிலி பல்கலைக்கழகத்தின் நிக்கோலஸ் வீவர்.

(தொடரும்)

# கங்கைக்கரை வனங்களில்

சீதாதேவி மௌனமாக நின்றாள். துறவியின் மனமும் தான் அவளுக்குப் புரியவில்லை. இல்லாவிட்டால் அப்படி அவர் சொல்வாரா?

“சீதா! எனக்கு இராமனைக கூடப் புரிந்து கொள்ள முடியவில்லையே! அவன்மீது கோபமும் ஆத்திரமும் கூட ஏற்படுகின்றன. துறவு நிலையிலும் மனம் அமைதி கொள்ள மறுக்கிறதே! துளியும் கருணையின்றி, உன்னை, அதுவும் இந்த நிறைமாதத்தில் காட்டில் கொண்டு போய் விடும்படி சொல்ல அவன் மனம் எப்படிக் கல்லாயற்று?

தமஸா நதியின் நீரோட்டச் சலசலப்பில், துள்ளிப் பாயும் முயலகள், மான்களின் அழகில், பறவைகளின் இனிமைச் செறிவான ஒலி நயத்தில், பூத்துச் சொரியும் மரங்கள் செடி கொடிகளின் காவிய வனப்பில் திளைத்து மகிழலாம் என்று வந்தவளுக்குத் துறவியின் கவலை வியப்பூட்டியது.

முக்காலமும் அறிந்தவர்.. சீதையின் வனவாசக் கட்டளையைப் பற்றி, யாருமே சொல்லாமல் தான் அறிந்து கொண்டு குமுறுகிறார். ஆனாலும் இந்த மகரிஷி வால்மீகிக்கு, வனவாசக் கட்டளையின் உட்பொருள் ஏன் புரியவில்லை? புன்னகை அரும்புவதைச் சமாளித தவாறு தன் மௌனத்தை மேலும் வளர்த்தாள் சீதை.

பதினான்கு ஆண்டுகள் முதல் வனவாசத்தில் பெரும்பகுதியை இராவண பூமியின் அசோக வனத்திலேயே கழித்தாகி விட்டது. வெற்றி வீரனாக அயோத்தி நகரம் திரும்பிய இராமபிரானுடன் அரசபோகத்தில் வாழ்ந்த நாட்களும் மின்னல் கீற்றாய்க் கலைந்து போயின. மணி வயிற்றில் இரகுவம்சத்தின் அடுத்த தலைமுறையைச் சுமந்து கொண்டு, இப்போது இரண்டாம் வனவாசத்துக்கும் வந்தாகி விட்டது. ஆனால் ஒரு வித்தியாசம்; இது ஒரு துறவியின் அடைக்கலத்தில் தனியளாக வந்து சேர்ந்து கொண்ட அனுபவம்!

எல்லாமே ஒரு நாடகத்தின் காட்சி மாற்றங்கள் என்பதை இந்த வால்மீகி முனிவரால் ஏன் அறிந்து கொள்ள முடியவில்லை? எப்படிப் புரிய வைப்பது? சீதை சிந்தனையில் ஆழ்ந்து போனாள்.

அந்தச் சிந்தனையைக் கூடச் சோகத்தையும் துயரத்தையும மென்று விழுங்குகிற சராசரி மானுடப் பெண்ணின் பாமரத்தனம் என்பதாகவே எண்ணிக் கொண்டார் அந்த மாமுனிவர்.

தான் யார் என்கின்ற ‘சுய நினைவு’ சீதைக்கு அந்தக் கணத்தில் மீண்டு வந்தது.

‘நானும் ஸ்ரீராமனும் மானுடர்கள்தாமா? இதை இந்தத் துறவிக்கு எப்படிச் சொல்வது? ஒரு வேளை, பாமர மனிதர்களின் மனங்களை மட்டும் ஊடுருவுகிற தவ வலிமை பரம்பொருளிடம் தோற்றுப் போகிறதா?

கணவனால் கைவிடப்பட்ட அபலை என்கிற நாடகப் பாத்திரத்துக்கு மேலும் மெருகூட்டுகிறவளாய்ச் சீதை அந்த மாமுனிவரைப் பின் தொடர்ந்து மெல்லென நடந்தாள்.

“போகட்டும்.. சீதே! உனக்கு மங்களம் உண்டாகட்டும். சூரிய வம்சத்தின் அடுத்த தலை முறையை இந்தத் தமஸா நதிக்கரைத் துறவிகளின் பர்ணசாலைகளில் தான் பெற்றெடுக்க வேண்டும் என்று ஏற்பட்டு விட்டது. துயரங்களைத் துடைத்தெறிந்து விட்டு மனசை நிர்மலமாக வைத்துக் கொள். சொல்வது எளிதுதான்.

“உனக்கென்று தனியே ஒரு பர்ணசாலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். தூய்மையான மான் தோல் விரிப்பும், இரவுக் காலங்களில் சுடர்விடும் இங்குண எண்ணெய் விளக்கும் உனக்குத் துணையாய் இருக்கும், பணிப் பெண்கள் உனக்கு உதவுவார்கள்.

“தமஸா நதியில் நீராடி மரவுரி தரித்துக் கனிகளையும், யாரும் பயிரிடாமலேயே விளையும் தானியங்களையும் உண்டு பசியாறிக கொள்.”

‘கட்டளையா அன்பு வழி காட்டலா?’ என்பதை வேறுபடுத்திப் பார்க்க முடியாத நிலையில் வால்மீகி பேசிக்கொண்டே போனார். புல்லின் பனித்துளி மகுடங்கள் கால்களை வருடும் சுகானுபவத்தில் திளைத்தவளாய்ச் சீதையும் நடந்து கொண்டிருந்தாள்.

ஆற்றின் கரையோரம் வந்து நின்றார் முனிவர். சீதை சற்று முன்னேறி தண்ணீரில் இறங்கி கால்களை நனைத்தவாறு அவரைப் பார்த்தாள். இன்னும் கேள். உன்னால் முடிந்த அளவு குடத்திலே நீர் சுமந்து வந்து, கரையேறும் சிறுசிறு கன்றுகளாய் வளரும் மரங்களுக்கு ஊற்றி அவற்றைத் தாயன்போடு பேணி வா. பின்னால் உனக்குப் பிறக்கப் போகும் குழந்தைகளை வளர்க்க இந்தப் பயிற்சி உதவும். இல்லையா?” என்றார் மாமுனி வால்மீகி. (இந்தக் களவர்ணனை மகாகவி காளிதாஸனின் ரகுவம்சம் நூலில் உள்ளது)

அப்படியே சீதையின் வனவாசம் தொடர்ந்தது. இந்தப் பிறவியில், தனக்காக என்றில்லா விட்டாலும், தன் வயிற்றில் வளரும் குழந்தைக்காக, அதை வளர்த்து உருவாக்குவதற்காக இப்படியொரு தவவாழ்க்கையை மேற்கொள்ள வேண்டியநிலைமை ஏற்பட்டிருப்பது பற்றி எண்ணியபோது அவளுக்கே சிரிப்பும் வந்தது.


“என்ன நீயே சிரித்துக் கொள்கிறாய்? முனிவர்தான் போய் விட்டாரே?” குரல் மட்டும் வந்த திக்கில் திரும்பிப் பார்த்தாள் சீதை.

“என்னைத் தெரியவில்லையா? நான்தான் உன் சகோதரி தமஸா கேட்கிறேன்.” மீண்டும் நுரைச் சிரிப்பில் கலகலப்பூட்டியது தமஸா நதி.

“நீயா?” புருவம் உயர்த்தி நின்றாள் சீதை.

“நானேதான் கிழவர் கேட்ட கேள்விகளையும் வழங்கிய அறிவுரைகளையும் எண்ணிச் சிரித்தாயா? இல்லை. இப்படிக் காட்டில் மரவுரியோடு அலைய வைத்து விட்டார்களே அந்த யாரோ சிலர், அவர்களை எண்ணிச் சிரித்தாயா?”

சீதாதேவியின் சிரிப்பும் வியப்பும் மறைந்து சிந்தனை விரிந்தது. எல்லோரும் தன் மீது பரிவு காட்டி நிற்கும் போது, இந்த நதிச் சகோதரியால் மட்டும் எப்படிக் கேலி செய்து சிரிக்க முடிகிறது?



# இலக்கிய நயம்

# வாழவிரும்பிய சீதை....!

மறுபடியும் தமஸாவே தொடர்ந்தாள்: “ஆமாம், சகோதரிஅன்று நீராடும் போது வாய்விட்டுப் பேசிக் கொண்டே மகிழ்தாயல்லவா? எத்தனையோ ரகசியங்களை யார் காதில் விழப் போகிறது என்கிற தைரியத்தில் உளறிக் கொட்டினாய் அல்லவா? எனக்கு இப்போது எல்லாமே தெரியும்!” மீண்டும் குலுங்கிக் கொப்பளித்துச் சிரித்தாள் தமஸாநதி.

அந்தக் குறும்பு இழையோடும் சிரிப்பில் தன்னையும் மறந்து லயித்தாள் சீதை.திருமகள்தான் ஆனாலும இடம் வேறாகிவிட்டது. பாம்பணையில் பரந்தாமனோடு இருந்து உலகு புரந்த காலங்கள் அந்நியமாகி விடவில்லையே! அந்தப் பரிபூரணத்திலிருந்து வெளிப்பட்ட ஒரு பூரணமாகத்தானே இந்தப் பிறவி வாய்த்தது. எல்லாவற்றையும் உணர முடிந்தும் மனித உடம்புக்கேயுரிய ஆசாபாசங்கள், துன்ப துயரங்கள் எல்லாவற்றையும் துறந்து விட முடியவில்லையே என்று நினைத்துக் கொண்டாள்.

தமஸாநதி நீரோட்டத்தைக் கைகளில் ஏந்தி மேலே வீசி, திவலைகள் பூந்தூறலாய் மீண்டும் நதியோட்டத்தில் வந்து விழப் பார்த்து மகிழ்ந்திருந்த சீதையின் மனம அந்த மிக இனிமையான தருணத்தை அசை போட்டது.

தன்னுள் ஓர் இளஞ்சூரியன் வளரத் தொடங்கி விட்டான் என்பதை, இயல்பான நாணத்தோடு இராமபிரானிடம் அவள் வெளிப்படுத்திய போது, அவன் அளவற்ற மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தான். கருவுற்றிருக்கும் மனைவியின் மகிழ்ச்சி ஒன்றை மட்டுமே கருத்தில் கொண்ட ஸ்ரீராமன் அவளிடம் கேட்டான்.

“சீதா! நீ மிகவும் விரும்புகிற எதையாவது கேளேன். தந்து உன்னை மேலும் மகிழ்விக்கிறேன்” என்று அவன் கேட்டான்.

நகரங்களின் செயற்கை அழகுகளை விடக் காடுகள், சோலைகள், நந்த வனங்கள் என்றே இன்பத்திலும் துன்பத்திலும் மிக நீண்ட காலங்களைச் செலவிட்ட சீதாதேவி மீண்டும் அப்படியொரு வாழ்க்கைக்கே ஆசைப்பட்டதும் அந்த மனோகரமான நேரத்தில்தான்.

“கங்கைக் கரையின் தபோ வனங்களில் போய்ச்சில காலம் இருக்க வேண்டும் போலிருக்கிறது, பிரபோ!” என்ற சீதையின் ஆசையை இப்படி நிரந்தரமாகவே இருக்கும் வண்ணம் நிறைவேற்ற நேரும் என்பதைப் பரம் பொருளின் மானுட வடிவமும், அவன் துணையும் அப்போது எண்ணிக் கூடப் பார்க்கவில்லை.

அந்த ‘யாரோ சிலர்’ பாற்கடலில் நச்சுத் துளியைத் தெளித்தவர்களாகிப் புண்ணியம் தேடிக் கொண்டார்கள். வேவுகாரன் கொண்டு வந்த செய்தியை அலட்சியப் படுத்தலாகாது என்கிற கடமையுணர்வும் பொறுப்பும் மற்றவர்களுக்கு முன் மாதிரியாகத் திகழ வேண்டிய ஆசான் என்கிற காரணத்தால் அந்த ஸ்ரீராமனுக்கும் இருந்தன.

“அரசே! இராமராஜ்யத்தை எல்லோருமே போற்றிப் புகழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் அந்த ஒரு விஷயத்தில் மட்டும்..” என்று வேவுகாரன் தயங்கியது உண்மை.

“சொல்! சொல்ல வேண்டியதை, நீ அறிந்து வந்ததைச் சொல்ல வேண்டியது மட்டும் தானே உன் கடமை. அஞ்சாமல் சொல்” கட்டளையிட்டான் இராமன். வேவுகாரன் சொல்லி விட்டான், அந்த அவதூறு பற்றி! அரக்கன் மனையின் சிறையிலிருந்த தேவியை அழைத்து வந்தது பற்றி!

அச்சத்தின் விளிம்பில் நின்ற வேவு காரனை அமைதிப்படுத்திக் கையமர்த்தினான் இராமன். சிந்தனை பொறி தட்டியது. அன்றைக்குச் சீதாதேவி தீயில் இறங்கி மலர் சொரிய நின்றது தன்னுடைய கற்பின் ஆற்றலைத்தானே வெளிப்படுத்த விரும்பிய கோலம். அதுவும் ஸ்ரீராமனுக்காக மட்டும். அயோத்தி மக்கள் அந்தக் காட்சியைக் கண்டிருக்க வாய்ப்பில்லையே!

உலகம் பழிக்காமலிருக்க, அந்தக் கற்பின்கனலி மீண்டும் நெருப்பிடை புகுதல் வேண்டுமா?

பரந்தாமன் என்கிற நிலையையும் மீறி மனித உடம்பின் வாதைகள் இராமனையும் வாட்டியது உண்மையே.

இரவின் கடைசித் தனிமையில் மனையிவிடமே ஆலோசனை கேட்டான் இராமன். மனமொத்த அந்த இருவரும், பிற்காலத்தில் யுகங்களுக்கும் முன் மாதிரியாகப் பேசப் படப போகிற இராமனும் சீதையும் ஒரு வரையொருவர் கலந்து பேசாமல முடிவுக்கு வருவது நியாயத்தின் பாற்பட்டது அல்லவே.

“உண்மைதான் பிரபுவே! நாம் மீண்டும் இணையவே முடியாத பிறவியின் கடைசிக் கணங்கள் அரும்பி விட்டன. மக்களுக்கு வழி காட்ட வேண்டிய தலைவன், தன் மீது அவச் சொல்லின் நிழல் கூடப் படிய அனுமதித்தலாகாது. அதற்காக மீண்டும் கனலிடை மூழ்கி அக்கினி தேவனின் மனத்தைச் சங்கடப்படுத்த வேண்டியதில்லை. அதற்கு மாறாக... ” சீதையின் சொற்களையும் தயக்கம் தளையிட்டுப் பார்த்தது.

“எதுவனாலும் சொல் தேவி! இது வெறும் நாடகம் தான். இந்தப் பிறவியில் சில கடமைகளை நிறை வேற்றுவதற்காக நாம் ஏற்ற வேடங்கள் தாம்! நம் முடைய சொல்லும், செயலும், மனசும், மகாகவிகளுக்குக் கூடப் புரியப் போவதில்லை. சொல் சீதா! உன்னுடைய கருத்து எனக்கும் உடன் பாடுதான்.”

சீதை சொன்னாள்; “எல்லோரையும் ஆட்டுவிக்கிற பரம் பொருள் தம்மையே ஆட்டிப்படைத்துப்பார்த்து அனுபவிக்கும் பிறப்பல்லவா இராமவதாரம். இதுவும் ஒரு வழி காட்டல்தான். மனித மனத்தில் எத்தனையோ வக்கிரகங்கள் என்றென்றும் சிரஞ்சீவியாய் இருக்கப்போகும் குணம். எதையும் நேர்படப் பார்க்கவே தெரியாத அப்பாவிகள் என்றைக்குமே இருப்பார்கள். அதனால் இந்தப் பிறவியில் அனுபவிப்பது போன்ற சோதனைகள் இதற்கு முன் நாம் எப்போதுமே அனுபவித்ததில்லை பிரபுவே!

“எனக்கு வனவாசமும், துறவு நிலையும் மரவுரியும் புதியவையல்ல. அன்றைய அசோக வனத் துறவு நிலையை மீண்டும் தமஸா நதிக்கரையில் புதுப்பித்துக் கொள்கிறேன். உலகத்தின் பார்வையில இந்த ஸ்ரீராமன் கொண்ட மனைவியை, அதுவும் நிறைமாதக்காரியை இரக்க மின்றிக் கானகம் அனுப்பியவர் என்றே படுவார். ஆனால் உண்மையில் பொது நலன்கருதி, நாமே தேடிக் கொண்ட வழி என்பதை யாருமே அறியமாட்டார்கள். நாளை இளங்காலையில் புறப்படுகிறேன். இரதம் தயாராகட்டும். வழியனுப்பக்கூட பிரபுவே, தாங்கள் வர வேண்டாம். என்ன, எதற்கு என்று கேட்கத் தெரியாத இளவலே போதும்.

“குழந்தைகள் பிறந்து.. உரிய நேரத்தில் அயோத்தி நகரம் வருவேன். அப்போதும் நாம் இணையப் போவதில்லை. எனக்கு மானுட உடலைத் தந்த பூமித் தாயிடமே அடைக்கலப் படுவேன். இந்தப் பிறவியில், இப்படி இந்தக் கணத்தில் நாம் பிரிகிறோம்.

**தொகுப்பு:**
**S.சுஜாதா**

சயன அறை விளக்கில் சுடர் தட்டியது. மானுட உடம்பில் பேசி முடித்த திருமகளின் விழியோரத்தில் நீர் முத்துக்கள் அரும்பின. இராமன் அவற்றைப் பூஜைக்கு மலர் எடுக்கும் பக்குவத்தில் மெல்லென ஒற்றி எடுத்தான்.

“இந்த உடலில் உள்ளவரை நமக்குப் பரமபத நினைவே வரலாகாது தேவி! இப்படி ஒரு பிறவியில் இதற்கேயுரித்தான இன்பதுன்பங்களைமாறிமாறி அனுபவிப்பதில் தான் எத்தனை இனிமை! மனித குலம் அலுப்பில்லாமல், சங்கிலித் தொடராய் அழிவில்லாமல் வளர்ந்து செழிக்க இந்த அநுபவங்களே உராமாகின்றன பார்த்தாயா?” என்றான் இராமன்.

தேவி இதழ் பிரியாத புன்னகையில் எதையெல்லாமோ சொல்ல முயன்றாள்.

அடுத்த இளங்காலையின் பனிமூட்டக் குளிரில், தேர் புறப்பட்டது. தமஸா நதிக்கரையை அடைந்து, அவளிடம் உண்மை’யைச் சொல்லி இளவல் உடைந்து போன நேரம் வரை...

அவளுடைய மனம் அலை பாய்ந்து கொண்டே இருந்தது. மனித மனமும் மகாசமுத்திரமும் தான் எத்தனை இரகசியங்களை, உண்மைகளைக் காப்பாற்றியாக வேண்டியிருக்கின்றன.

* * *



# கால வித்தியாசம்

ஓடை நீரில் மீன்கள் பின்னால்
ஓடித் திரிந்த(து) ஒரு காலம்
கோடை மணலில் கால்கள் வெந்து
குழைந்து போனதும் ஒரு காலம்

ஈசாப் நீதிக் கதைகளுக்குள்ளே
இதயம் கரைந்தது ஒரு காலம்
பேசா திருக்கும் பிரபஞ்சமே ஒரு
புத்தகமானதும் ஒரு காலம்

சில்லிப் பூக்களில் தேனைத் தேடித்
துள்ளித் திரிந்தது ஒரு காலம்
எல்லாம் இருந்தும் நேரமில்லாமல்
எட்டித் தள்ளுவதொரு காலம்

ஆகாயத்தைத் தொட்டுப் பிடிக்கும்
ஆர்ப்பாட்டங்கள் ஒரு காலம்
ஆகாயத்தை நெஞ்சுக்குள்ளே
அழைத்துக் கொண்டதும்
ஒரு காலம்

பணந்தான் உந்தன் எஜமான் என்று
பதறித் திரிந்தது ஒரு காலம்
பணந்தான் உந்தன் சேவகன் என்று
பாடங் கண்டதும் ஒரு காலம்

அதுவோ இதுவோ எதுவோ என்றே
ஆசை வளர்த்ததும் ஒரு காலம்
இதற்குத் தானா இவ்வள வென்றே
இடுப்பைப் பிடித்ததும் ஒரு காலம்

காதல் இன்றேல் சாதல் என்றே
கவிதை சொன்னதும் ஒரு காலம்
காதல் என்பது சந்தர்ப்பம்தான்
கண்டு தெளிந்ததும் ஒரு காலம்

சொல்லிச் சொல்லி உணவு
சமைத்துத்
தொப்பை வளர்த்ததும் ஒரு காலம்
மில்லிகிராமில் உணவை அளந்து
மென்று முடிப்பதும் ஒரு காலம்

தன்னை வெல்ல ஆளில்லை என்றே
தருக்கித் திரிவதும் ஒரு காலம்
சின்னக் குழாயில் காற்றைச்
செலுத்தி
ஜீவன் வளர்ப்பதும் ஒரு காலம்

பூமி தனக்கே சொந்தம் என்று
புலம்பித் திரிவதும் ஒரு காலம்
பூமிக்கே நீ சொந்தம் என்று
புரிந்து தெளிவதும் ஒரு காலம்

# ஜோக்ஸ்

**பெண்மணி:** “என்ன, உன் மகன் கம்பியூட்டர் படிக்கிறானாமே?”

**பிச்சைக்காரன்:** “ஆமாம் அம்மா. கணக்கு வழக்கு பார்க்கப் படிக்க வைக்கிறேன்”.




ஒருவர்: உங்கள் மகன் எதிர்காலத்தில் ஹோட்டலில் வேலை செயயத்தான் லாயக்கு.

அப்பா: எதை வைச்சு சொல்லுகிறங்க?

x AJ.:.போர் ஆம்லட் B.:.போர் பிரெட் என்று படிக்கிறான்.

# அண்ணல் காந்தியின் கஸ்தூரி திலகம்

**பரணீதரன்**



30

தாம்பெற்றெடுத்த செல்வம், அநாதைபோல், அரைப்பட்டினியாய் அழுக்கேறிய உடையுடன் காட்சியளித்த கோலத்தை, அந்த கோரத்தை நினைத்து நினைத்து மாய்ந்து போனாள் அந்தத் தாய். அந்நிலையில், பெற்றவளின் வயிறு துடித்ததைப் பத்து மாதம் சுமந்து பெற்றவர்கள்தான் உணர முடியும்.

பிள்ளையைப் பற்றிய கவலை ஒருபுறம், கணவருக்குச் செய்ய வேண்டிய பணிவிடை மறுபுறம். ஒரு பக்கம் பாசம், மற்றொரு பக்கம் கடமை என்றே வாழ்க்கைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தார் கஸ்தூரிபா. வருவோர் போவோரிடமெல்லாம் தம் சொந்தத் துயரத்தைச் சொல்லி ஆறுதல் தேடும் வழக்கம் அவரிடம் கிடையாது. உள்ளத்தை அரித்தெடுத்த வேதனையை மறைத்து மறைத்துப் பழக்கப்பட்டவர் அவர். தம் ஆசைகளையும், கவலைகளையும் பொசுக்கி விட்டுப் புன்முறுவலுடன் பிறருக்காகவே உழைக்கப் பிறந்தவர் அவர். வயது ஆக ஆக உள்ளம் உறுதிப்பட்டது. ஆனால் உடலில் தென்பு குறைந்தது. உடல் அசதி அதிகமாயிற்று. ஆனால் உழைப்புக் குறையவில்லை. அறுபத்தியேழு வயதான அந்த மூதாட்டி, இன்னும முப்பது வயது மங்கையாகத்தான் அலைந்து கொண்டிருந்தார். ஆச்சிரமத்திலுள்ள பெண்களெல்லாம் வெட்கப்படும் அளவுக்குச் சுறுசுறுப்புடன் இயங்கிக கொண்டிருந்தார்.

'மகன் வாடி'யிலிருந்த 'குடித்தனம்' சேவாகிராமத்திற்கு வந்து விட்டது. அங்கும் கஸ்தூரிபாவுக்கு ஒரு தனி குடிசையைக் கட்டிக் கொடுத்திருந்தார் காந்தி. அதை அடுத்து ஒரு தாழ்வாரம். அதை ஒட்டினாற் போல் ஒரு குளியல் அறை. 'பா'வுக்குத் தள்ளாமை அதிகமாகி வந்ததால் அவருக்கு உதவி புரிவதற்காக இரண்டு மூன்று பெண்மணிகளைக் காந்தி பணித்திருந்தார். இருப்பினும், தம் காரியத்தைத் தாமே செய்து கொண்டால் தான் 'பா'வுக்குத் திருப்தியாயிருக்கும்.

உதவிக்கு இருந்த பெண்களும் தம்மைப் போலவே 'விதரணை'யாகக் காரியம் செய்தால் தான் அவருக்குப் பிடிக்கும். அவர்களும் அதிகாலையில் எழுந்து விட வேண்டும். எழுந்ததும் படுக்கையை ஒழுங்காகச் சுற்றி வைக்க வேண்டும். டாக்டர் சுசீலா நய்யார் சேவா கிராமத்திற்கு வந்து தங்கிய புதிதில், தன் வீட்டு வழக்கப்படி ஒருநாள் படுக்கையைச் சுற்றி வைக்காமலேயே எழுந்து போய்விட்டார். ஆனால் அதற்காக கஸ்தூரிபா அவரைக் கடிந்து கொள்ளவில்லை. தாமே அந்தப் படுக்கையைச் சுற்றி வைத்து விட்டார். பின்னர் அதை அறிந்து சுசீலா வெட்கப்பட்டார். மறுநாளிலிருந்து, படுக்கையை விட்டு எழுந்ததும், அதைச் சுற்றி வைத்து விட்டுத்தான் அடுத்த வேலையைக் கவனிக்கப் போவார் சுசீலா.

கஸ்தூரிபாவுக்கு அறையில் இருக்கும் சாமான்கள் எல்லாம் ஒழுங்காக அந்தந்த இடங்களில் இருக்க வேண்டும். ஆடைகள் அங்கொன்றும், இங்குகொன்றுமாகக் காட்சியளித்தால் அவருக்குச் சற்றும் பிடிக்காது.யாராவது படுக்கையை ஒழுங்காகச் சுற்றி வைக்கா விட்டால், ஒருதுப்பட்டியோ, தலையணையோ வெளியே துருத்திக் கொண்டிருந்தால், அத்தனை படுக்கைகளையும் எடுத்துத் தரையில் விரித்து மறுபடியும் நன்றாகச் சுற்றி, ஒன்றாக அடுக்கி வைப்பார். அவருக்கு எல்லாமே 'பளிச்' சென்று இருக்க வேண்டும். அவர் பாத்திரத்தைக் கழுவிவைத்தால் அதில் நம் முகத்தைப் பார்க்கலாம். அடுக்களையைப பெருக்கி, மெழுகி, சுத்தமாக வைத்துக் கொண்டிருப்பதை ஒரு கலையாகவே பயின்றிருந்த கஸ்தூரிபா, சமைத்து மூடிவைத்திருக்கும் அழகை இன்றைக்கெலலாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். வேலை செய்யச் சளைக்கவே மாட்டார். அவர் அகத்தில் துலங்கிய தூய்மை அவர் புறவாழ்விலும் பிரதிபலித்தது.

அந்த வயதிலும் காலை நான்கு மணிக்கு எழுவதற்கு அவர் தவறியதேயில்லை. பிரார்த்தனையில கலந்து கொள்வதும், காந்திக்கு காலைச் சிற்றுண்டி தயார் செய்வதும் அதை அவர் சரியாகச் சாப்பிடுகிறாரா என்று மேற்பார்வை பார்ப்பதும் பழைய படியே, ஒரு சிறிதும் மாறாமல் நடந்தேறிக் கொண்டிருந்தன.

பகல் உணவைக் காந்திக்கும் மற்றவருக்கும் தம் கையாலேயே பரிமாறி விட்டு, தாமும் கணவர் பக்கத்தில் அமர்ந்து புது மனைவி போல் தான் உணவருந்துவார் அவர். தாம் சாப்பிடுவதுடன் கூட, கணவர் தேவையானவற்றை வேண்டிய அளவு சாப்பிடுகிறாரா என்று ஒரு கண் பார்த்துக் கொண்டே இருப்பார். உணவருந்தும்போது, பக்கத்தில் இருப்பவர்களிடம் ஏதாவது பேசிக் கொண்டே சாப்பிடுவது காந்தியின் பழக்கம். ஆகவே, தவறிப் போய் அவர் உணவில் ஈ பறந்து வந்து உடகார்ந்து விடாமல் இருப்பதற்காக கஸ்தூரிபா எப்போதும விசிறியும் கையுமாக உட்கார்ந்திருப்பார். நண்பகலில் சற்று கண்ணயர்ந்து விட்டு, பிறகு நூல் நூற்று விட்டு ராமாயணம் படிக்க உட்கார்ந்து விடுவார். பொழுதைக் கழிப்பதற்காக நவீன கதைகள் படிக்கும் பழக்கம் அவரிடம் கிடையாது. பள்ளியில படிக்காத அவர், பாரதப் பெண் குலத்தின் கடமை என்னென்ன வென்று படித்துப் படித்துச் சொல்லவில்லை. பக்கம் பக்கமாக எழுதி வைக்கவுமில்லை. ஒவ்வொரு நிமிடமும் தாமே வாழ்ந்து காட்டினார்.

கண்மணியை கண் இமை காப்பது போல் கஸ்துரிபா காந்தியின் நலனைக் காத்து வந்தார். ஒரு சமயம் கல்கத்தாவுக்குச் சென்றிருந்த காந்திக்குத் திடீரென்று இரத்த அழுத்தம் அதிகமாகி உடல் நிலை மோசமாகியது. டாக்டர் பி.சி.ராய், சுசீலா நய்யாரின் துணையுடன் காந்தியைஉடனே சேவா கிராமத்துக்கு அனுப்பி வைத்தார். காந்தி வந்து சேர்ந்ததும் அவர் எங்கே படுப்பது என்ற பெரும் பிரச்சினை எழுந்தது.

ஏனெனில் அவர், தம் வழக்கப்படி அந்தக் குளிரில் வெளியே படுக்கக் கூடாது என்று டாக்டர்கள் கண்டிப்பாகக் கூறி விட்டார்கள். உள்ளே படுப்பதற்கு அவர் குடியில் இடம் இல்லை. அங்கு தங்கி இருந்தவர்கள் இடத்தைக் காலி செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் காந்தி அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்க விரும்பவில்லை. ஆகவே ஆச்சிரம வாசிகளில் ஒருவரான மீரா பென் என்ற ஆங்கில மாது, தன் குடிசையைச் சிறிது மாற்றியமைத்து காந்தி அங்கு தங்கலாம் என்று யோசனை கூறினார். ஆனால் அங்கு நடைபெற்று வரும் கதர்வேலை தடைப்படும் என்று காந்தி அதில் தங்க மறுத்து விட்டார். டாக்டர்கள் திண்டாடினார்கள். காந்தி உள்ளே படுப்பதற்கோ இட வசதி இல்லை.

அந்தத் தர்மசங்கடமான நிலையைக் கண்ட கஸ்தூரிபா, ''பாபு என் குடிசையில் படுக்கட்டும். நான் வராந்தாவில் படுத்துக் கொள்கிறேன்'' என்று கூறினார். கணவருக்கு இல்லாத சௌகரியம் தனக்கு எதற்கு என்று நினைத்திருக்க வேண்டும் அந்த மாதரசி. மறு பேச்சுப் பேசாமல் காந்தி அங்கு குடியேறி விட்டார்.

மறுநாள் காந்தி கட்டிலில் உட்கார்ந்தபடியே உணர்ச்சி வசப்பட்டவராய் அருகில் இருந்தவர்களிடம் ''பாவம், என்னால் 'பா'வுக்கு எப்போதும் கஸ்டம்தான். இந்தத் தள்ளாத வயதில் அவளுக்குத் தனிமையும், நிம்மதியும் தேவை என்று தான் இச்சிறு குடிலை அவளுக்காக நான் கட்டிக் கொடுத்தேன். அவளுக்கென்று இந்த உலகத்தில் சொந்தமாக இருந்த இந்தச் சிறு இடத்தையும் நான் எடுத்துக் கொண்டு விட்டேன். நான் மட்டும் இருந்தால் பரவாயில்லை. நான் இருக்குமிடம் ஒரு சத்திரமாக மாறி விடும். என்னுடன் யாராவது இருந்து கொண்டேயிருப்பார்கள். அது சில சமயம் எனக்கே எரிச்சலாக இருககும். ஆனால் 'பா' என்றுமே முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டது கிடையாது. நான் எம்மாதிரியான கஷ்டங்கள் கொடுத்தாலும் அவள் சிரித்த முகத்துடன் அவற்றை ஏற்றுக் கொள்கிறாள்'' என்று கூறிக் கொண்டிருக்கும் போது கஸ்தூரிபா அங்கு வந்தார். காந்தி புன்னகையுடன் ''கணவன் - மனைவி என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும். கணவன் ஒன்று சொல்ல, மனைவி வேறொன்று சொனனால் இரண்டு பேருக்குமிடையே வீண் சச்சரவுதான் மிஞ்சும். இந்த வீட்டில் அப்படியில்லை. கணவன் ஒன்று சொல்ல வேண்டியதுதான், மனைவி உடனே அதைச் செய்து விடுவாள்'' கஸ்தூரிபாவும் சேர்ந்து சிரித்தார்.

தினம் மாலையில் பிரார்த்தனைக் கூட்டம் நடந்து முடிந்ததும், கஸ்தூரிபா அங்கு ஒரு ''தர்பார்' நடத்துவார். காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் அந்த 'மகாராணி'யைச் சுற்றி எல்லாப் பெண்மணிகளுமம அமர்ந்து கொள்வார்கள். ஒருத்தி 'பா'வின் காலை லேசாகவருடி அமுக்கிக் கொண்டிருப்பாள். இன்னொருத்தி அவர் முதுகை இதமாகப் பிடித்து விடுவாள். அப்போதுதான் ஊர்க் கதைகளையெல்லாம் பேசுவார்கள். ஆச்சிரமத்தின் நடவடிக்கைகளையெல்லாம் அலசுவார்கள். சிரித்து மகிழ்வார்கள். கைகொட்டிக் கும்மாளம் அடிப்பார்கள். வேடிக்கையாக ஏதாவது பேசி விட்டு கஸ்தூரிபா கண் சிமிட்டி விஷமத்தனமாக ஒரு பொக்கை வாய்ச் சிரிப்பு சிரிக்கும் போது கொள்ளை அழகு சொட்டும். பச்சிளங் குழந்தையைப் போன்ற அவருடைய பளிங்கு உள்ளம் பார்ப்பவர் நெஞ்சை அள்ளும்.

ஒரு நாள் அப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போது ஒரு பெண்மணி அன்று தபாலில் 'பா'வுக்கு வந்திருந்த கடிதம் ஒன்றைப் படித்துக் காட்டினாள். அதை எழுதிய பணக்கார மாது, 'பா' மகாத்மாவை மணம் புரிந்து கொண்டதால் வாழ்க்கையில் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டியிருக்கின்றன என்று கூறிவிட்டு, கண்ணீர் நிறைந்த வாழ்க்கைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு விட்டதற்கு அவர் மீது அனுதாபப்படுவதாக எழுதியிருந்தாள். அதைக் கேட்ட கஸ்தூரிபாவுக்கு ஒரு புறம் சிரிப்பு வந்தது. ஒருபுறம் கோபம் வந்தது. உடனே அவளுக்கு எழுத வேண்டிய பதிலைச் சொன்னார்.

அன்புமிக்கவளே!

இம்மாதிரி குடும்ப விவகாரங்களைப் பற்றி விவாதிக்கும் அளவுக்கு உன்னை எனக்குப் பழக்கமில்லை. காந்தி என் வாழ்க்கையைத் துன்பம் நிறைந்த தாக ஆக்கி விட்டார் என்று நீ எப்படிக் கண்டு பிடித்தாயோ தெரியவில்லை! நீ இங்கு வந்து நான் சோகமாக இருந்ததையும் சோறு இல்லாமல் பட்டினி கிடப்பதையும் நேரில் பார்த்தவள் போல் அல்லவா பேசுகிறாய்? எனக்கு வாய்த்தது போல்ஒரு கணவர் உலகத்தில் வேறு ஒரு பெண்ணுக்கும் கிடைத்திருக்க முடியாது.

(தொடரும்)

## சிந்தனையாளரின் சுவையான அனுபவங்கள்

### ஏனிந்தக் கூட்டம்

ராஜாஜி, ஈ.வெ.ரா. ஆகிய இருவரும் ஒரு பொதுக் கூட்டத்தில் பேச ஏற்பாடாகியிருந்தது. மேடையில் அமர்ந்திருந்த இருவரும் தமக்குள் பேசிக் கொண்டிருந்தனர். கூட்டத்திற்கு நிறையப் பேர் வந்திருந்தனர். ஈ.வெ.ரா. சொன்னார்.

''உங்களைப் பார்க்கத் தான் இவ்வளவு கூட்டம்!''

''இல்லை, நம் இருவரையும் சேர்ந்தாற் போல் பார்க்கத் தான் இவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள்,'' என்றார் ராஜாஜி.

### சேர்ந்தே போகலாம்

இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக இருந்த டிஸ்ரேலி ஒரு யூதர். சூயஸ் கால்வாய் கம்பெனியில் பங்குகள் வாங்க முடிவு செய்து இது பற்றி பார்லிமெண்டில் அறிவித்தார். எதிர்க் கட்சித் தலைவரான கிரைட்ஸ்டன் இந்த யோசனையைக் கடுமையாக எதிர்ப்பவர்.

''சூயஸ் பகுதி குரங்குகளும யூதர்களும்தான் வாழ லாயக்கானது. இதை நான் எதிர்க்கிறேன்'' என்றார்.

''அப்படியானால் நீரும் நானும் சேர்ந்தாற் போல் அங்கு போகலாமே!'' என்றார் டிஸ்ரேலி.

### வெற்றிக்குக் காரணம்

ஜின் காக்டு என்பவர் பிரபல எழுத்தாளர். அவரிடம் ஒரு நண்பர், ''நீங்கள் அதிர்ஷ்டத்தை நம்புகிறீர்களா?'' என்று கேட்டார். ஜின் காக்டு சொன்னார்:

''நிச்சயமாக நம்புகிறேன். உங்களுக்குப் பிடிக்காதவர்களின் வெற்றிக்கு அதிர்ஷ்டத்தைத் தவிர வேறு என்ன காரணத்தை உங்களால் கூற முடியும்?''

### பாவம் பெண்மணி

ஒரு கூட்டத்தில் கல்கி பேசினார். அவருக்கு வலது புறம் டி.எம். கிருஷ்ணசாமிஅய்யரும் இடதுபுறம் டி, கே.சி.யும் மேடையில் அமர்ந்திருந்தனர்.

இந்தப் பக்கம் திருப்புகழ் மணி அந்தப் பக்கம் ரசிகமணி. இடையில் நின்று பேசும் நானோ ஒரு பெண்மணி கூட இல்லை என்றார் கல்கி.

## உங்களுக்குத் தெரியுமா ?





அமெரிக்காவின் ஹவாஸ் தீவிற்கு அருகே 'கிளாயே' என்ற எரிமலை வெடித்துச் சிதறியதில் வெளியான நெருப்புக் குழம்புகள் பசுபிக் பெருங்கடலில் கலக்கும் காட்சி. 1983ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்தே இந்த எரிமலை அவ்வப்போது நெருப்புக் குழம்புகளை கக்கிக் கொண்டிருக்கிறது. இதனைக் காண ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான பார்வையாளர்கள் வந்து கொண்டிருக்கின்றனர். தற்போது இதன் சீற்றம் அதிகரித்துள்ளதைப்போல இதைக்காண வரும் பார்வையாளர்களின் வருகையும் அதிகரித்துள்ளது.



ஆர்ஜென்ரீனா தலைநகர் ப்யூனஸ் அயர்ஸ் உயிரியல் பூங்காவில் பிறந்த இந்த மூன்று வெள்ளை புலிக் குட்டிகளுமே முதல் முறையாக பார்வையாளர்களுக்கு பார்ப்பதற்கு அனுமதிக்கப் பட்டன.



ஸ்பெயினின் பெம்ப்லோனா நகரில் நடைபெற்ற அந்த நாட்டு ஜல்லிக் கட்டில், பாய்ந்து வரும் காளையை ஓடிச் சென்று அடக்க முயலும் இளைஞர்கள்.



சிட்னியில் ஒரு மரத்தின் கிளையில் ஒன்றாக அமர்ந்துள்ள 7 'குக்புறா' பறவைகள். இவைகள் தங்களுடைய அழகான சிரிப்பொலி போன்ற சத்தத்தால் அனைவரது மனதையும் கொள்ளை கொண்டு வருகின்றன.



'நயிதுனியா' அமைப்பு வழங்கும் 'புகைப்பட கலைஞர் விருது – 2002' விருதினை அஷோக் பஞ்சோரியா பெற்றார். அவர் எடுத்த இந்த புகைப் படத்திற்குத்தான் விருது வழங்கப் பட்டது.

# மௌனத்தின் தேடல்கள்

## உறவுகளைத் தேடி!

இயற்கையின் அனர்த்தமோ
நகருக்குள் வெள்ளம்
ஆறு போல் ஓடுகின்றது
அதனாலே சின்னவனே நீ
உன் உயிரைக் காப்பதற்கு
கம்பத்தின் படியில் நின்று
உன் உறவுகளை
தேடுகின்றாயா.

க.சித்தா,
அளவெட்டி கிழக்கு.

## மௌன மொழி!

குடிநீர்ப் பிரச்சனை பலம்
பெற்ற காலமிது ஆனாலும்
வானம் சிரித்ததால் பாதை
எங்கும் நீரானது - அதில்
பிஞ்சு இவன் வாழ்வும்
அடித்துச் செல்லும் நீராகுமோ.

T.தயா,
வேளாதோப்பு.

## ஒத்து மாறு!

வெளி நாடுகளை - மழை
வெள்ளங்களும்
விரும்புவதால்.... நாம்
வெயிலில் வேகுகின்றோம்
சிறுவனே! நீ தேடுவது
சூரியனைத்தானே
நாம் அனுப்பி வைக்கின்றோம்
மழையை இங்கே அனுப்பிவை.

ஜோ.ஜெஸ்ரின்,
கொழும்புத்துறை.

## போராட்டம்!

மழலையே
குழலோடு கைப்பிடித்து
குற்றியில் ஏறி
என்ன செய்கிறாய்
உன்னை மூழ்கடிக்கும்
வெள்ளத்தோடு
போரட்டம் நடத்துகிறயா?

சி.சர்மி,
நீர்வேலி.

## ஏக்கத்துடன்!

மழை பொழிந்து
வெள்ளம் ஆறு போல்
பாய்கின்றது நகருக்குள்
இதனாலே சின்னவனே
உன் உயிரை
காப்பதற்கு கம்பத்தில்
இருகரம் இறுகப்பிடித்தவாறு
ஏக்கத்துடன் உறவுகளைத்
தேடுகின்றாயோ.

S.K.குணபாலன்,
அளவெட்டி,

## துணை!

புனித பூமியிலோ
வெப்பம் சகிக்க முடியவில்லை
அழிந்து விட்ட வீடோ
சுடுகாட்டின் கோலம்
எனக்குத் துணை இத்தூண்
மட்டுமே

S.திவாஸ்
சுதுமலை தெற்கு.

## கவனமடா!

கஸ்டமின்றி கம்பத்தில்
ஏறி விட்டாய் தம்பி
இறங்கும் போது கவனம்
வெள்ளம் உன்னையே
மூழ்கடித்து விடும்.

கே.கே.அன்ரன்,
மீசாலை.

## என்ன கோலம்?

பள்ளி வயதிலே
பாதி வழியிலே
பாலனே என்ன கோலம்
பாரில் வந்த துன்பம்
போதாதென்று
இயற்கையும் உன்னை
பாடாய்ப்படுத்துகிறதா?

ச.பாரதி,
வேலணை.

## துளிரே தூணாக ...!

தூணே துணையாய்
துயருறும் துளிரே துணிந்திடு
துயரங்கள் எப்போதும்
தொடர்கதையல்ல..

பூ.சாவித்திரி,
இரா.நுண்கலைக்கழகம்.

## புரிந்துகொள்!

தம்பியே!
கம்பத்தில் ஏறி
என்ன பார்க்கிறாய்
தூரத்தில் இருந்த உன்
உடைமைகளை வெள்ளம்
விட்டு வைத்ததென்றா?

அருமை அன்பு,
கொற்றையூர்.

## இவனது ஆசை!

சமாதானத்தைப் பார்க்க
அனைவருக்கும் ஆசை
ஆனால்
இவனுக்கோ தூணில் ஏறி
எதனைப் பார்க்க ஆசை
என்று சொல்ல மாட்டானோ?

கலைதாசன்.

## சின்னக் கோபம்!

கந்தன் கனிக்காக
பெற்றோருடன் கோபித்து
மலை ஏறினான் - நீ
இயற்கையோடு கோபப்பட்டு
தூணில் ஏறினாயோ?

R.சங்கீதா,
கொடிகாமம்.

## சின்னச்சிட்டு!

அன்புச் சிட்டு
உறவை விட்டு
இன்னலைத் தொட்டு
நிற்கும்
பாசத்தின் மொட்டு.

புவி,
விசுவமடு.

## அன்னை எங்கே..!

தாயை அணைக்கும் வயதில்
தடியை அணைத்து நிற்கும்
பையனே..!
எங்கே உன் அன்னை..?
அலையென வந்த வெள்ளம்
உன் அன்னையையும்
அடித்துச் சென்றதா...?

செல்வகுமார்,
வளலாய்.

## யாருமில்லையா..?

சின்னஞ் சிறிய உன் முகத்திலே
சிரிப்பு ஒன்றையும் காணவில்லை
சோகம் கலந்த உன் நிலையை
சொல்லி தீர்ப்பதற்கு யாருமில்லையா
உனக்கு இந்தச்சோக மென்றால
எப்படித்தான்
உன் பிஞ்சு நெஞ்சம் தாங்கும் இதை
உணர்ந்த என் உள்ளம்
உன்னை நினைத்து கண்ணீர்
வடிக்கின்றது.

த.தர்ஷன்,
உடுவில்.

## சோகங்களை மறந்து!

உறவுகளை இழந்து
உணர்வுகளை தொலைத்து
கம்பத்தோடு கன்னம்
வைத்து கதை பேசும்
சின்னஞ்சிறுவனே!
சோகங்களை மறந்து
நீயும் போட்டோவிற்கு
போஸ் கொடுக்கிறாயா?

சி.சிவஜன்,
யா.மல்லாகம மகா வித்தியாலயம்.

## யார் நீ!

சின்னவனே!
உன் விழிகள் எங்கும்
தனிமையின் நிலை
தாண்டவமாட
இதயமெங்கும் வெறுமை நிலை
நிறைந்து நிற்க - உன்
கரங்கள் மாத்திரம்
கம்பத்தின் துணை தேடி
நிற்கிறதே! இயற்கைகூட
உன்னை மறந்ததேன்?

யோ.பிரஷாந்தி,
யாழ்.பல்கலைக்கழகம்.

## முன்னேறு!

முயன்றால்
முன்னேறலாம்
அயர்ச்சி வேண்டாம் சிறுவனே
இறைவனைத் தியானி
இயற்கையின் சீற்றம்
அடங்கிட வேண்டுமென..

அ.மீனா,
சாவகச்சேரி.



## துணிந்து நில்!

ஏய்குட்டிபையா!
இந்தத் தண்ணீருக்குப்
பயந்தா கட்டின் மேல்
ஏறி நிற்கிறாய் - உன்
வாழ்வில் எத்தனையோ
இன்னல்களை
எதிர்கொள்ளப் போகிறாய்
பயப்படாதே மகனே
துணிந்து நில்.

கை.சர்மிளா,
கொக்குவில்.

## கரைசேர்!

காலைத் தொடும்
தண்ணீர் நாளை
கழுத்து வரைக்கும்
உயரக் கூடும்
தாமதித்துப் பயனில்லை
தைரியமாகத் தாண்டு
நிச்சயம் கரைசேர்வாய்.

அருந்தா,
முடமாவடி.

## புலப்படுகிறதா..?

தரையை விட்டு உயரமான
கட்டின் மேல் ஏறி நின்று
பார்க்கிறாயே தமிழனுக்கு
போகும் இடமெல்லாம்
துன்பம் தொடரும் என்று இறைவன
எழுதிவைத்தானோ?

நா.ரவி,
தாவடி.

## தொடரும் துன்பம்!

வறுமையின் துன்பம் வாட்ட
யுத்தத்தின் துன்பம் வாட்ட
ஓடினேன் வாழ்க்கையின்
ஓரத்திற்கே ஓடினேன் ஆயினும்
இறைவன் வெள்ளத்தின் நடுவே
கம்பத்தோடு நிற்க வைத்து
விட்டான் இச்சிறுவயதில் வந்த
துன்பம் யார்க்கு நான்
உரைப்பேன்.

யாழினி,
கோண்டாவில்.

## நிலையிதுவோ!

மனிதன் சிரிக்க மறந்தாலும்
வானம் சிரிக்க மறக்காது
அதனால் வந்த நிலை தான்
இதுவோ.

## சமாதானக்கொடி!

தாயகத்து பேச்சு
வார்த்தை
தாய்லாந்து மண்ணில்
இயற்கையோடு
பேச்சுவார்த்தை எந்த
மண்ணில்

P.சூர்யா,
இணுவில்.

## நம்பிக்கை!

அலைகடலில் திசையற்று
திகைத்தாயோ
இல்லையெனில்
நிரை கொண்ட வெள்ளம்
நிலை மாற வைத்ததுவோ?
இருப்பினும் சிறு துரும்பும்
தக்கசமயமென பெருதூணே
துணையானதே இன்றுனக்கு
நம்பிக்கை கொள் எதிர்
உண்டு.

தி.ஜெயராஜ்,
நல்லூர்.

பாலா பாலா ஓடி வா
படகு விடுவோம் ஓடி வா!

## வெற்றி நிச்சயம்!

கம்பம் ஏற முனையும் தம்பி நீ ஏறும் போது
சறுக்கி விழ நேரும் கவனம் இயற்கையின்
சீற்றம் உன்னையும் கொன்றிடும்.

பரம் விதுர்சன்,
கல்வியங்காடு.

## வெள்ளம்!

வீடு வாசலை நீரில் மூழ்க விட்டு விட்டு
தனக்கு வாழ இடமன்றி
தெருவோர மின்கம்பத்தில்
ஏறிக் காலத்தைக் கழிக்கும் - சிறுவன்
எப்பொழுதுதான் இந்த வெள்ளம் வற்றிப்போகும்
என்பதை நினைத்துக் கொண்டிருக்கின்றானோ?

அ.அகிலன்,
வெற்றிலைக்கேணி.

## காப்பாற்றுவார்களா...?

வெள்ளத்தில் அள்ளுண்டுபோய்
தூணொன்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டு
வள்ளத்தில் யாரும் வந்து
தன்னைக் காப்பாற்றுவார்களா என்று
உள்ளத்தில் நினைக்கிறானோ இச்சிறுவன்

பரணி.பாதுசன்,
நல்லூர்.

## என்ன பார்வை..!

தனிக் கட்டையாய்
மரக் கட்டை மீது நின்று
குட்டிப் பயலே நீயும்
எட்டிப் பார்ப்பது
மழையால் வந்த வெள்ளம்
வற்றி விடாதோ என்றா?

க.ஆனந்தன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## தவிப்பு!

சிறுபையா
யுத்தத்தின் கொடுமையால்
உன் உறவுகளையெல்லாம்
பிரிந்து தவித்துக்
கொண்டிருக்கும் வேளையில்
இயற்கை கூட உன்
துன்பத்தை நினைத்து
உன்னை விட்டு
வைக்கவில்லையோ?

பொ.சறோ,
சித்தங்கேணி.

## காப்பாற்றுவார்களா!

சிறுவனே
பள்ளி செல்லும் பாதையில்
மழை வெள்ளம்
சூழ்ந்திருந்ததால் யாராவது
வந்து இவ்வெள்ளத்திலிருந்து
காப்பாற்றுவார்களா என்றே
கம்பத்தின் மேல் ஏறிப்
பார்க்கிறாயா.

கஜந்தினி

## இறுமாப்போ..?

சொந்தங்களை தேடி ஓடிப்
போகும் வேளை மழை
வெள்ளம் உன்னை தடுத்ததோ
கம்பத்தில் ஏறியாவது
சொந்தத்தைக் காண்பேன்
என்ற இறுமாப்போ?

மனோகரன்,
கோண்டாவில்.

## சின்னபூவே

சின்னபூவே
மெல்ல வந்த வெள்ளம் கண்டு
மழலை உனக்கு பயமேன்

விஜயன்

## உனக்குக் கூட!

வானமே... உன்னை
வருந்திக் கேட்டோம்
வரட்சியைப் போக்க
நீ... துளிக்கவேயில்லை
இருந்தும் ஏதோ
இயல்பாய் ஆனோம்
இப்போதுதான்...
எம் இல்லங்கள் அழிக்க
இடம் தேடி வந்தாய்
ஏன்? உனக்குக் கூட
எந்தன் பிஞ்சு மனதைப்
பிடிக்கவில்லையா...?

சூரியநிலா,
ஈச்சமோட்டை.

## மௌனத்தின் தேடல்கள் 30



அன்பின் வாசகர்களே, உங்கள் எண்ணத்தில் தோன்றும் உன்னத வெளிப்பாடுகளை மிகச்சிறிய கவிதைகளாக்கித் தபால் அட்டையில் சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

முடிவுத்திகதி :- 05.10.2002

அனுப்ப வேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள் -30
சங்குநாதம்,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்

## அன்பே சொல்!

மரணத்திலும்
கொடிது
பிரிவு என்றால்
நான்
எத்தனை முறை
மரணித்திருப்பேன்
அன்பே சொல்.....!





## காதல் கணக்கு !



உன்னை
நான் மனப்பூர்வமாக
காதலிப்பதால்
என் காதலை
உனக்குக் கொடுத்து
என்இதயப்பேரேட்டிலுள்ள
காதல் கணக்கில்
செலவு வைத்தேன்
அடி பெண்ணே!
இன்றுவரை
நீ மௌனமாக
இருப்பதால்.....
உன் காதலை
எனக்குத் தரவில்லை
ஆகையால்
இதயப் பேரேட்டிலுள்ள
என் காதல் கணக்கு
வரவுப் பக்கத்தால்
சமப்படாமல் மீதியாக
அல்லவா இருக்கின்றது
என் இனிய காதலியே!
வரும் நிதி (காதல்)
ஆண்டிலாவது
என்னைத் தவிக்க விடாது
உன் மௌனத்தைக்
கலைத்து - என்
காதல் கணக்கை
சமப்படுத்துவாயா?

ஆ.டின்ஸ்ராஜ்,
இராசாவின் தோட்டம்.

## உள்ளம் தேடும் உயிர் நட்பு!



மனதிற்குள் சஞ்சரித்த ஓராயிரம்
நினைவுகளில், உன்னால்
நெறிப்படுத்தப்பட்ட உன்னத உணர்வு
எந்த வேளையிலும் ஏக்கம்
கலைந்திட எனக்குக் கிடைத்த
மறக்க முடியாத உயிர் நட்பு
நேர்மையில் கௌரவம்
நிதானத்தின் நிழல்கள்
என் இரு விழிகளுக்குள்
விதித்த வாழ்வை விரும்பிக்
கேட்கின்றேன் பிரிவு வேண்டாம்
நண்பனே!
பிரிவு வந்தாலும்
மறக்க நினைப்பினும் – நீ
ஒரு கணம்
என் உண்மை அன்பையும்
உனக்காகத் துடிக்கும்
என் இனிய உறவையும்
நினைக்க மறக்காதே
மறக்க நினைத்து விட்டால்
என் இரு விழிகளுக்குள்ளும்
அலை பொங்கும் ஆழியாய்
மாறி எனதுயிர் அஸ்தமிக்கும்
ஆனாலும் உன் மன வானில்
நானும் சிறகடிப்பேன்
தினமும்
உன் வாழ் நாளில்
மன வோடைதனில் ஊற்றாக
பாயவிட்டு எனை நீ
நேசிப்பாய் என நம்புகின்றேன்.

*S.ஜெகத்தி,*
*யாழ்பல்கலைக்கழகம்.*

## வார்த்தையடி!



*வலிபத்தைத் தூண்டிய வார்த்தையடி*
*என்னை வாழச் சொன்னது உன் கண்ணடி*
*வாயில் வரை முன்வைத்த உன் காலடி அது*
*என்னை வாழ வைத்ததடி*


*போன ஜென்ம பந்தமடி*
*பொத்தி வைத்த ஆசையடி*
*போலியற்ற காதலடி - உன்*
*கழுத்தில் தருவேன் தாலியடி*

*அன்பு கொண்ட நெஞ்சமடி*
*அள்ளி அணைக்கத் துடிக்குதடி*
*கனம் சுமக்கும் இதயமடி*
*உனக்காக இன்னும் இயங்குதடி*

*காதல் கொண்ட காளையடி - உன்மேல்*
*காமம் அறியாப் பாவியடி - அதனால்*
*நீ தந்தாய் எனக்கு சாவினடி - அதுவே*
*என் வாழ்வை முடிக்கும் - "நோ"*
*எனும் உன் வார்த்தையடி.*

*பி.யானுஜன், பாஷையூர்.*

## கறைபடிந்த கவிதைகள்!



நீண்டநாள் ஏக்கம்
நிறைவேறிய மகிழ்வில்
என்னூரைப் பார்க்க
எழுந்தோடிப் போனேன்
வளங்கொளித்த தீவகத்தாய்
வாழ்விழந்த விதவையைப் போல்
அமங்கலமாய் இருப்பதனை
கண்ட என் கண்கள்
கண்ணீர் சிந்தின
உவர்ப்பு நீர் என்றாலும்
உரிமையுடன் பருகும்
எங்களூர் கிணறுகள்
சாக்கடைத் தொட்டிகளாய்
நுளம்புகளின் இருப்பிடமாய்
மாறியதைச் சொல்லவா?
பார்த்துப் பார்த்து வண்ணம்பூசி
பக்குவமாய் வைத்திருந்த
எம்வீட்டுத் திண்ணையெல்லாம்
எருக்காடாய் மாறியதை
என் வாய் திறந்து சொல்லவா?
கள்ளிகள், முள்ளிகள்
காரைகள் சூரைகள்
என் காலைப் பதம் பார்க்க
வாய் விட்டலறியதை
வார்த்தைகளில் சொல்லவா?
எங்களூர் கால்நடைகள்
கட்டாக் காலிகளாய்
காடெல்லாம் அலைவதைச்
சொல்லவா? இல்லை
பசுவென்றும் பாராமல்
பரிதாபமாய் இறைச்சிக்கு
பலியிடப்படுவதைச் சொல்லவா?
என்ன சொல்ல? ஏது சொல்ல?
என்னூரைப் பற்றிச் சொல்ல
என்னிடம் இருப்பதெல்லாம்
கறைபடிந்த கவிதைகள் தான்!

இ.ஷோபனா, வேலணை.

## வந்து விடு சமாதானமே!



மறைந்து போன சமாதானமே
மானிடர்கள் நாங்களும்
ஆதாம், ஏவாளின் பரம்பரையில்
அவதரித்தவர்களே தான்,
தெரியாமல், புரியாமல் நாங்கள்
தவறுதலைச் செய்து விட்டோம்
இதற்குத் தகுந்த தண்டனையை
எமக்குத் தந்திடத்தான் வேண்டும்
அதற்காய் சமாதானமே - நீயோ
ஆண்டாண்டுகாலங்களாய் ஓடி
மறைந்து கொண்டிருப்பது உந்தன்
மனசாட்சிக்குச் சரிதானா,
அழைக்கும் முறைகளிலெல்லாம்
அழைத்தும் பார்த்து விட்டோம்
தேடாத இடமெல்லாம் உன்னைத்
தேடித் தேடித் துவண்டுபோனோம்
மனிதர்கள் இம்மண்ணை விட்டு
மாண்டு போன பின்னர்
சமாதானமே நீ வந்தாயானால்
சற்றும் உனக்கு மதிப்பேயில்லை.
மானிடர்கள் மத்தியில் தானுனக்கு
மதிப்பும் உண்டு
யுத்த நிறுத்த தூதுவனை - நீ
மக்கள் மத்தியில் அனுப்பி விட்டு
நீ மட்டும் ஒழித்திருக்க வேண்டாம்
எங்கிருந்தாலும் வந்துவிடு சமாதானமே.

*நியாயவாதி.*

## மாற்றம்!

*அவள் பார்வைகளால்*
*என்னில் பல*
*பௌதிக மாற்றங்கள்*

*இதயச் சுவரெங்கும்*
*இரசாயன மாற்றம்*

*சமிபாடு கண்களில்*
*விழிகளாகியது உள்ளம்*



*சுவையை அறிந்தது*
*இதயம்*

*ஈற்றில் ..........*
*உயிர்க் கலங்களால்*
*உருவான நான்*
*உயிர் அற்ற*
*சடப்பொருளாகி*
*விட்டேன்.*

...நாந்த்.

## மரணம் வெல்லலாமோ!

அருகில் தினமிருந்து
அன்பையள்ளித் தந்து
ஆசை வார்த்தை சிந்தி
அருமையுறவாய் ஆக
மனமும் துடித்திருக்கு...!

மரணம் வெல்லலாமோ...?
மலர்ச்சி கொண்டவுள்ளம்
மலர்ந்தவுறவில் நாளும்
மகிழ்ச்சி கொண்டு வாழ
மார்க்கம் தேடலாமோ

மாயம் செய்வோர் முன்னே
மாய்ப்போம் வேஷமென்றே
நெஞ்சு நிமிர்த்தி நாளும்
நேர்மை கொண்டேயிங்கு
வாசம் கொள்ளலாமே...

வாதமற்ற மனமும்
வருத்தமில்லாவுறவும்
நெருக்கம் கண்டு நாளும்
உருக்கம் கொண்டு தானே
உறவாய் இருக்க வேண்டும்?

தொலைவில் எங்கேயப்பா
தொலையும் உண்மைச்
சொந்தம்..?
தொல்லை வந்தால் கூட
மனதில் வாழ வேண்டும்
மரணம் வென்று ...னும்..!

## நட்பாய் ஒரு பிரிவு!

*நடந்த பாதையில்*
*நனைந்த நட்பு இன்று*
*பாதைகள் பிசகி*
*பரிதவிக்கிறது*
*பரிவைப் பருக்கி*
*வளர்த்த பாசம் இன்று*
*பிரிவைப் பிசைந்தபடி*
*ஏன்? நட்பு கட்டிக்காத்த*
*இதயத்தை நம்பிக்கை*
*குத்திக் குதறியது*
*உயிர் தந்த சொற்கள் இன்று*
*உருக்குலைந்த உடலைப் போல்*
*ஓய்ந்து கிடக்கிறது உயிரற்று*
*தூக்கிலிடப்பட்டுத் துடிக்கும்*
*நம் நட்பைப் பார்த்து என்*
*இதயமும் சிதறியபடி*
*சிதிலமாய்*
*எனக்குள்ளேயே..........!*

பூ.சாவித்திரி,
இராமநாதன், நுண்கலைக்கழகம்.

## பரிசு!

*ஒன்று மட்டும் புரிகிறது*
*என் கவியை வாழவைக்க*
*உன் காதலைப்*
*புதைத்து வைக்கிறாய்*



*உன் வருகை*
*என் வாழ்வின்*
*வசந்தம் என்பது*
*உனக்குத் தெரியும்*
*இருந்தும் ஏன்*
*தாமதம்?*

*உன் பிரிவு*
*என் வாழ்வின்*
*புயல் என்பது*
*உனக்குப் புரியும்*
*இருந்தும் ஏன்*
*மறுப்பு?*

*என் தேடலுக்குள்*
*நீ தேர்ந்தெடுக்கப்பட்டவன்*
*மீண்டும் ஏன்*
*என்னைத்*
*தேடவைக்கிறாய்?*

*என் வெற்றிகளுக்கு*
*மார்பு தட்டியவன் நீ*
*தோல்வியறியா என்னை ஏன்*
*தோற்க வைக்கிறாய்?*

*என் கவிப் பரிசுகளை*
*உன் காதலுக்காய்*
*என்றும் தருவேன்*

*பாரதி கண்ணம்மா,*
*யாழ்ப்பாணம்.*

## உயிரில் முடியும் காதல்!



*என் இதயத்தில் கால் பதித்தவளே...*
*அங்கே நீ....*
*ஒவ்வொரு நொடியும்*
*கண் இமைத்து மூடும்பொழுது தான்*
*இங்கே. என்*
*இதயப்பையும் இசைக்கிறது*
*இதயராகமே...*
*நீ விடும் மூச்சுக்காற்றைத்தான் - நான்*
*சுவாசித்துக் கொண்டிருக்கிறேன்*
*கண்களில் ஆரம்பித்து*
*இதயத்தில் முடியும் காதல் ... வேறு*
*இதயத்தில் ஆரம்பித்து*
*கண்களில் முடியும் காதல்*
*வேறு*
*எம் காதல்*
*உயிரில் ஆரம்பித்து*
*உயிரில் முடியும் காதல்.*

*S.அன்ரனி சசி,*
*கோப்பாய்.*

# விரக்தியின் விளிம்பில்.....!

**சிறுகதை**

முடிவற்று நீண்டு கொண்டிருந்த அந்த வீதியையே வெறித்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள் ப்ரியா. இன்று நேற்றல்ல சில தினங்களாகவே அவளது பார்வை சில எதிர்பார்ப்புக்களைச் சுமந்தனவாகவே அமைந்திருந்தன.

''ஏன் இத்தனை நாட்களாகக் காணவில்லை....... ஒரு வேளை சுகயீனமாக இருக்குமோ?''

இப்படி மனதுக்குள் எழுந்த வினாக்களிற்கு விடை காண முடியாமல் அவனின் வருகைக்காகவே அவள் காத்திருந்தாள்.

ப்ரியா வசதியான குடும்பத்திலே பிறந்தவள். இப்போது அவளிற்கு 22 வயதுகளே ஆகியிருந்தன.

ப்ரியாவின் அப்பா வேலுப்பிள்ளை நகரில் பெரிய கடை வியாபாரியாக இருந்தவர். அவளிற்கு ஐந்து வயதாக இருக்கும்போதே மாரடைப்பினால் இறந்து விட்டார். தந்தையில்லாமல் தாயின் அரவணைப்பிலே வளர்ந்த அவளிற்கு உடன் பிறந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ள யாருமே இருக்கவில்லை.

பள்ளியிலே பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த போதுதான் அவளின் வாழ்வில் பெரிய இடி விழுந்தது.

அன்று வழமை போலவே ப்ரியா பள்ளிக்கூடம் போயிருந்தாள். தாய் மரக்கறி வாங்குவதற்காகச் சந்தைக்குப் போய்க் கொணடிருந்தவள் அடுத்த தெருவைக் கடக்க முயன்ற போது வீதியிலே வேகமாக வந்து கொண்டிருந்த லொறி அவளை நசித்து விட்டு விரைவாகச் சென்றது. இரத்த வெள்ளத்திலே மூழ்கிக்கிடந்த கனகம்மாவின் உயிர் ஊசலாடியது.

கனகம்மாவின் உயிரைக் காப்பாற்றுவதற்காக விரைவாக வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர் வீதியில் நின்ற சிலர். இருந்தும் எந்தப்பலனும் கிடைக்கவில்லை. வழியிலேயே கனகம்மாவின் ஆவி பிரிந்து விட்டது.

கனகம்மா வீதியில் விபத்துக்குள்ளாகி விட்டார் என்ற செய்தி ப்ரியாவின் காதுகளிற்கு எட்டவே அதிபரிடம் சொல்லி விட்டு புத்தகப்பையையும் மறந்து வீதிக்கு ஓடி வந்தவளின் முன்னே பக்கத்து வீட்டுக்கார ப்ரமசிவம் நின்ற போது.

''அங்கிள் என்ர அம்மாவுக்கு என்ன ஆச்சுது?....'' என வீரிட்டுக்கத்தியவளைத் தேற்றிய அப்பெரியவர் தாயிறந்த விடயத்தை வீட்டிற்குக் கூட்டி வந்த பின்பே கூறினார்.

அன்றிலிருந்து பேசத் தெரிந்தும் பேச முடியாத ஊமையாகி விட்டாள் ப்ரியா. அவளிற்குத் தெரியாத பலர் துக்கம் விசாரிக்க என வந்தார்கள். பின்னர் சொந்தம் என்று சொன்னார்கள். அது மட்டுமா வீட்டில் உள்ள பொருட்களை எல்லாம் பின் பக்க கதவினால் கொண்டும் செல்லத் தொடங்கினார்கள். இவை அனைத்தையும் கண்டும் காணாதவளாகவே இருந்தாள் ப்ரியா.

''அம்மாவே போயிற்றாவாம் இனி என்ன போனத்தான் என்ன?'' மனதினுள் நினைத்துக் கொண்டு மௌனமாகவே இருந்து விட்டாள் அவள்.

கள்ளங்கபடமற்ற உள்ளத்துடன் விபரம் தெரியாமல் வளர்ந்தவள் ப்ரியா. ப்ரியாவின் சிறுபிள்ளைத் தனத்தை சாதகமாக்கி தாயிறந்து ஒரு வாரத்திற்குள் வீட்டுப் பொருட்களை எல்லாம் காலியாக்கி விட்டார்கள் வந்து போனவர்கள்.

ப்ரியாவின் நாலைந்து உடைகள் மட்டும் கொடியிலே தொங்கிக் கொண்டிருந்தன. சுற்றும் முற்றும் பார்த்தாள். யாரும் இல்லை. உண்பதற்கோ எதுவுமில்லை. தாயை நினைத்தாள். கண்களில் இருந்து நீர்பெருகின. தன்பாட்டிலேயே பெரிதாகச் சத்தமிட்டுச் சிரித்தாள்.ஏதோ முணுமுணுத்தாள். பைத்தியம் பிடித்தவள் போல அங்குமிங்கும் நடந்தாள்.

வீட்டிற்கு வெளியே வந்தாள். மூலையில் கிழிந்தபடி ஒரு உரப்பை மட்டும் பின்கோடியிலே கிடந்தது. அதை எடுத்து அறைக்குள் கொண்டு வந்து கொடியிலே கிடந்த உடுப்புக்களை அடைந்து கொண்டு வீதிக்கு வந்தாள் ப்ரியா.

ஒரு மைல் தூரம் நடந்தவள் களைப்பினால் நிமிர்ந்த போது ஆலமரம் ஒன்று ஆறுதலளித்தது. அன்றிலிருந்து இன்று வரை அந்த ஆலமரத்தையே தன் இருப்பிடமாக்கிக் கொண்டாள் அவள்.

ஆலமரத்தடியில் இருந்தால் வீதியால் செல்பவர்கள் சிலர்அவள் விரித்து வைத்திருக்கும் கடதாசித்தாளில் சில சில்லறை ரூபாய்களை போட்டு விட்டுச் செல்வார்கள். சில வேளை யாருமே பணம் கொடுக்கா விட்டால் முன்னால் உள்ள ராசா கடைக்காரர் தான் ஏதாவது சாப்பிடக் கொடுப்பார். கேட்டு வாங்கத் தெரியாதவளாகவே ப்ரியா இருந்தாள்.

பதினைந்து வயதில் வீட்டை விட்டுக் கிளம்பியவள் ஏழு வருடங்களிலே நன்றாக மாறிப் போய்விட்டாள்.

ப்ரியா மெல்லிய - உயரமான- சிவந்த தோற்றம் உடையவளாக இருந்தவள். செல்லமாக வளர்ந்தவள். அவள் எதிர்காலம் பற்றி ஊரார் எப்படி எப்படியோ எல்லாம் பேசிக் கொண்டார்கள். அந்தளவிற்கு வேலுப்பிள்ளையிடம் சொத்து இருந்தது.



ஆனால் இன்று ப்ரியாவின் நிலை. வெண்ணிற வதனம் வாடி கருமை படர்ந்திருந்தது.அவளுடைய நீண்ட கருங்கூந்தல் எண்ணை படாமல் புலுட்டைபத்தி இருந்தது. உடம்பில் ஒரு இஞ்சித் தடிப்பிலே அழுக்கிருக்கும். உடல் தண்ணீரைத் தேடிக் கொண்டிருந்தது. பத்தாக்குறைக்கு வீதியிலே கிடக்கின்ற தகரப் பேணிகள், கிழிந்த கடதாசிகள், நூல்கள் போன்றவற்றை எடுத்து உரப்பையிலே நிறைத்து வைத்திருந்தாள். தான் போகுமிடமெல்லாம் கூடவே அவற்றையும் இழுத்துக் கொண்டே செல்வாள்.

கடைக்காரர் ராசாவின் மனைவி மங்களம் ப்ரியா மீது அனுதாபம் காட்டினாள். ப்ரியாவும் மங்களத்தைப் பார்க்கும்போதெல்லாம் தன் தாயையே நினைத்துக் கொள்வாள்.

ப்ரியாவின் கோலத்தை மாற்றி அவளை நல்ல நிலைப்படுத்த வேண்டும் என்பதில் மங்களம் அக்கறை கொண்டிருந்தாள்.

ப்ரியா குளிக்கேல்லையாம்மா...? எனப் பரிவோடு மங்களம் கேட்டால் ''ம்'' என்று மட்டுமே சொல்லுவாளே தவிர எதுவுமே கதைக்கமாட்டாள்.

மங்களம் விடாப்பிடியாக அவளைக் கூட்டிச் சென்று இரண்டு மூன்று தடவைகள் குளிக்க வைத்திருக்கிறாள். தன் பிள்ளைகளின் பழைய ஆடைகளை எல்லாம் ப்ரியாவிற்கே கொடுப்பாள்.

ஆனால் ப்ரியாவிற்கு எல்லாமே ஒரு நாளைக்குத் தான் மறுநாள் அவளைப் பழைய கோலத்தில் காணலாம்.

அன்று புதன்கிழமை கோயிலடிப்பக்கம் சென்று விட்டு தன் உரப்பையுடன் ஆலமரத்தடிக்கு வந்து சேர இருட்டி விட்டிருந்தது. ராசா கடைக்காரரும் கடையைப் பூட்டி விட்டிருந்தார். வழமையாக ஒன்பது மணிக்குப் பின்பே கடை பூட்டுபவர் ஏனோ அன்று நேரத்துடனேயே பூட்டிச் சென்று விட்டார். வீதியிலும் சனநடமாட்டம் இருக்கவில்லை.

அப்போது இரவு ஏழுமணி கூட ஆகியிருக்காது. ஆனால் இருட்டாகவே இருந்தது.

ப்ரியா கோயிலடியில் கிடைத்த புக்கைக் கட்டிகளைச் சுவைத்துக் கொண்டிருந்தாள். திடீரென அவள் கையிலிருந்து புக்கைக் கட்டிகளைத் தட்டி விட்டு அவளுடைய கைகளை ஒருவன் இறுகப்பற்றினான். அவன் நன்றாக மது அருந்தி இருந்தான். அதனால் தன் நிதானத்தையும் இழந்திருந்தான்.

இத்தனை நாட்களாக மௌனமாக இருந்தவள். தன்னுடைய வீட்டுப் பொருட்களை எல்லாம் அபகரித்து தன்னை நிர்க்கதியாக்கிய போது பேசாமல் இருந்தவள் இன்று தன்னையே அபகரிக்க நினைக்கிறார்கள் இந்த மனிதர்கள் என நினைத்தவள்

'' என்னக் காப்பாத்துங்கோ.... காப்...பா...த்துங்....கோ'' அவன் வாயைப் பொத்தியும் அவள் அலறுவது கேட்டது.

அன்று மாலை வகுப்பு முடிய நேரமாகி விட்டதால் சைக்கிளை ஊன்றி உழக்கியபடி வேகமாக வந்து கொண்டிருந்தவனின் காதுகளில் ஒரு பெண்ணின் கதறல் கேட்ட போது சைக்கிளை அப்படியே போட்டு விட்டு ஓடி வருகின்றான்.

ஒரு பெண்ணை ஒரு ஆண் வீதியில் வைத்து அசிங்கப்படுத்துவது அவனுக்குத் தெரிந்தது. அப் பெண்ணின் கையைப் பிடித்தவனின் கன்னத்தைப் பதம் பார்த்தான். அப்பெண்ணிடம் மன்னிப்புக் கேட்கும் படியும் கூறினான் அவன்.

'' என்ன மன்னிச்சுக் கொள்'' கூறியவன் அவ்விடத்திலேயே நிற்காமல் ஓடி விட்டான்.

தன் [illegible]

ய வன் [illegible]

தைப் பார்த்தாள்.

ரஞ்...சி...த்

வாசித்து முடிப்பதற்குள் அவளின் முன்னே அவனே வந்து நின்றான்.

''என்ர அடையாள அட்டையை நேற்று விழுத்திற்றுப் போட்டன்''கூறியவன் அவளின் தோற்றத்தைக் கண்டு எட்ட நின்றான்.

கையில் இருந்த அடையாள அட்டையை நீட்டினாள் ப்ரியா. தன் அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டு நிதானமாக விடை பெற்றான் ரஞ்சித்.

அன்றிலிருந்து அறிமுகமானவன் தான். தினமும் காலையும் மாலையும் அந்த வீதியால் தான் வேலைக்குப் போய் வருவான். அரசாங்கப் பாடசாலை ஒன்றில் ஆசிரியராகக் கடமையாற்றுபவன் மாலையில் தனியார் கல்வி நிலையத்திலும் கற்பிப்பவன்.

இதனால் அவ் வீதியால் போகும் போதும் வரும் போதும் ப்ரியாவைக் காண நேர்ந்தது. காணும் போதெல்லாம் அவளைப் பார்த்து புன்சிரிப்பொன்றை வீசி விட்டே செல்வான்.

ப்ரியாவும் தன்னை மாற்றிக் கொள்ள ஆரம்பித்தாள். இவ்வளவு காலமாக அர்த்த மற்றுக் கழிந்து கொண்டிருந்த வாழ்வில் அவளிற்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டது.

ஆனாலும் அவளிற்கு அவ்வூரில் கிடைத்த ''விசர்'' என்ற பட்டம் மட்டும் மறைய வில்லை.

ப்ரியாவின் இந்த மாற்றம் ஊராரை மட்டுமல்ல மங்களத்தையும் வியக்க வைத்தது.

நாட்கள் வாரங்களாகி - வாரங்கள் மாதங்களாகியும் விட்டன. அவன் வரும் போதும் போகும் போதும் அவளைப் பார்ப்பதும் - சிரிப்பதுமாகவே செல்வான்.

''ப்ரியா என்ன நல்லா மாறிப் போயிற்றா ஏதும் விஷேசமே......?''

மங்களம் கேட்ட போது மௌனமாகப் புன்னகைத்தாள் ப்ரியா.

சில தினங்களாக அவன் வீதியால் வருவதில்லை. அவரைப் பற்றித்தான் ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அவளின் வினாக்களிற்கும் ஆதங்கத்திற்கும் விடையளித்தார்கள் அவ்வீதியால் வந்த பள் ளிக் கூடப் பிள்ளைகள்.

''வதனி..... ஏனடி ரஞ்சித் சேர் வாறேல்ல?

அவர் இனி வரமாட்டாராம். வெளிநாட்டுக்குப் போறத்துக்கொண்டு கொழும்பில போய் நிற்கிறாராம்.

ஏன்டி....? என்ன விஷேசம்? ரஞ்சித்சேருக்கு வெடிங்காம் எண்டு முதலேகதைச்சவை தானே!

அப்பிள்ளைகள் கதைத்துக் கொண்டு வீதியைக் கடந்த போது ப்ரியாவின் நெஞ்சுக்குள் என்னமோ செய்தது.

அதிர்ந்து போனாள் ப்ரியா. இப்படி ரஞ்சித் போவான் என அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அப்படிப் போயிருந்தாலும் எனக்குச் சொல்லாமல் போயிற்றாரே!

அந்த அயோக்கியனிடம் இருந்து என்னைக் காப்பாற்றினாரே! ஒரு வேளை அவர் என்னில் பரிதாபப்பட்டுத்தான் காப்பாற்றினாரோ!

மனதினுள் எழுந்த வினாக்கள் எதற்குமே விடை காணமுடியாதவளாய் திகைத்து நின்றாள் ப்ரியா.

''எனக்கென்று யாரிருக்கிறார்கள்?'' என நான் நினைத்த போது இதோ உனக்காக நான் இருக்கிறேன் என்பது போல என்னைக் காப்பாற்ற வந்தவன் கூட இன்று இல்லை எனும் போது நான் யாருக்காக இருக்கிறேன்?

இந்த உலகத்திலே எனக்கென்று சொல்லிக் கொள்ள எதுவுமேயில்லை என்னுரைப்பையைத் தவிர'' கண்களில் இருந்து முத்து முத்தாகக் கண்ணீர் வழிந்தது.

மரம் போல உணர்வுகளைக் கல்லாக்கிக் கொண்டு விரக்தியின் விளிம்பில் நின்ற அவளை பள்ளிச் சிறவர்கள் சிலர் ''எடி விசரி'' எனக் கத்தியவாறு கற்களைப் பொறுக்கி எறியவே நெற்றியில் விழுந்த கல் எறியினால் நெற்றி உடைந்து குருதி வழிந்தது.

ஏமாற்றமும் - வேதனையும் ஒன்று சேரவே அந்த ஆலமரத்தின் கீழ் உருண்டு - புரண்டு தன் ஆடைகளை எல்லாம் முன்பு போல் கிழித்துக் கொண்டவளாய் ''ஓ.....'' வென்று கத்தி அழவும் தொடங்கினாள்.

நீங்களே சொல்லுங்கள்? அவளிற்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா....?

* * *

ஜீ. சுபத்திரா






# உடலுக்குத் தேவையான விற்றமின்கள்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

விற்றமின் 'பி1' என்பது விற்றமின் 'பி' பிரிவுகளிலேயே மிகவும் முக்கியமானது. சரியான அளவு விற்றமின் 'பி-1' எடுத்துக் கொண்டால் நம் உடலின் அனைத்துப் பகுதிகளும் சரியாக இயங்கும். ரொட்டி உள்ளிட்ட அனைத்து கோதுமை உணவுகள், கோதுமை சாதம், மீன் மற்றும் பீன்ஸ் ஆகியவற்றில் விற்றமின் 'பி' சத்துக்கள் ஏராளம்.

'பி-2' என்ற 'ரிபோஃப்ளேவின்' வாய், நாக்கு மற்றும் நம் உடல் சருமத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவுகிறது.

நம் உடலுக்குத் தேவையான சக்தியை உருவாக்க மற்றும் பல்வேறு ஊட்டச் சத்துக்களிலிருந்து சக்தியை வெளியிட, பல்வேறு என்சைம்களுடன் கூட் டு சேர்ந்து, சக்தி உற்பத்தியில் செல்கள் ஒட்சிசனை பயன்படுத்த, இந்த விற்றமின் 'பி' பெரிதும் உதவுகிறது.

பால், வெண்ணை, முட்டை, பச்சைக்காய்கறிகள், கோதுமை, தானியத்திலிருந்து பெறப்பட்ட மாவகைகள், ஆகியவற்றில் இந்த 'பி-2' சத்து அதிகம்.

அடுத்ததாக விற்றமின் 'பி' பிரிவில் முக்கியமானது 'நியாசின்' என்ற 'பி' விற்றமின். இது ஜீரண மற்றும், நரம்பு அமைப்புகளை பாதுகாக்க உதவுகிறது. ஆரோக்கியமான சருமப்பாதுகாப்பிற்கும் இந்த விற்றமின் பயன்படுகிறது. மேலும் பெருங்குடல், சிறுகுடல்,



வாய், நாக்கு இவற்றின் 'சளிச்சவ்வில்' ஏற்படும் வீக்கத்திலிருந்து இந்த விற்றமின் 'பி-நியாசின் பாதுகாப்பு அளிக்கிறது.

மீன், காய்ந்த பீன்ஸ்களில் 'நியாசின்' அதிகமாகக் கிடைக்கிறது.

விற்றமின் 'பி-2' செல்களின் மரபியல் சார்ந்த வளர்ச்சிக்கு பெரிதும் தேவைப்படும் விற்றமின். எலும்பின் உள்ளே இருக்கும் மெல்லிய கொழுப்பில் சிவப்பணு செல்களின் வளர்ச்சியை ஏற்படுத்த இது பெரிதும் உதவும் விற்றமினாகும்.

ரத்தத்தில் இருக்கும் விற்றமின் 'பி' ரத்த சோகையை தடுக்கிறது. விற்றமின் 'பி-12'. இது இறைச்சி, மீன், முட்டை, யீஸ்ட் மற்றும் பால் புரதப் பொருட்களில் பெரிதும் காணப்படுகிறது.

விற்றமின் 'டி' தவிர மற்றவை எல்லாமே தாவர உணவிலிருந்தே நமக்குகிடைக்கும்.

# நம்பினால் நம்புங்கள்!




அதிசயம், ஆனால் சத்தியமாக உண்மை. ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்த உண்மைகள் இவை. இதில் இருப்பதெல்லாம் உங்களுக்கு ஏற்கனவே தெரியாது என்றால் வெட்கக் கேடு!

- சுவற்றில் உங்கள் தலையை முட்டிக் கொண்டால் ஒரு மணி நேரத்திற்கு 150 கலோரிகள் செலவாகும்.
- ஒரு ஸ்டாம்ப்பை நக்கினால் அதில் ஒரு கலோரியில் 10இல் ஒரு பங்கை விழுங்குகிறீர்கள். (பத்தாயிரம் கோடி ஸ்டாம்ப்களை நக்கினால் யானை பலம் வருமோ ?)
- உடம்பிலேயே ரொம்ப வலுவான தசை ? நாக்கு !
- கண்ணைத் திறந்துகொண்டு தும்முவது சாத்தியமில்லை.

*(தொடரும்.....)*

# வெனிலா கேக்



*தேவையான பொருட்கள் :*

மைதா மாவு : 1kg
சீனி :500g
வெண்ணெய் : 125 g
முட்டைகள் : 5
பேக்கிங் பவுடர் :1 தேக்கரண்டி
எசன்ஸ் (வெனிலா) : 2 தேக்கரண்டி
முந்திரி, ப்ளம்ஸ் : தேவையானளவு

## *செய்முறை:-*

வெண்ணெயையும், சீனியையும் சேர்த்து நன்றாகக் கலவை செய்ய வேண்டும். முட்டைகளின் வெண் கலவைத் தனியாகப் பிரித்து நுரை பொங்க அடித்துக் கலக்க வேண்டும்.

அதே போல மஞ்சள் கருவையும் நுரை பொங்க அடித்துக் கலக்கி, பின் இரண்டையும் ஒன்று சேர்த்து அடிக்க வேண்டும். மைதா. மாவு; பேக்கிங் பவுடர் இரண்டையும் கலந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

பின்னர் மேலே கூறிய கலவைகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கலந்து அடித்து, அதோடு எசன்ஸையும் சேர்த்து நன்றாகப் பிசைந்து கலக்கிக் கொள்ள வேண்டும்.

கலவைகளைக் கிண்ணங்களில் ஊற்றி, முந்திரி, பிளம்ஸ் போன்றவற்றை மேலே தூவி பேக் செய்ய வேண்டும்.

# பொடுகை அகற்ற

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

நிவாரணங்கள் :

ஆன்டி செப்டிக் தன்மை நிரம்பிய மூலிகைகளால் உருவான ஆயுர்வேத எண்ணெயை (அதில் வேப்பிலை, வெந்தயம், துளசி ஆகியவை கலந்தது) முடியின் வேரில் மென்மையாக அழுத்தித்தடவவும்.

அதே ஆன்டிசெப்டிக் எண்ணெயை முழுத் தலையிலும் சீராகத் தடவவும்.

வெந்நீரில் டவலை ஊற வைத்து, பிறகு நீரைப் பிழிந்து விடவும். சீராக நீராவி முடிகளுக்குள் செல்லுமாறு அந்த டவலை தலையில் கட்டவும்.

5 லிருந்து 10 நிமிடம் வரை அதை உலர விடவும்.

பொடுகு அகற்றுவதற்காக விசேஷமாக தயாரிக்கப்படும் ஒரு கலவை :

ஒரு கப் மருதாணியில் நெல்லிக்காய், சீயக்காய் ஒரு தேக்கரண்டி, வெந்தயம், வேப்பிலை, துளசி அரை தேக்கரண்டி எல்லாவற்றையும் பொடியாக கலக்கவும், எல்லாவற்றையும் தயிரில் கலந்து அல்லது பாதி எலுமிச்சை துண்டின் சாறுடன் கலந்து ஒரு கலவைய்யை தயார் செய்து



கொள்ளவும். இதை தலை முழுக்கத் தடவி ஒரு மணி நேரம் வரை வைத்திருக்கவும். இப்பொழுது இந்த ஆயுர்வேத ஷாம்புவால் தலையை கழுவிக் கொள்ளவும். இதை வாரத்திற்கு ஒரு முறைஎன 3 மாதங்கள் வரை தடவவும். இதனால் நிச்சயமாக பொடுகு விலகும். இதற்குப் பிறகும் தலையில் பொடுகு ஏற்பட்டால் உங்கள் உடல் கோளாறு தான் இதற்குக் காரணம். எனவே உங்கள் மருத்துவரை கலந்து ஆலோசிக்கவும்.

*S.அனுஷா*

# சமையலறை டிப்ஸ்

**சமையலறையில் வீணாகச் செலவழியும் நேரத்தையும் சக்தியையும் முறைப்படுத்தி, அவசிமான குடும்பக் கடைமைகளை நிறைவேற்றிக் கொள்ள இதோ சில டிப்ஸ்கள்.....**

**♦ போத்தல் - டப்பாக்களின் வெளிபபுறத்தில் அவற்றில் இடப்பட்டுள்ள பொருட்களின் பெயரைக் குறிப்பிட்டு சிறு துண்டுச் சீட்டுகளில் எழுதி, ஒட்டி விட்டால் சமையலின் போது எளிதாக அடையாளம் கண்டு எடுத்து உபயோகிக்க ஏதுவாக அமையும்.**

**♦ சமையலறையிலேயே பாத்திரங்களைக் கழுவிக் கொள்ள வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் பாத்திரங்களைக் கழுவ குளியலறைக்கோ அல்லது வெளிக்கோ செல்லும் அலைச்சலைத் தவிர்த்துக் கொள்ளலாம்.**

**♦ மின்சார - அரைக்கும் இயந்திரங்களை கூடுமானவரையில் சமையலறையிலேயே பாவிக்கத் தக்க வகையில் மின்சார பிளக்குகளை பொருத்திக் கொள்ள வேண்டும்.**

*இ. அருந்ததி*

# இயற்கை தந்துள்ள



*எலுமிச்சம் பழம்*

# அழகு சாதனங்கள்!

தினசரி புதுப்புது அழகு சாதனங்களின் விளம்பரத்தை நாம் பார்க்கிறோம். எது உங்கள் சருமத்துக்கு தீங்கு விளைவிக்காதது, எதை வாங்கினால் நீங்கள் விரும்பும்பயன் கிடைக்கும் என்ற கேள்விகளுக்கு பதில், நீங்கள் அந்தப் பொருட்களை வாங்கி பயன்படுத்திய பிறகு தான் கிடைக்கும்!. ஆனால் எந்த விதமான பக்க விளைவுகளும் இல்லாமல் நம் அழகுக்கு அழகு சேர்க்க, இயற்கை பல அழகு சாதனங்களை நமக்கு வழங்கியுள்ளது. இவற்றைத் தேடி நாம் வெகு தூரம் செல்ல வேண்டாம். உங்கள் சமையல் அறையிலேயே கிடைக்கும் பொருட்கள்தான் இவை.

*எலுமிச்சம் பழம்*

எலுமிச்சம்பழச்சாற்றை தேனுடன் கலந்து முகத்தில் தடவினால் முகத்தை வெண்மையாக்கும். ப்ளீச் செய்து கொள்வதற்கு பதிலாக இதை உபயோகித்துப் பாருங்கள்.

எலுமிச்சம்பழச்சாற்றுடன் முட்டையின் வெள்ளைக் கருவை நன்றாக அடித்து முகத்தில் தடவினால், முகத்தில் சுருக்கங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். உலர்ந்த சருமம் உள்ளவர்கள் கொஞ்சம் தேங்காய் எண்ணெய் சேர்த்து உபயோகிக்கவும்.

*வெள்ளரிப் பிஞ்சு*

இதன் சாற்றை எடுத்து முகத்தில் தடவி 10 நிமிடங்கள் கழித்து சற்று சூடான நீரில் முகத்தை கழுவினால் முகம் பொலிவு பெறும்.

இந்த சாற்றில் பஞ்சை நனைத்து இரு கண்களிலும் வைத்து, ஒரு துணியால் கண்களை கட்டிக் கொண்டு 15 நிமிடங்கள் வைத்திருந்தால், கண்களுக்குக் கீழே ஏற்படும் கரு வளையங்கள் நீங்கும்.

*மோர்*

இது குடிப்பதற்கு மட்டுமல்ல, குளிப்பதற்கு முன்பு முகத்திலும் உடம்பிலும் தடவி பிறகு குளித்தால், உங்கள் சருமம் ஆரோக்கியமாக இருக்கும்.

*(தொடரும்......)*

# விரல்களுக்கு அழகு....!

இரண்டு கண்கள், ஒரு மூக்கு, ஒரு வாய் ஆனால் முகத்துக்கு முகம் எத்தனை வித்தியாசம். அதே போல் விரல்களின் அமைப்பால் கைகளும் மாறுபடுகின்றன. விரல்களுக்கேற்ப நகத்தை அமைத்துக் கொள்வது தான் விரல்களுக்கு அழகு!

*தடித்த குட்டையான விரல்கள்*

நக்த்தை, நீண்ட வட்ட வடிவில் (ovalshape) வெட்டிக் கொள்ளுங்கள். இதனால் உங்கள் விரல்கள் நீளமாக மட்டுமின்றி மெல்லிய



தாகவும் தோற்றமளிக்கும்.

*நீண்ட மெலிந்த விரல்கள்*

இந்த வகையான விரல்களின் அமைப்பே அழகானது என்றாலும், அளவுக்கதிமாக நீண்ட தோற்றத்தை அளித்தால் அந்த அழகு குறைந்துவிடும். உங்கள் நகங்களை சதுரமான முனைகள் உள்ளவாறு வெட்டிக்கொண்டால் உங்கள் விரல்களுக்கு அழகு சேர்க்கும்.

*தடித்த நீண்ட விரல்கள்*

இந்த வகையான அமைப்பு உள்ள விரல்களுக்கு வட்ட வடிவில் உள்ள நகங்கள் சிறந்தது. அது உங்கள் விரல்களுக்கு நேர்த்தியான தோற்றத்தை அளிக்கும். மற்றும் இது போன்ற விரல் அமைப்பு கொண்டவர்கள் நகத்தின் நிறத்திலேயே இருக்கும் 'நெயில் பாலிஷ்' உபயோகிப்பது சிறந்தது.

*ந. வேதா*

## இவரைத் தெரியுமா — பரிசுப் போட்டி இல:— 29



படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?

கண்ணழகி என்று அழைக்கப்படும் நடிகை இவர். இவரைத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 05 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

'இவரைத் தெரியுமா போட்டி இல:- 29'
"சங்குநாதம்"
இல.15,வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:-
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும். பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

### இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல:— 29

படத்தில் உள்ளவரின் பெயர் :-........................................

அனுப்புபவரின் முழுப் பெயர் :-........................................

அனுப்புபவரின் முகவரி :-........................................
........................................
........................................

### இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல 28 சரியான விடை





இளவரசி டயானா

இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 28இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:

**முதற்பரிசு :—** ச. அன்ரனீற்றா
இலகடி, அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

**இரண்டாம்பரிசு:—** தி.மகேஸ்வரா
தும்பளை, நெல்லண்டை,
பருத்தித்துறை.


**மூன்றாம்பரிசு:—** கு.கௌசிகன்
கைதடி சைவச் சிறுவர் இல்லம்,
ஏழாலை மேற்கு,
ஏழாலை.

சரியான விடைகளை எழுதிப் பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-

*க.துஷ்யந்தினி யாழ்ப்பாணம், சி.அஜிந்தா அளவெட்டி, யோ.அரவிந்தன் சங்கானை, சோ.ஆனந் திருநெல்வேலி, த.வதனராணி நாவலர்வீதி, தெ.பிரியங்கா சுன்னாகம், திருமதி ஏ.சர்மிளா அரியாலை, ந.அம்பிகை கரவெட்டி, தி.நி.செந்தமிழ்செல்வன் ஊர்காவற்றுறை, ப.சத்தியராகவன் யாழ்ப்பாணம்.*

## யோகம் பற்றி அறிந்து கொள்வோம்

### ஜானுசீராசனம




நேராக உட்கார்ந்து கொண்டு கால்களை அகலமாக முடிந்த அளவு விரித்து பின் வலது காலை மடக்கிக் குதிக்கால் ஆசன வாயில் படும்படி வைக்க வேண்டும். இரு கைகளையும் குவித்த நிலையில் மெதுவாகக் குனிந்து இடதுகால் பாதத்தைப் பிடிக்க வேண்டும். முகம் இடது கால் மூட்டைத் தொட வேண்டும். பின் வலதுகாலை நீட்டி இடது காலை மடக்கி முன்போல் செய்ய வேண்டும். ஆசன நிலையில் 5முதல் 15 வினாடி இருந்தால் போதுமானது. ஒவ்வொரு காலும் 2 முறை மடக்கிச் செய்தால் போதுமானது.




**பலன்கள்:-** விலாப்புறம் பலப்படும்.அஜீரணம், வாயுத்தொந்தரவு நீங்கும். உடல் நல்ல இளக்கம் கொடுக்கும். வயிற்றுப் பகுதியில் அதிகமான இரத்தம்தூண்டப்படும். நடு உடல்பகுதி பலப்படும். பெருங்குடல், சிறுகுடல் இழுக்கப்பட்டு நன்கு வேலை செய்யும். மலச்சிக்கல் தீரும். கல்லீரல், மண்ணீரல், கணையம் நன்கு வேலை செய்யும். அஜீரணம்,வயிற்றுவலி தீரும். முதுகு, இடுப்புவலி நீங்கும். அடிவயிறு இழுக்கப் பெற்று தொந்தி கரையும்.

(தொடரும்......)





த.சர்மிளா
வயது :- 20
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.
வானொலி, பத்திரிகை.




ஞா.கர்ணன்
வயது :- 18
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்
கிரிக்கெட், பத்திரிகை.



சி.சத்தியன்
வயது :- 12
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
கிரிக்கெட், T.V




ர.நிதர்சன்
வயது :- 14
கோண்டாவில் வடக்கு,
ம.கி.மு.சங்கம்.
உதைப்பந்தாட்டம், தொலைக்காட்சி, பத்திரிகை



ம.பிரபாகரன்
வயது :- 29
வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.
பத்திரிகை,வானொலி,
தொலைக்காட்சி.

## குறுக்கெழுத்துப் போட்டி

### இல. 30




அனுப்ப வேண்டிய முகவரி

**குறுக்கெழுத்துப் போட்டி இல -30**
**'சங்குநாதம்',**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

பெயர் :- ........................................
விலாசம் :- ........................................
........................................
........................................

.................... இங்கே வெட்டுக........................................

### இடமிருந்து வலம்

(1) ஒருவனின் இல்வாழ்க்கைக்கு அச்சாணி போன்றவள் (4) நீர் நிலை (5) தடுமாற்றம் (6) செல்வம் (8) சிறப்பு (9) மாம்பிஞ்சு (10) தூர அளவை

### மேலிருந்து கீழ்

(1) நன்மை செய்பவன் (2) தந்திரம் (3) ஒழுக்கம் (7) நாம் பிறருக்குச் செய்யும் தீய செயல் (8) பள்ளம் - எதிர்ச்சொல்

**குறுக்கெழுத்துப்போட்டி இல.29 இன் விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. பச்சாபதாபம் 4. திலம் 5. கபடி 6. படுகை 8. வாயு 10. பீதி 11. குயில்

**மேலிருந்து கீழ்**

1. பத்தினி 2. சாமம் 3. தாரகம் 6. பதி 7. கைகேயி 9.யுவதி 10. பீலி

### பரிசு பெற்றோர் பெயர் விபரம்

முதற் பரிசு :~ கு.சண்முகரத்தினம்
பாரதிலேன்,
சங்கானை.

இரண்டாம் பரிசு :~ யோ.கிலாஜினி
சாரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

மூன்றாம் பரிசு :~ ஞா.இராஜதேவி
" செல்லப்பா இல்லம்",
தெல்லிப்பளை கிழக்கு,
தெல்லிப்பளை.

### போட்டியில் கலந்து கொண்டு பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்.

*க.வத்ஷலா சித்தங்கேணி, சி.சிவஜனனி சங்கானை, ப.தனஞ்செயன் யாழ்ப்பாணம், ஞா.துவாரகா கைதடி, பே.தினேஸ்குமார் உரும்பிராய், உ.ஜெயறோஸ் ஊர்காவற்றுறை, ர.ரக்ஷனா கொழும்பு - 6, ந.சாந்தகுமார் சுண்டிக்குளி, ந.சஞ்சயன் யாழ்ப்பாணம், J.அஹமட் மட்டக்களப்பு, ச.பாரதி அல்வாய், கை.தாரணி வவுனியா, சசிதேவி வெள்ளவத்தை, S.வள்ளுவன் மட்டக்களப்பு, வ.ஜான்சி நல்லூர்.*

குறிப்பு:~
குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல.30" எனத் தவறாது குறிப்பிடவும். அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 05-10-2002. பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |

# பெருமைமிக்க ரென்னிஸ் சாம்ராஜ்ஜியத்தின்.

# சாம்ராட் சாம்ப்ராஸ் !

**ரென்னிஸ்!** - ஏற்கனவே ஓரிரு தடவைகள் இப்பகுதியில் அலசப்பட்ட விளையாட்டுத்தான். இருந்த போதும், பெரும்பாலும் கிரிக்கெட் சூறாவளியினாலேயே சுழற்றப்பட்டுக் கொண்டிருக்கும் எம்உபகண்டப் பிராந்தியத்தில் இவ் விளையாட்டைப்பற்றிய விழிப புணர்வு போதுமானதாக இல்லை. விம்பிள்டன் முதலான உலகின் முதற்தர ரென்னிஸ் போட்டிகளிளெல்லாம் ஜொலித்து -சர்வதேச தரப்படுத்தலில் முன்னணி வகித்த லியாண்டர் பயஸ்/மகேஸ் பூபதி ஜோடி கூட சச்சின் அடிக்கும் ஒரு சாதாரண சதத்தின் முன் மறக்கடிக்கப்படும் துர்ப்பாக்கியம் இந்தியாவில்! ஆக மொத்தத்தில் ஆசியப் பிராந்தியத்திலேயே ரென்னிஸின் தரம் இன்னும் தத்தித் தவழ்ந்து கொண்ட வண்ணம் தான் இருக்கின்றது.


ஆனால் ஆஸ்திரேலிய, அமெரிக்க, ஐரோப்பியக் கண்டங்களில் ரென்னிஸ் ஆட்டம் பெருமையும், புகழும் மிக்க ஒன்றாகும். அங்கும் உதைபந்தாட்டம், வலைப்பந்து,பேஸ்போல் போன்ற விளையாட்டுக்கள் பிரபலமாயினும் ரென்னிஸில் கிடைக்கும் தனிநபர் அந்தஸ்தின் சுவையே வேறு. அது மட்டுமன்றி வெற்றிப் பணமாகப் புரளும் பில்லியன் டாலர்களும் விளம்பர ஒப்பந்தங்கள் மூலம் கிடைக்கும் வருமானங்களும் அளவற்றவை. ஆகவே பாரம்பரியமும் கௌரவமும்பொருளாதாரச் செழிப்பும் மிக்க இவ்விளையாட்டு, இன்றைய உலகின் ''மேல்த்தட்டு'' வர்க்கமெனத் தம்மைக் கருதும் மேற்படி சமுதாயத்தினரால் அதிகளவில் அணுகப்படுவது ஆச்சரியமானதல்ல. இவ்வாறான ரென்னிஸ் ஆட்டம் அதன் வரலாற்றில் இனிமேற் காண முடியாத ஒருவரைப்பற்றியே இக் கட்டுரை ஆராயப் போகின்றது.

**பீட்சாம்ப்ராஸ்!** - கிரிக்கெட்டிற்கு பிரட்மன்; உதைபந்திற்கு பீலே; குத்துச்சண்டைக்கு முகம்மது அலி என்றவாறு குறித்த சில விளையாட்டுத் துறைகளில் வானமே எல்லையென வியாபித்து நின்ற ஜாம்பவான்கள் வரிசையில் முதன்மை பெற்று விட்ட ரென்னிஸ் வீரர் அதிலும் இன்னும் சுவாரசியமானது அவர் இன்றும் ஆடிக்கொண்டிருபபதுதான்.சாம்ப்ராஸ் ஆடிய காலத் தில் நாமும் ஆடினோம், இரசித் தோம் என ச்கவீர்களும், எண் ணற்ற இரசிகர்களும் பெருமித முறும் இந்த இமாலயச் சாதனைக் காரரை விளையாட்டுலகை நேசிக்கும் ஒவ்வொரு வரும் அறிந்திருக்க வேண்டியது அவசி யமானது. வெறும் முப்பத்தொரு வயது நிரம்பியுள்ள இவரின் வாழ்க்கைச் சரிதமும் விளையாட்டு வீரரிற்கு மட்டுமன்றி வாழ்வில் எதையாவது சாதிக்கத் துடிக்கும் எவரிற்குமே ஒரு படிப்பினையாகும்.

ஜோன் மக்இனோர் முதலாய அன்றைய நட்சத்திரங்களிலிருந்து வில்லியம்ஸ் சகோதரிகள் போன்ற இன்றைய மின்னல்கள் வரை அனுபவித்த ஐக்கிய அமெரிக்க தேசத்தின் ரென்னிஸ் வானில் மங்காது மின்னும் கதிரவன்தான் சாம்ப்ராஸ் எனில் அது மிகையாகாது. இற்றைக்குச் சரியாகப் பன்னிரு ஆண்டுகளிற்கு முன்னர் - ஆகப் பத்தொன்பதே அகவையில் - அன்று அதிகம் எதிர்பார்க்கப்பட்ட அகாஸியைத் தோற்கடித்தவர், கடந்த சில தினங்களிற்கு முன் - தன் வாழ்நாளின் சவால்மிக்க எதிரியாக உருவெடுத்த அதே அகாஸியை வெற்றி கொண்டு -ஐந்தாவது தடவையாக அமெரிக்கத்திறந்த போட்டியை (U.S.Open) ஜெயித்ததன் மூலம் ரென்னிஸ் வரலாற்றுப் பதிவுகளில் மறுபடி பொறிக்கப்பட்டதுடன் இன்னுமோர் அரிய சாதனையை - வெளிப்பாட்டை நிகழ்த்தியிருக்கிறார்.

### *உடற்பலமும் உளவளமும்*

இம்முறை ஈட்டிய வெற்றியுடன் ஏற்கனவே உலகசாதனையாகத் தான பெற்றிருந்த 13 **Grand Slam**களின் எண்ணிக்கையை மேலும் ஒரு தடவை உயர்த்திய சாம்ப்ராஸ் அதன் மூலம் உலகிற்கு உணர்த்திய முக்கியமானதென்ன? 2000ஆம் ஆண்டு **U.S.Open** போட்டியின் இறுதியாட்டத்தில் தோற்கத் தொடங்கியதிலிருந்து ரென்னிஸ் உலகின் பெரும் போட்டிகள் எதிலும் சாம்ப்ராஸால் சாதிக்க முடியவில்லை. சுமார் 26 மாதங்கள்



எளிமையின் சின்னமாய், இலட்சிய நாயகனாய்.....

உருண்டு ஓடியபிற்பாடும், 33 சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றிய பின்பும் உஹீம்... முடியவில்லை. இதற்குத் தெரிவிக்கப்பட்ட ஒரேயொரு காரணம் ''சாம்ப்ராஸிற்கு வயதாகி விட்டது!'' ரென்னிஸ் உலகின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் எழுந்த இந்த முணுமுணுப்பு நாளடைவில் இரைச்சலாக மாறியது. ஆவேசம் மிக்க இளம்புயல்களின் மத்தியில் சாம்ப்ராஸின் கதி அந்தோதான் என்றே எண்ணப்பட்டது.

ஆனாலும் ஒரு மனிதனால் மட்டும் இதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பதின்ம (**Teen**) வயதுகளின் பிற்பகுதியிலிருந்து இருபதுகளின் நடுப்பகுதி வரையான காலமே ரென்னிஸில் கலக்கக் கூடிய காலம் என உணர்ந்திருந்த போதும் தன்னம்பிக்கை மிக்க அந்த மனிதன் மட்டும் தன்னிடம் இன்னும் ஏதோ உள்ளதெனத் திடமாக நம்பினார். வேகத்தில்

**ரென்னிஸ் உலகின் சாதனை வீரராக இருந்த பிற்பாடு,**
**தொடர்ந்து 33 சுற்றுப் போட்டிகளில் தோல்வி;**
**சுமார் 2 1/2 வருடாங்களுக்கு மேல் கிராண்ட் ஸ்லாம் வெற்றிகள் இல்லை.**
**உலகின் 17ஆவது தர ஆட்டக்காரரான இறங்குமுகம்;**
**நீண்ட கால விளம்பர ஒப்பந்தங்களே ஆட்டங்கானும் அவல நிலை;**
**''இனி என்ன! ஓய்வு பெறலாம் தானே'' என்ற ஏளனப் பேச்சுக்கள் -**
**இவற்றையெல்லாம் சகித்து மறுபடியும்**

**சாதித்தார் இந்த வீரர்!**

சிறிதளவு தொய்வு இருப்பினும் தன்னகத்தே இறைந்து கிடக்கும் எண்ணற்ற நுட்பங்களின் பால் அவரிற்கு அதீத நம்பிக்கை இருந்தது. ரென்னிஸ் உலகில் இனிமேல் எவருமே எட்ட முடியாத அல்லது எட்டுவதற்குச் சிரமமோ சிரமப்படப போகும் சாதனைகளை நிகழ்த்திய பின்பும், ''இனி நீ காவோலைதான்! என எல்லோருமாகக் கிசுகிசுத்ததும அந்த இலட்சிய நாயகனை உசுபபியது. என்றாலும் ''காலம்'' என்பதும் கூடிவர வேண்டாமா? ஓர் அசகாய திறமைசாலியின் ஆன்மத் தேடலைப் பூர்த்தி செய்ய அது எவ்வளவு காலம் பின்னிற்கும்? மறுபடி தனக்கே உரிய முறையில் சாதித்தார் சாம்ப்ராஸ்.

சாதாரண சிந்தனைகளுடன் கூடிய சராசரி விமர்சகர்களினால் ஒரு சரித்திர புருசனை அளவு கோலிட முடியுமா? மறுபடி ஒரு முறை ஏதாவது ஒரு **Erand slam** இனை இவரால் ஜெயிக்க முடியுமா? என அதிசயித்தவர்களே வாயடைத்து - பின் வானதிர வாழ்த்துரைத்து நிற்க, அமெரிக்க தேசிய ரென்னிஸ் மையத்தில், மற்றொரு அலாதியான ஆட்ட வீரர் அகாஸியுடன்(அவரிற்கு வயது 32!), இளம் வீரர்களிற்கெல்லாம் ''தண்ணீர்'' காட்டி, இறுதிப் போட்டியில் மோதி வென்றதன் மூலம் வலுமிக்க உளவளத்தால் உடலைப பலப்படுத்தி, உலகையே வசப்படுத்தலாமென நிரூபித்திருக்கிறார் சாம்பராஸ். இதன் மூலம் தன்னையொத்த - ஸ்ரீவ்வோ போனறோர்களையெல்லாம் தெமபூட்டித் திடப்படுத்தியும் இருக்கின்றார்.

### *வாழ்க்கைப்படிகளில்....*

குறித்த துறைகளில் ஒரு சரித்திரமாக கருதப்படுவோர் கடந்து வந்த பாதையும் மற்றையோரை விட வித்தியாசமானதாகவே அமையும் அவ்வகையில் சாம்ப்ராஸின் இளமைப் பராயமும் ஒப்பீட்டளவில் இடாம்பீகத்தையும், கேளிக்கைகளையும் தேடும் மற்றைய அமெரிக்க இளையோரிடமிருந்து வேறுபட்டதானதாகவே இருந்தது. தேவைப்படுவனவெல்லாம் இருந்த இடத்திலேயே கிடைக்கச் செய்யப்பட்டு - அநாவசியமான புறத் தேடலிலிருந்து விடுவிக்கப்பட்டு - சிறுவயதிலிருந்தே ஒரு கட்டுக் கோப்பான வாழ்க்கை முறைக்கு சாம்ப்ராஸ் தயாராக்கப்பட்டார். அவ்வாறே அவரிற்கு இயல்பாகவே அமைந்திருந்த ஆட்டத் திறனும் உரிய ஊக்கமிக்க பயிற்சிகள் மூலம் புடம் போடப்பட்டது.

படிப்படியாக தனது அபார திறமைகளை வெளிக்காட்டத் தொடங்கியவர் 1990ஆம் ஆண்டு **U.S Open**, இல் எதிர்பாராத சாம்பியனாகியதிலிருந்து தொடர்ந்த ஒரு தசாப்தகாலம் ரென்னிஸ் உலகின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தார். ஆரம்பகாலங்களிலேயே அவரின் அசாத்தியத் திறமைகளிற்கேற்ப எழுந்த கணிப்பீடுகளிற்கமைய ரென்னிஸ் ஆட்ட சாதனைகள் பலவும் அவரிடம் மண்டியிட்டன. பெருமை மிக்க, ரென்னிஸ் விளையாட்டின் பெரும் போட்டிகளான **Grand Slams** இனை 14 தடவைகள் ஜெயிப்பதென்ற மகாசாதனையுடன் ஏராளமான உலக சாதனைகள் அவரிடம் குவிந்தன. வரலாற்றுத் தொன்மை மிக்க விம்பிள்டன் போட்டிகளை 1997இலிருந்து 2000 வரை தொடர்ச்சியாக 4 தடவைகள் சாம்ப்ராஸ் வெற்றி கொண்டதெல்லாம் ரென்னிஸின் வரலாற்றுப் பதிவுகளில் அற்புதமான பகுதிகளாகும்.

மிகப் பெரும் சாதனையாளர்களிற்குரிய பொதுவான குணாதிசயங்கள் இந்த ரென்னிஸ் விற்பன்னரிடமும் நிறையவே காணப்பட்டன. தனது வெளித் தோற்றப்பாடுகளிலிருந்து உள் செயற்பாடுகளஈறாக மிகவும் எளிமையானவரான பீட், தன்னை அதிகப்படியாக விளம்பரப்படுத்திக் கொள்ளவோ, பீற்றிக் கொள்ளவோ எந்நாளும் முனைந்ததில்லை. ''வந்தேன்; ஆடினேன்; ஜெயித்தேன்''என்று விட்டு தானுண்டு, தன் வேலையுண்டு என அடங்குகின்ற வித்தியாசமான மனிதர். ஏற்கனவே ரென்னிஸ் ஆட்டத்தின் விருட்சப்புகழின் உச்சாணிக்கொப்பில் ஏறிவிட்ட போதும் இன்னும் அந்நாளைய முன்னணி வெற்றியாளர்களுடன் தன்னை ஒப்பிட்டுப் பெருமைப்படுத்துவதையோ, விதந்துரைப்பதையோ அவர் சிறிதும்விரும்புவதில்லை.இவை எல்லாவற்றிலும் மேலாக ''தனது உள்ளம் போலதான வெள்ளை உடை

**சாம்ப்ராஸின் சாதனைகள்**

மிக முக்கியமானவை:

* 14கிராண்ட் ஸ்லாம் வெற்றிகள் (உலக சாதனை)
* 64 ஒற்றையாட்ட வெற்றிகள்
* 7 விம்பிள்டன் (சமப்படுத்தப்பட்ட உலக சாதனை)
* 5 அமெரிக்க திறந்த போட்டி
* 2 ஆஸ்ரேலியன் ஓபன்
* உலகின ''நம்பர் 1'' ஆட்டக்காரராக தொடர்ந்து 6 வருடங்கள் விளங்கியமை. (உலக சாதனை)
* உலகின் முதல் நிலை வீரராக தொடர்ந்து 286 வாரங்கள் திகழ்ந்தமை (உலக சாதனை)

களையே சாம்ப்ராஸ் பெரிதும் அணிகிறார்''என ஒரு விளையாட்டு எழுத்தாளர் கோடி காட்டியிருப்பது சாம்ப்ராஸின் இயல்புகளின் வரையறைக்கு ஓரேவரியில் விளக்கம் தந்துவிடுகின்றது.

எத்தனையோ உளத் தாக்கங்களிற்கும், ஏக்கங்களிற்கும் மத்தியில் இம்முறை **U.S** திறந்த போட்டியில்வென்ற பிற்பாடு பார்வையாளர் அரங்கில் உற்சாகம் பீறிட எழுந்த தன் மனைவியை சாம்ப்ராஸ் ஆரத் தழுவிக் கொண்டமை சுற்றியிருந்தோர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது. ஆம், அவரது மனைவி பிரிட்ஜெட் ஒரு நிறைமாதக் கர்ப்பிணி! மனமும் பணமும் போடும் பித்தலாட்டத்தில் விவாகம் என்பது மாதக்கணக்குகளில் கூட''காலாவதி''யாகும் மேலைத்தேயக் கலாசாரத்தின் பின்னணியில் பிரிட்ஜெட் - சாம்ப்ராஸ் வேறுபட்டே தெரிகின்றார்கள். 2000ஆம் ஆண்டு விம்பிள்டனை வென்று, அன்றைய ரென்னிஸ் உலகின் அசைக்க முடியா வீரராக இருந்த போது பலத்த தேடல்களின் பின் கிடைத்த கனவு நாயகியைக் கைப்பிடித்திருந்தார் சாம்ப்ராஸ்.அதன பின் வெற்றிப் படிகளெல்லாம் பீட்டின் அடிகளை வழுக்கி வீழ்த்தியவாறே இருந்தன. ஆனாலும், சாதனை நாயகனான தனது கணவர் வேதனையால் வேகியபோதும் மனந்தளராது அவரை ஊக்குவித்த பிரிட்ஜெட், தந்தையாகப் போகும் தருணத்தில் சாம்ப்ராஸ் பெற்றிருக்கும் இந்த வெற்றியால் பூரித்துப் போயிருந்தார். மனைவியினது பெரும் பங்களிப்பாலும் தன் ஆசைத்தங்கையின் தைரியமூட்டலாலுமே தான் மறுபடியும் சாதித்ததாக உள்ளம் நெகிழ சாம்ப்ராசும் கூறியிருப்பது ஈண்டு நோக்கற்பாலது.

ஆக, சாம்ராஸ் போன்ற ஒரு வீரரை இனிமேலும் சாதிக்க வேண்டுமென எவ்வாறு வாழ்த்த முடியும்? இருந்த போதும் வெவ்வேறுபட்ட ஆடுகளங்களிலும்; சூழநிலைகளிலும் ஆடப்படும் நான்கு

**க.சேந்தன்**

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பிரஞ்சு திறந்த போட்டியில் வெற்றியின் இனிமையை சாம்ராஸ் இன்னும் அறியவில்லை. ரென்னிஸ் உலகில் பெரும் சரித்திர



இப்படி எத்தனை தடவைகள்!

மாகவே ஆகிவிட்ட இந்தச் சாதனையாளர் - ஒரு துரதிஷ்ரமான இடைவெளியின் பின் மறுபடியும் தலைநிமிர்ந்துள்ள இவ்வெற்றியாளர் பிரெஞ்சு ஓபன் போட்டியையும் ஜெயிப்பாரென உறுதியாக நம்பலாம். என்னதான் இனி வென்றால் என்ன, விட்டால் என்ன ''ரென்னிஸ் என்றால் சாம்ப்ராஸ் சாம்ப்ராஸ் என்றால் ரென்னிஸ்'' என்பது மட்டும் இனி மாறவா போகிறது?!






## படம் பாரீர் பாடம் நாடு








ஈராக் நாட்டில் தொடங்கியுள்ள தேசிய விழாவில் பல்வேறு நடனக் கலைஞர்கள் கலந்துகொண்டு நடன நிகழ்ச்சிகளை வழங்கினர். இத் தேசிய விழாவில் கலந்து கொண்டு நடனமாடிய பெண் ஒருவரைப் படத்தில் காணலாம்.

*மறு இதழில் மீண்டும் சந்திப்போம்......!*



க.குபேந்திரன்
அ. மி. த. க. பாடசாலை



அ.சஞ்ஜீவ்
யா/ டிறிபேக் கல்லூரி

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்



அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக உங்களிற்கு வர்ணம் தீட்ட ஆசை தானே? இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். என்ன நீங்கள் நிறந்தீட்டத் தயார்தானே?



## எது விரைவில் உருகும்...?

முரளி, இரண்டு ஐஸ் கட்டிகளை வீட்டுக்கு வாங்கிச் சென்றான். ஒன்றைக் கறுப்புத் துணியால் சுற்றியிருந்தான். மற்றதை வெள்ளைத் துணியால் சுற்றியிருந்தான். என்ன ஆச்சரியம் வீட்டுக்கு வந்து பார்த்தால் கறுப்புத் துணியில் சுற்றியிருந்தது கரையத் தொடங்கியிருந்தது. வெள்ளைத் துணியில் சுற்றியிருந்தது அப்படியே இருந்தது. ஏன் தெரியுமா? இதோ

☞ சூரிய ஒளி வெப்பத்தைக் கறுப்புத்துணி அப்படியே கிரகித்துக் கொள்வதால் விரைவில் உருகத் தொடங்குகிறது. வெள்ளைத் துணி சூரிய ஒளியை வெளியே பிரதிபலித்து விடுவதால் விரைவில் உருகுவதில்லை.

*லோ. கீர்த்திகா, வல்வெட்டி.*

## சென்றவாரக் கணிதப் புதிருக்கான விடைகள்

6 பழங்கள்

*L. சசிதேவி,*
*வல்வெட்டித்துறை.*

## நம்பர் மஜிக்

| | | |
|---|---|---|
| 1x 9 = 9 | ..... | 9 |
| 2x 9 = 18 | ..... | 1+8 = 9 |
| 3x 9 = 27 | ..... | 2+7 = 9 |
| 4x 9 = 36 | ..... | 3+6 = 9 |
| 5x 9 = 45 | ..... | 4+5 = 9 |
| 6x 9 = 54 | ..... | 5+4 = 9 |
| 7x 9 = 63 | ..... | 6+3 = 9 |
| 8x 9 = 72 | ..... | 7+2 = 9 |
| 9x 9 = 81 | ..... | 8+1 = 9 |
| 10x9= 90 | ..... | 9+0 = 9 |

*L. அபிராமி,*
*உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.*

## பொல்லாத பறவை

பறக்க முடியாத பறவைகளில் ஒன்று காஸாவரி. இது நியூ கினியாவுக்குரிய பறவை. ஒரு மனிதனைக் கொல்லும் ஆற்றல் படைத்தது. பலமிக்க இவற்றின் கால்விரல்களில் வாள் போன்ற நகங்கள் உண்டு.

இதனால் இப் பறவை மரண காயங்களை விளைவிக்கும். இதன் உயரம் 5அடி. அந்தத் தீவிலேயே மிகப் பெரிய பறவை இதுதான். நன்றாக நீந்தும். மணிக்கு 30 மைல் வேகத்தில் ஓடும். குதிரையையும் தோற்கடிக்கக் கூடியது காஸாவாரிப் பறவை. இது நியூகினியாவில் மட்டுமே காணப்படுகிறது.

*கு.ருத்ரநாத்,*
*யா.இந்துக் கல்லூரி.*

## வாத்தின் கர்வம்!



ஒரு குடியானவன், சில வாத்துக்களை வளர்த்து வந்தான். அவனிடம் ஓர் ஆண் வாத்து இருந்தது. வெள்ளைவெளேர் என்ற அந்த வாத்தைக் குடியானவன் கவனமாக வளர்த்தான். எஜமானன் தன்னை அதிகம் அக்கறையுடன் கவனிக்கிறான் என்று அந்த ஆண் வாத்துக்குக் கர்வம்.

வாத்துப் போட்டி ஒன்று நடந்தது. அந்தப் போட்டியில் குடியானவன் வாத்தும் கலந்து கொண்டது. அழகிய நடையும், கம்பீரப் பாய்ச்சலும், புஷ்டியான உடலமைப்பும் கொண்ட குடியானவனின் வாத்தே முதல் பரிசு பெற்றது. அந்த வாத்துக்கு மேலும் கர்வம் மிகுந்தது.

அன்று இரவு அந்தக் குடியானவனின் மகள் வந்திருந்தாள். பல மாதங்கள் கழித்து வந்த தன் மகளுக்குப் புஷ்டியான அந்த ஆண்வாத்தையே அறுத்துக் கறியாக்கினாள். குடியானவனின் மனைவி.

# தேடல்!

இறைவனை நேரில் பார்க்க வேண்டுமென்று ஒருவன் விரும்பினான். கடவுளை எப்படிப் பார்ப்பது? என்று அவன் குழம்பித் தவித்தவேளை அவ்வூரிற்கு ஆன்மீகப் பெரியவர் ஒருவர் வந்தார். அவரிடம் சென்ற அவன் தன் விருப்பத்தைப் பெரியவரிடம் கூறினான்.

பெரியவரும் ''நீ தனிமையான ஒரு இடத்தில் இருந்து இறைவனைத் தியானம் செய். இறைவன் காட்சி கொடுப்பான்'' என்றார்.

உடனே அவனும் ஒரு காட்டுக்குச் சென்று தனிமையான இடத்தில் இறைவனைத் தியானம் செய்ய ஆரம்பித்தான்.

சிறிது நேரம் கழித்து ''ஏய் யார் நீ? இங்கே என்ன செய்கிறாய்?'' என்று ஒரு சத்தம் கேட்டது.

உடனே அவன் கண்களைத் திறந்து பார்த்தான் அருகிலே ஒரு வேடன் நின்று கொணடிருந்தான். அவன் மீண்டும் ''இங்கே என்ன செய்கிறாய்?'' என்று கேட்டான்.

''நான் இறைவனைத் தேடித் தியானம் செய்து கொண்டிருக்கிறேன்'' என்றான் அவன்.

''இறைவனா? அது எப்படியிருக்கும்? சிங்கம் மாதிரி இருக்குமா? அல்லது புலி, கரடி மாதிரி இருக்குமா? எப்படி இருக்கும் சொல். எனக்குத் தெரியாதது இந்தக் காட்டிலே எதுவுமேயில்லை. அது எங்கிருந்தாலும் நான் பிடித்துக் கொண்டு வருகிறேன்'' என்றான்.

இதைக் கேட்ட அவனுக்கு சங்கடமாகி விட்டது.

இந்த வேடன் விப்ரம் தெரியாதவனாக இருக்கிறானே? என்னுடைய தியானத்திற்கு இவன் இடையூறாக இருப்பான் போல இருக்கிறதே என நினைத்தவன், வேடன் மீண்டும் தொந்தரவு தராமல் இருப்பதற்காக ''இறைவனுக்கு சிங்கத்தலையும், மனித உடலும் இருக்கும்'' என்று கூறிவேடனை அனுப்பி விட்டு மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தான்.



வேடனும் இறைவனைத் தேடி காடு முழுவதும் நடந்தான்; நடந்தான். ஆனாலும் இறைவனின் உருவை அவனால் காண முடியவில்லை.

நான் இந்தக் காட்டுக்கே ராஜா! என்னாலேயே ஒரு மிருகத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லையே இதன் பின்னும் நான் உயிருடன் இருக்க வேண்டுமா? என மனம் நொந்து அருகேயிருந்த ஒரு கொடியைப் பறித்து தூக்கு மாட்டப் போனான்.

அப்போது செடிகளிற்கிடையே சலசலப்புச் சத்தம் கேட்டது. அங்கே சிங்கத்தலையும் மனித உடலும் கொண்ட ஒரு உருவம் நின்று கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்த வேடன் ''அந்த உருவத்தைக் கொடியினால் கட்டி இழுத்துத் தியானத்தில் இருந்தவனிற்கு முன் கொண்டு வந்து நிறுத்தினான்.

அதைக் கண்ட அவன் வந்தது இறைவன் தான் எனப் புரிந்து கொண்டான்.

இறைவா! இங்கே நான் உன்னை நினைத்துத் தியானம் செய்ய என்னை விட்டு விட்டு இந்த உயிரைக் கொல்லுகின்ற வேடனுக்குக் காட்சி கொடுத்து விட்டாயே! இது நியாயமா?'' என்று கேட்டான்.

அப்போது ''நீ என்னையே நினைத்தாலும் உன்னுடைய முழு மனசும் என்னிடம் வரவில்லை. ஆனால் இந்த வேடன் காலையிலிருந்து மாலை வரை என்னை மட்டுமே நினைத்தான். இதுதான் உண்மையான தேடல்'' என்றது அந்த உருவம்.

**சிறுவர்களே! கதையைப் படித்தீர்களா? உங்களுடைய தேடலும் உண்மையானதாகவே இருக்கட்டும். உங்கள் உண்மையான தேடலால் உலகை வெல்லுங்கள்.**

*தொகுப்பு : - சுஜா*

வலம்புரியின் ஆதரவுடன் நடத்தப்பட்ட மூத்த பத்திரிகையாளர் அமரர் செல்லத்துரை ஞாபகார்த்தச் சிறுவர் பாடல் போட்டியில் பரிசு பெற்ற கவிதை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

## நம் நாடு

ஆழிகள் சூழ்ந்திட
அழகினில் சுடர்வது
ஈழவளத் திருநாடு
ஈழவளத் திருநாடு

மொழிகள் இணைந்திட
முயற்சியில் இனிப்பது
ஈழவளத் திருநாடு
ஈழவளத் திருநாடு

கலைகள் ஆடிடக்
கனிகளைக் குவிப்பது
ஈழவளத் திருநாடு
ஈழவளத் திருநாடு

மேழிகள் உழுதிட
மேன்மையில் செழிப்பது
ஈழவளத் திருநாடு
ஈழவளத் திருநாடு

ஒற்றுமை ஓங்கிட
ஒருமை காப்பது
ஈழவளத் திருநாடு
ஈழவளத் திருநாடு

மீன்கள் துள்ளிட
தேனினில் குளிப்பது
ஈழவளத் திருநாடு
ஈழவளத் திருநாடு

நதிகள் பாய்ந்திட
மழையில் மகிழ்வது
ஈழவளத் திருநாடு
ஈழவளத் திருநாடு

மனிதம் நிறைந்திட
மகத்துவம் நிறைந்திட
ஈழவளத் திருநாடு
ஈழவளத் திருநாடு

ஆதவன் தொட்டிட
நிலவினில் காய்வது
ஈழவளத் திருநாடு
ஈழவளத் திருநாடு

மலைகள் நிறைந்திட
தேயிலை விளைவது
ஈழவளத் திருநாடு
ஈழவளத் திருநாடு

காடுகள் காத்திட
காலநிலை காப்பது
ஈழவளத் திருநாடு
ஈழவளத் திருநாடு

பனைகள் வளர்ந்திட
மரபைப் பேணுவது
ஈழவளத் திருநாடு
ஈழவளத் திருநாடு

ஆலயங்கள் வாழ்த்திட
அறிவியல் வளர்ப்பது
ஈழவளத் திருநாடு
ஈழவளத் திருநாடு

முத்துக்கள் குவிந்திட
முறுவலில் குளிர்வது
ஈழவளத் திருநாடு
ஈழவளத் திருநாடு

வானம் வழங்கிட
உலகில் உயர்ந்தது
ஈழவளத் திருநாடு
ஈழவளத் திருநாடு

*வித்தியாசன், செம்மணி வீதி.*

## வியாசரின் பதில்கள்


### வியாசரே! உமக்குப் பதிலளிக்கத்தான் தெரியுமா? எங்கே ஒரு நல்ல கேள்விகேளும் பார்க்கலாம்?

*S.காயத்திரி கற்கோவளம்*
✡ பெண்கள் உயர்கல்வி கற்பதனால் யாதேனும் பாதிப்பு உண்டா...?
☺ **நிச்சயமாக ஆண்களுக்குப் பாதிப்புண்டு.**

*K.ஜெகன் கற்கோவளம்*
✡ கணவனுக்கு மனைவியானவள் அடிமையாகவும், அரசியாகவும் காணப்படுகின்றாள் என்கிறார்களே! இது உண்மையா?
☺ **அடிமையை நீக்கி விட்டால் உமது கேள்வி சரி.**

*M.சிந்துஜா வல்வெட்டி*
✡ வியாசர் அங்கிள்! நெஞ்சு பொறுக்குதில்லையே' என்று ஏன் கவிஞர் பாடினார்?
☺ **நிலைகெட்ட மனிதரை நினைந்து.**

*சோதி பாலாவியூர்*
✡ வியாசரே! நீர் யாருக்கும் அடித்த/யாரிடமும் அடி வாங்கிய சந்தர்ப்பம் உண்டா?



☺ **பிட்டுக்கு மண்சுமந்த பெருமானுக்கு விழுந்த அடி எனக்கும் விழுந்ததாக ஞாபகம் உண்டு.**

*து.சோதிநாதன் பாலாவியூர்*
✡ அன்பின் வியாசரே! முற்காலத்தில் பெண்கள் தலை குனிந்தும் ஆண்கள் தலை நிமிர்ந்தும் நடந்தார்கள். ஆனால் இப்போது பெண்கள் தலைநிமிர்ந்தும், ஆண்கள் தலை குனிந்தும் நடந்து செல்வதைக் காண முடிகின்றதே?



☺ **சோதரா! பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவலவன்றோ.**

*வே.சஞ்ஜீவன் ஓட்டுமடம்*
✡ எனது நண்பனொருவன் ஆசிரியரின் மகளை ஒரு தலைபட்சமாகக் காதலிக்கிறான். அவனது விருப்பம் நிறைவேறுமா சார்?
☺ **இருதலையாக்கிப்பாரும் முடிவு தெரியும்.**

*ரகுராமன் மட்டக்களப்பு*
✡ வியாசர் சார்! பத்திரிகை சுதந்திரம் - பத்திரிகை தர்மம் இவற்றில் ஒன்றால் இன்னொன்று பாதிக்கப்படுகிறதா?
☺ **பத்திரிகைச் சுதந்திரம் தனி மனித சுதந்திரத்திற்குள் கட்டுப்பட்டது. பத்திரிகை தர்மம் மனச்சாட்சிக்கு உட்பட்டது.**

*து.சோதி பாலாவியூர்*
✡ வியா மாமா! சில மாணவர்கள் கல்வியில் ஊக்கமற்று இருக்கும் அதே வேளை பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெறுகின்றார்களே! எவ்வாறு' என்று கூறுவீர்களா?
☺ **அவர்கள் இயல்பான திறமையுடையவர்கள்.**

*க.ஆனந்தன் யாழ்.பல்கலை*
✡ வியாசர் மாமா! கடவுள் தோன்று முன் காதல் தோன்றி விட்டது என்கிறார்களே! அப்படியா?
☺ **ஆதாம், ஏவாள் காதை அந்த அநியாயத்தைத் தானே சொல்கிறது.**

*K.ஜெயக்குமார் கற்கோவளம்*
✡ யாழ் மாவட்டத்தில் கல்வி வீழ்ச்சியடைந்து வருகின்றமைக்கான காரணம் என்ன அங்கிள்?
☺ **கணிப்பீடு, செயற்திட்டம், ஒப்படை.**

*வே.சஞ்ஜீவ் ஓட்டுமடம்*
✡ வியாசரே! என்னுடைய நண்பனொருவன் எந்த நேரம் பார்த்தாலும் தத்துவம் பேசிக் கொண்டேயிருப்பான். அவனைப் பற்றி......?
☺ **காதலில் தோல்வி கண்டிருப்பான் விசாரித்துப்பாரும்.**

*ராஜா மண்டைதீவு*
✡ வியா பெண்களின் வயதைக் கேட்பதில் அப்படியென்ன தவறு இருக்கிறது?
☺ **ராஜா! வயதை ஏன் கேட்பான்.**

### காத்திருப்பதா..? காக்க வைப்பதா...? இதில் எது சுகமானது சார்?

*வ.சஞ்ஜீவன் ஓட்டுமடம்*
✡ காத்திருப்பதா..? காக்க வைப்பதா...? இதில் எது சுகமானது சார்?




☺ **ஆண் காத்திருப்பதும், பெண் காக்க வைப்பதும் சுகமானது.**

*S.காயத்திரி கற்கோவளம்*
✡ வியாசர் சார்! படித்த பெண் படிக்காத ஆணைத் திருமணம் செய்தால் அவர்கள் வாழ்க்கையில் ஏதேனும் பிரச்சினை வருமா?
☺ **படிக்காத ஆண் படித்த பெண்ணுக்கு நன்றாகப் பாடம் புகட்டுவான் என்பதால் பிரச்சினைக்கு இடமேயில்லை.**

*A.அஜித் புன்கன்குளம்*
✡ வியாசர் அங்கிள்! காதலிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கலாமா?
☺ **புரிந்துணர்வின் அடிப்படையில் விதிக்கலாம். ஆனால் கட்டுப்பாடு புரிந்துணர்வை மீறுவதாக இருக்கக் கூடாது.**

*வே.சஞ்ஜீவ் ஓட்டுமடம்*
✡ வியாசரே! சில ஆண்கள் கொக்கைப் போல மௌனமாயிருப்பதேன்?
☺ **உறுமீனை எதிர்பார்த்து.**

*சாந்தனி நல்லூர்*
✡ வியாசரே! உமக்குப் பதிலளிக்கத்தான் தெரியுமா? எங்கே ஒரு நல்ல கேள்வி கேளும் பார்க்கலாம்?



☺ **கடவுள் ஏன் தமிழனைப் படைத்தான்....?**

*ஜக்குலின் ஆனைக்கோட்டை*
✡ 'அறிவு' எப்போது முதிர்ச்சியடைகின்றது வியாசரே?
☺ **அனுபவத்தின் எல்லையில்.**

*அருந்தா முடமாவடி*
✡ வியாச பகவானே! வாழ்வில் ஒரு திருநாள் மணநாள் என்று சங்குநாதம் சொல்கிறது. நான் சொல்கிறேன் மரண நாளென்று. நீங்கள் எந்தப் பக்கம்...?
☺ **இரண்டு பேருடைய பக்கமாகவும் இருக்க விரும்புகிறேன். ம(ர)ண நாள்.**

*வள்ளுவன் வவுனியா*
✡ நீர் கண்ட கனவு எப்போதாவது பலித்ததுண்டா...? உண்டாயின் அதனை வாசகர்களுக்கும் சொல்வீரா?
☺ **கனவு காண்பதாகக் கனவு கண்டதாக.**

*ச.சுரேஷ் இருபாலை*
✡ வியா! உரையாடல்களிற்கிடையே O.K என்று சொல்லும் வழக்கம் எப்படி வந்தது?
☺ **உரையாடுபவனை விரைவாக அனுப்ப வேண்டுமென முடிவெடுக்கும் போது.**

### வியாசரே! நீர் யாருக்கும் அடித்த/யாரிடமும் அடி வாங்கிய சந்தர்ப்பம் உண்டா?

*வ.ஜான்சி மட்டக்களப்பு*
✡ வியாசர்! நீர் தமிழனாகப் பிறந்ததற்கு வெட்கப்படுகின்றீரா? பெருமைப்படுகின்றீரா? (மனச்சாட்சிக்கு விரோதமாக பதில் சொல்லமாட்டீர் என்று நம்புகின்றேன்.)



☺ **நீர் முதலாவதாகக் கூறியது சரி.**

*A.அஜித் அரியாலை*
✡ வியாசர் அங்கிள்! காதலை எதிர்ப்பவர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்?
☺ **மௌனமாக எதிர்க்காதீர்கள் சங்கம் அமைத்து ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும். ஒழுங்கையில் கூடாதே, தொப்பியால் முகத்தை மறையாதே என்று கோஷம் போட வேண்டும்.**

*பேரின்பநாயகி கொக்குவில்*
✡ ' வியா! துரோகி - பகைவன் ஒப்பிடுக?
☺ **துரோகி ~ கூட இருந்து குழி பறிப்பவன்.**
**பகைவன் ~ எட்ட இருந்து வெளிப்படையாகத் தன் எதிர்ப்பைக் காட்டுபவன்.**

*து.சோதிநாதன் பாலாவியூர்*
✡ வியாசரே! தற்போது அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மதிப்புக் குறைகின்ற அதே வேளை அவர்கள் இழித்துரைக்கப்படுகின்றார்களே?
☺ **கடமையைச் சரிவரச் செய்யாதவரை நிலைமை இப்படித்தான் இருக்கும்.**


*பாத்திமா திருகோணமலை*
✡ தமிழுக்கு அமுதென்று எப்போது பெயர் வந்தது?
☺ **அமுதுடன் நஞ்சு கலக்க முன்னர்.**
**(பாற்கடலைக் கடைய முன்னர் என்றும் சொல்லலாம்.)**

*அழகன் கந்தர்மடம்*
✡ வியாத் தம்பி! அரசியல் வாதிகளிடம் உங்களிற்குப் பிடித்த குணம் எது?
☺ **இருகரம் தூக்கிப் போடுகின்ற கும்பிடுகையும், முன்பாய்ச் சிரிப்பும் எனக்கு நன்றாய்ப் பிடிக்கும்.**

*து.சோதிநாதன் பாலாவியூர்*
✡ வியாசரே! பகவத்கீதையில் கண்ணன் "கடமையைச் செய்பலனை எதிர்பாராதே" என்று கூறியுள்ளார். பலனை எதிர்பாராமல் கடமையைச் செயவதால் என்ன பலன்?
☺ **கண்ணன் சொன்ன கடமையும் பலனும் மனிதன் ~ இறைவன் தொடர்புபட்ட விடயம். மனிதனும் ~ மனிதனும் தொடர்புபட்ட விடயத்தால் கடமையும், பலனும் எதிர்பார்க்கப்பட வேண்டியதொன்றே.**

### வியாசர்! நீர் தமிழனாகப் பிறந்ததற்கு வெட்கப்படுகின்றீரா? பெருமைப்படுகின்றீரா?

## வாசகர் இதயநாதம்



சங்குநாதமே!
ஒரு பானை சோற்றுக்கு
ஒரு சோறு பதம்!
உன்னுடைய முதலாவது
இதழிலேயே எம்
உள்ளங்களைக்
கவர்ந்து விட்டாய்.
உன்னுடைய இதழில்
அதிசய உலகம், அரசியல்,
விளையாட்டுத் தகவல்கள்
என்பன மேலும் புது மெருகுடன்
வெளிவருவதுபாராட்டத்தக்கது.

*கறுப்புநிலா,*
*நல்லூர்.*

வலம்புரி நாளிதழின் வாரமலரே!
யாழ் மண்ணில் மட்டுமன்றி
ஏனைய தமிழர் வாழ் பகுதிகளிலும்
சாதனை படைக்கும் உனக்கு
இன்னும் ஒரு வயது கூட
ஆகவில்லையென்பது
வியக்க வைக்கிறது.
உன்னுடைய கவிதைக் கலசம்
ஒரு காவியம் எமக்கு
மௌனத்தின் தேடல்
உண்மையின் வெளிப்பாடு
கஸ்தூரிதிலகம் வரலாற்றின் சிகரம்
அதிசய உலகம் அது
அறிவியல் அரங்கம்
விளையாட்டுச் செய்திகள்
வியத்தகு தகவல்கள்
மரண விளையாட்டு,
மனம் தேடும் பக்கம்
இப்படியாக உன்னை
வர்ணித்துக் கொண்டே போகலாம்.
உன் படைப்புக்கள்
மொத்தத்தில் அற்புதமானவை.
உன்னை வாரந்தோறும் தேடும்..!

*R.ஹொஹான்,*
*மீசாலை.*

சங்குநாதமே!
வர்ணங்கள் பலகொண்டு
வலம் வரும் வாரமலரே!
உன் பக்கங்கள் அனைத்தும்
அருமையிலும் அருமை
நீ மேலும் வளமுடன் வெளி வர
வாழ்த்துகின்றேன்.

*M.மயூரி.*

நடுநிலை தவறா
நன்னெறி காக்கும்
நான்கு வர்ணத்துடன்
நம்மை எல்லாம் அதிரவைக்கும்
நல்ல செய்தி கொண்டு வரும்
வலம்புரியின் மைந்தனே
உன் ஆக்கங்கள்
அனைத்தும் சூப்பர்
ஆனாலும் சினிமாச் சிதறலில்
கவர்ச்சிப் படத்தைக் குறைத்து
சிறுவர்களது ஆக்கத்தைக் கூட்டி
அனைவருக்கும் அறிவை ஊட்டி
யாழ் மண்ணிற்கு
ஆசானாகத் திகழ்வாயாக.

*S.S.இளையநிலா,*
*மிருசுவில் வடக்கு.*

வலம்புரித் தாய் ஈன்றெடுத்து
வாரத்தில் ஒரு தடவை
வரமாய்த் தருகின்ற
வண்ண மலராம் சங்குநாதமே
வகை வகையாய்ச் செய்திகளை
வாஞ்சையுடன் தருவிக்கும்
இரகசியம்' தான் என்னவோ?

*T.தனரூபினி,*
*பருத்தித்துறை.*

வலம்புரியின் வாரமலரே,
விதம் விதமாய்ப் பக்கங்கள்
அத்தனையும் முத்துக்கள்.
அதிலும் குருஷேத்திரம்,
கேள்வி பதில் சூப்பர்.
ஒவ்வொரு திங்களும்
உன்னை ஆவலோடு
எதிர்பார்க்கிறேன்.

வ.சுவாதி,
உடுவில்

சங்குநாதமே!
உனக்குப் பலகோடிவந்தனங்கள்
உன்னுடைய பக்கங்கள்
வரவேற்கத்தக்கன. ஆனாலும்
ஒரு வேண்டுகோள்.
அர்த்தமுள்ள இந்துமதத்தையும்,
கஸ்தூரி திலகத்தையும் இன்னும்
எத்தனை அருமையான
படைப்புக்களைத் தரும் நீ
சினிமாச் சிதறலில் மட்டும்
ஏன் கவர்ச்சி காட்டி நிற்கின்றாய்
உன் சிந்தனைக்கு என்னுடைய
சிறுகருத்து இது.
இளையோரிற்கு வழிகாட்டியாக
நீ என்றும் விளங்குவாய்
என்று நம்புகின்றேன்.
உன் படைப்புகளிற்கு
என் பாராட்டுக்கள்.

அஹமட் ஜுரைஸ்,
மட்டக்களப்பு

சங்குநாதமே!
இளம் எழுத்தாளர்களுக்கு
களம் அமைத்துக் கொடுத்து
ஆதரவு தரும் உன்பணி மகத்தானது
உன்னுடைய ஆக்கங்களில் மௌனத்தின்
தேடல்கள், கவிதைக்கலசம் என்பன
என்னை, வெகுவாகக் கவர்ந்துள்ளன.
கவிதைகளும் அதற்கான படங்களும்
உன் கலையம்சத்திற்குசான்றுபகர்கின்றன.
உன் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

*வே.வேந்தன்,*
*வவுனியா.*




# காலாட் படையில் அறிமுகமாகும் இளம் வில்லன் அருண்

ஒரு பக்கம் இளம் கதாநாயகர்கள் ரவுண்டுகட்டி ரகளை பண்ணிக்கொண்டிருக்க. . . இன்னொரு பக்கம் இளம் வில்லன்களும் களம் இறங்கியிருக்கிறார்கள். 'மாறன்' படத்தில் அல்போன்ஸாவின் தம்பி வில்லனாக அறிமுகமாகியிருக்கிறார். அவரைத் தொடர்ந்து காலாட்படை படத்தில் அறிமுகமாகியிருப்பவர் அருண்.

பள்ளிப் படிப்பை சென்னையில் முடித்துவிட்டு மேற்படிப்புக்காக லண்டன் போன பார்ட்டிக்கு அங்கே பொழுதுபோக்கு தமிழ் சினிமா பார்ப்பதுதானாம். பார்த்த படங்களால் சினிமா ஆசை பொங்கி வழிய, வந்த வேகத்திலேயே புரபஷனல் போட்டோகிராபரிடம் போட்டோ எடுத்து கம்பெனி கம்பெனியாக ஏறி இறங்கியவருக்கு காலாட்படை யூனிட்டில் வில்லன்! வாய்ப்புக் கொடுத்து கோடம்பாக்க கதவைத் திறந்துவிட்டிருக்கிறார்கள்.



வாய்ப்புக் கொடுக்கறப்போ. . . ஏழெட்டு ஹீரோக்களோடு ஒருத்தராக நடிக் சொல்லி தான் வாய்ப்புக் கொடுத்தார்களாம். அகலமான விழிகளை உருட்டியபடி அவர் காட்டின பர்ஃபாமென்ஸை பார்த்து வில்லன் ரேஞ்சுக்கு கேரக்டரையும், கதையையும் மாற்றிய தாகச் சொல்கிறார். "கேரக்டர் டெவலப் ஆனதுமே டைரக்டர் ரமேஷ் ஸார் கூப்பிட்டுச் சொன்னார். அதுக் கப்புறம் ஃபைட், டான்ஸ்னு ராத்திரி பகலா கத்துக்கிட்டிருக் கேன் (சினிமாக்குள்ள நுழைந்த துமே அது எப்படித்தான் வருமா பாஸ், தலைவாங்கறதெல்லாம் ?) படத் தோட ரஷ் பார்த்துவிட்டு மொத்த யூனிட்டும் நல்லா வரு வேன்னு பாராட்றாங்க. ரொம்ப சந்தோ ஷமா இருக்கு" என்று மறுபடியும் ஒரு பாஸ் போட்டு தலையை சிலுப்பிக் கொண்டு சிரிக்கிறார்.

நான்கைந்து பட வாய்ப்புகள் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறதாம். "காலாட் படை ரிலீஸ்க்கப்புறம் கமிட் பண்ணிக்கலாம்னு இருக்கேன்!" என்கிறார்.

சரி. . . அருணுக்கும் சினிமாவுக்கும் உள்ள தொடர்பைச் சொல்லலையே . . . நடிகர் கரணின் மானேஜர் லட்சுமியின் வாரிசு!

"வில்லனா நடிக்க வந்திருக்கீங்களே. . . கரண் ஒண்ணும் சொல்லலையா ?" என்றால் "இல்ல பாஸ். . . அவர்தான் நமக்கு குரு. ஃபீல்டைப் பத்தி, எப்படி நடந்துக்கணும், காமெரா முன்னால நிக்கும்போது என்ன பண்ணனும் பண்ணக் கூடாதுங்கறவரை ஏகப்பட்ட டிப்ஸ் கொடுத்திருக்கார்" என்கிறார்.

# காயத்ரி ஜெயராமின் வீட்டுக்குள் அனுமதியின்றி நுழைந்த ஹீரோ!



காயத்ரி ஜெயராமை மிக தீவிரமாக காதலித்தார் புது கதாநாயகன் விமல். ஆனால் காயத்ரி தன்னை காதலிக்கிறாரா ? என்பதை அவர் தெரிந்து கொள்ளவில்லை.

தினமும் காயத்ரி செல்லும் பஸ்சில், அவரை பின்தொடர்ந்தார். பஸ்சில் காயத்ரி அருகில் நின்றபடி, அவரை கண்களால் விழுங்கினார். ஏக்கத்துடன் பார்த்தார். காயத்ரியும் அதை கவனித்தார். ஆனால் கண்டும் காணாதது போல் நடந்து கொண்டார். ஒரு நாள் காயத்ரி அணிந்திருந்த ஒரு கொலுசு கீழே கழன்று விழுந்தது. அதை அவருக்கு தெரியாமல் விமல் எடுத்து வைத்துக் கொண்டார். காயத்ரியை பின் தொடர்ந்து சென்று, அவர் வீட்டை கண்டு பிடித்தார். ஓசையில்லாமல் வீட்டுக்குள் நுழைந்தார்.

வாசலில் நின்ற காயத்ரியின் அப்பாவை பார்த்து, கமல் அதிர்ச்சி அடைந்தார். அவர் ஏற்கனவே விமலுக்கு அறிமுகமானவர். காயத்ரியின் அப்பா, விமலை வரவேற்று உட்கார சொன்னார். "என் மகளுக்கு அடுத்த வாரம் திருமணம். நீ அவசியம் வர வேண்டும்" என்ற அதிர்ச்சிகரமான தகவலை தெரிவித்தார்


இப்படி ஒரு காட்சி சத்யா மூவி மேக்கர்ஸ் வழங்கும் 'நீ வரும் பாதையெல்லாம்' படத்துக்காக படமாக்கப்பட்டது. காயத்ரி ஜெயராமின் அப்பாவாக பூரணம் விஸ்வநாதன் நடித்தார்.

ஆகாஷ், விந்தியா, ராஜீவ், நளினி, பூர்ணம் விஸ்வநாதன், அனுமோகன், சாப்ளின் பாலு, மதன்பாப் ஆகியோரும் இந்த படத்தில் நடிக்கிறார்கள்.

ஒளிப்பதிவு – எஸ்.ஆர். கணேஷ், இசை – பரத்வாஜ் , வசனம் – எம். செந்தமிழன், கதை, திரைக்கதை, டைரக்ஷன் – புவி

ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்களில் படப்பிடிப்பு நடந்தது.

# பூமிகா சாயலில் ஸ்ட்ராபெரி ஐஸ்



ஜெமினி 125–வது நாள் விழா கடந்த வாரம் சென்னையில் நடந்தது. ஏவி.எம். நிறுவனம் நடத்துகிற விழா என்றால் சொல்ல வேண்டியதில்லை. விழா நடந்த ஏவி. எம். ராஜேஸ்வரி ஹால் முழுக்க வி.ஐ.பி.கள். மேடையில் கமல், விக்ரம் என அட்ராக்ஷன் பார்ட்டிகள் நிறைய இருந்தார்கள். அதேபோல் கீழேயும் கிரண், ஓ போடு ராணி தொடங்கி ஒரு குரூப். ஆனால் விழாவுக்கு வந்திருந்தவர்கள் தொடங்கி, பத்திரிகை புகைப்படக்காரர்கள் பலரின் பார்வை நிலைகுத்திக் கிடந்த இடம் மேடைக்கெதிரே இரண்டாவது வரிசையில் அமர்ந்திருந்த ஒரு ஸ்ட்ராபெரி ஐஸ் மீது!

கொஞ்சம் பூமிகா சாயல் கலந்த அந்த அல்ட்ராமாடர்ன் பார்ட்டி யாரென்று விசாரித்தால் பெயர் – நமிதா. மும்பையிலிருந்து மாடலில் ஃப்ளைட்டைப் பிடித்து ஆந்திர ரசிகர்களை கதிகலக்க வந்த நடமாடும் கவிதை. அறிமுகமான படம் இன்னும் திரைக்கு வரவில்லை.

# கல்லூரி மாணவருடன் நடிகைக்கு ஏற்பட்ட நட்பு



16 வயது முதல் 22 வயதுவரை உள்ள இளைஞர்களின் மனதுக்குள் யாராவது ஒரு சினிமா கதாநாயகி வாழ்ந்து கொண்டிருப்பாள். இதை மையமாக வைத்து 'ஜங்ஷன்' என்ற படம் உருவாகியிருக் கிறது.

கல்லூரி மாணவரான அபினய்க்கும், சினிமா கதாநாயகி கனிஷ்காவுக்கும் நட்பு ஏற்படுகிறது. இந்த நட்பு எதிர் காலத்தில் அபினய் வாழ்க்கையை எப்படி பாதிக்கிறது ? என்பதே கதை.

அபினய் – கனிஷ்காவுடன் ஆம்னா, விநாயக ராஜ், வெ.ஆ. மூர்த்தி, பாண்டு, பாஸ்கர் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

படப்பிடிப்பு இலங்கையின் தலைநகரமான கொழும்பு மற்றும் கண்டி நுவரேலியா ஆகிய இடங்களில் நடைபெற்றது. 3 பாடல் காட்சிகள் அங்கு படமாக்கப்பட்டன. அத்துடன் படப்பிடிப்பு முடி வடைந்தது.

விரைவில் திரைக்கு வர இருக்கும் இந்த படத்துக்கு பரத்வாஜ் இசையமைக்கிறார். பிரிமூஸ் ஒளிப்பதிவு செய்கிறார்.

எடிட்டிங் : எல். கேசவன், கலை : சண்முகா, நடனம் : அஜய் ராஜ், சண்டை பயிற்சி : சூப்பர் சுப்பராயன். ஆர்.எஸ். ராமநாதன் டைரக்டு செய்கிறார். ஹைடெக் மீடியா பிரசன்ட்ஸ் சார்பில் டி.என். ஜானகிராமன் தயாரிக்கிறார். இணை தயாரிப்பு : ஏ. செந்தில்

# என்னை மட்டும் காதல் பண்ணு

ரோஜா கம்பைன்ஸ் எம். காஜாமைதீன், தற்போது ராஜ்கபூர் இயக்கத்தில் சரத்குமார் – சுரேஷ்கோபி – தேவயானி – அபிராமி நடித்துள்ள 'சமஸ்தானம்' திரைக்கு வந்து விட்டது. இதைத் தொடர்ந்து அவர் தயாரிக்கும் பிரம்மாண்டமான படம் 'என்னை மட்டும் காதல் பண்ணு'.

கஸ்தூரி ராஜா இயக்கிய 'துள்ளுவதோ இளமை' படத்தில் கதாநாயகனாக அறிமுகமான அவரது மகன் தனுஷ், தற்போது தனது



அண்ணன் செல்வ ராகவன் இயக்கத்தில் 'காதல் கொண் டேன்' படத்தில் நடித்து வருகிறார். இதையடுத்து கஸ்தூரிராஜா இயக் கத்தில் 'ட்ரீம்ஸ்' படத்தில் நடிக்கிறார். இந்த இரண்டு படங்களைத் தொடர்ந்து 'என்னை மட்டும் காதல் பண்ணு' படத்தில் இளமை துள்ளும் காதல் நாயகனாக நடிக்கும் அவரது ஜோடியாக செரீன் நடிக்கிறார்.

மற்றும் சரத்பாபு, நிழல்கள் ரவி, எஸ்.பி.பி. சரண், மயில்சாமி, வையாபுரி, அஞ்சு ஆகியோருடன் முக்கிய கதாபாத்திரத்தில் கே.எஸ். ரவிக்குமார் நடிக்கிறார்.

இசை – தேவா , பாடல்கள் – பா. விஜய், அடுத்த மாதம் முதல் சென்னை, ஊட்டி, மைசூர், குளு மனாலி ஆகிய பகுதிகளில் இந்தப் படத்தின் படப்பிடிப்பு தொடங்கி நடைபெறுகிறது.




இப் பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 30.09.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

# இவ்வார இராசி பலன்கள்

## (30.09.2002 முதல 06.10.2002வரை)

| | | | |
|---|---|---|---|
| | | ராகு சனி | சந் |
| | இராசிச் சக்கரம் | | குரு |
| | | | புதன் செவ். |
| | கேது | சுக் | சூரி |

## மேடம்

**(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

உங்களுக்கு இவ்வாரம் 4, 5 இல் சுபஸ்தானங்களில் சுபர்கள் சஞ்சரிப்பதாலும் ஜென்மராசியை வெள்ளி நோக்குவதாலும் நினைத்த கருமம் ஜெயமளிக்கும். தனம், பொருள் வரவும், உறவினர், நண்பர், பெரியோர் உதவிகளும் ஒத்தாசைகளும் புத்திர வழி மூலம் அனுகூலமும் கிடைக்கும். இவ்வாரம் ஜீவன ஸ்தானம், சுப யோகமாக அமைவதாலும், சந்திரன் 3, 4, 5ஆம் ஸ்தானங்களில் பிரவேசிப்பதாலும் உங்கள் நனமதிப்பு, கௌரவம் கிட்டும். தனியாகவோ அல்லது கூட்டுமுயற்சியாகவோ இவ்வாரம் தொழில் ஆரம்பிக்கலாம். தொழில் நிமித்தம் அயல் நாட்டுப் பிரவேசம் உண்டாகலாம். காரியத்தில் குறிக்கோளாவீர்கள். விவேகம் கூடும், தேகம் வீரியம் பெறும். உத்தியோகத்தர்க்கு தொழில் ஸ்தானங்களில் செல்வாக்கு அதிகரிக்கும். வியாபாரிகளின் வியாபாரம் இவ்வாரம் நல்ல இலாபத்தை ஈட்டிக் கொடுக்கும். ,விவசாயிகளின் வங்கியிருப்புகள் மனநிறைவைத் தரும். பெண்களுக்கு சௌபாக்கிய யோகமுண்டாகும். மாணவர் கல்வியில் சித்திபெறுவர்.

## இடபம்

**(கார்த்திகை 2, 3, 4 ரோகிணி, மிருகசீரிடம் 1, 2ஆம் பாதம்)**

உங்களுக்கு இவ்வாரம் சந்திரன் 2, 3, 4, 5 சுபயோக ஸ்தானங்களில் சஞ்சரிப்பதால் நன்மையான பலன்களை எதிர்நோக்கலாம். ஜீவன ஸ்தானத்தையும், இலாப ஸ்தானத்தையும் குரு, புதன், ரவி நோக்குவதால் தனம், பொருள், மனை, வாகன, விருத்திகள் உண்டாகும். செய்யும் கரும காரியங்கள் வெற்றியளிக்கும். சத்துரு ஜெயம். நோய் நிவர்த்தி, கடன் தொல்லை நீங்கும், வழக்கு விடயங்களில் வெற்றி கிட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு நீங்கி, பதவிச் செல்வாக்கு ஏற்படும். வியாபாரிகளுக்கு கணிசமான இலாபம் கிடைக்கும். விவசாயிகளுக்கு அரச சன்மானங்கள் வந்துசேரும். பெண்களுக்கு கண்டக ஸ்தானத்தில் தீய கிரகங்கள் இருப்பதால் வைத்தியச் செலவுண்டாகும். தேகாபிமானம் அவசியம். மாணவர்க்குத் தடைகள் இருப்பதால் ஊக்கமும் விடாமுயற்சியும் அவசியம்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 2, 3 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ஆம் பாதம்)**

உங்களுக்கு இவ்வாரம் சந்திரன் சுபயோக 1, 2, 3, 4ஆம் ஸ்தானங்களில் சஞ்சரிப்பதாலும், 2இல் குரு உச்சம் பெறுவதாலும், வெள்ளி 5இல் ஆட்சி யோகம் அமைவதாலும் நன்மையான யோகங்களை இவ்வாரம் எதிர்பார்க்கலாம். தன லாபம், பொருள், மனை அபிவிருத்தியடையும். வாகன சுகம், மாதா சௌபாக்கியம், கல்வி விருத்தி, குடும்ப நலம் முதலியன கிட்டும். உத்தியோகத்தர்களுக்கு பதவிச் செல்வாக்கும், மேலதிகாரிகளின் நன்மதிப்பும் உண்டாகும். உத்தியோகப் பெண்களுக்கும் ஏற்றமுண்டு. குடும்பப் பெண்களின் கரும காரியங்கள் நிறைவு பெறும். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைகூடும். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழில்களால் இலாபமடைவர். மாணவர் கல்வி ஊக்கமும், விடாமுயற்சியுமடைவர். ஆசிரியர் மாணவர் உறவு சீராகும்.

## கடகம்

**(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)**

உங்களுக்கு ஜெனமத்தில் குரு உச்சம் பெறுவதாலும், 4இல் வெள்ளி ஆட்சி பெறுவதாலும் நற்பலன்கள் இவ்வாரம் ஏற்படும். களஸதிர சுகமுண்டு. தனம், பொருள் விருத்தி உண்டாகும். சுப ஸ்தானங்களில் சந்திரன் பிரவேசிப்பதாலும், ஜீவன ஸ்தானத்தை ஆட்சி வெள்ளி பார்ப்பதாலும், தொழில் மேன்மையுண்டாகும். செய்யும் காரியங்கள் ஜெயம் பெறும். கூட்டுத்தொழில் ஆதாயம் தரும். உத்தியோகத்தர்களுக்கு கணிசமான வேலைப் பழு உண்டு. சக ஊழியர்களின் உதவி, ஒத்துழைப்புக்கள் சுமாராகும். வியாபாரிகளின் வியாபாரம் நன்றாக அமையும். விவசாயிகள் சந்தைப்படுத்தல் மூலம் கணிசமான இலாபமடைவர். வங்கியிருப புக்கள் மனநிறைவைத் தரும். பெண்களுக்கு ஜென்மத்து வியாழ தோஷத்தைச் சனி பார்ப்பதால் தேகாபிமானம் அவசியம். மாணவர்க்கு கல்வியில் சிரத்தையும் ஊக்கமும் தேவை.

## சிங்கம்

**(மகம், பூரம் உத்தரம் 1ஆம் பாதம்)**

உங்களுக்கு இவ்வாரம் ஜென்மத்துச் செவ்வாயும், கண்டக ஸ்தானத்தில் பாவர்கள் இருப்பதாலும் தீமையான பலன்களே உண்டு. 12இல் வியாழன், 3இல் வெள்ளி மறைவு க்ளஸ்திர சுகம் ஏற்படாது. புருஷன், மனைவி கருத்து முரண்பாடுகள் ஏற்படும். இடையிடையே ஆரோக்கியக் குறைவு. அலைச்சல், அடிக்கடி பயணம் கிட்டும் அயல் நாட்டுத் தொடர்பால் கணிசமான ஆதாயம் கிடைக்கும். அரசு சார்ந்த முயற்சிகள் உங்களுக்கு அனுசரணையாக அமையும். உத்தியோகத்தர்களுக்கு கணிசமான வேலைப்பழு உண்டு. சக ஊழியர்களின் உதவி, ஒத்துழைப்புக்களை எதிர்பார்க்கமுடியாது. வியாபாரிகள் புதிய வியாபாரம் ஆரம்பிக்கலாகாது. புது முதலீடுகளைக் கட்டுப்படுத்தல் நன்று. வியாபாரிகள் சந்தைப்படுத்தல் மூலம் கணிசமான இலாபம் எதிர்பார்க்கலாம். பெண்களுக்கு ஆரோக்கியக் குறைவால் வைத்தியச் செலவேற்படும். மாணவர்க்கு கல்வி மந்த நிலை பெறுவதால் ஊக்கமும், விடாமுயற்சியும் அவசியம்.

## கன்னி

**(உத்தரம் 2, 3, 4 அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதம்)**

உங்களுக்கு 10, 11, 12ஆம் ஸ்தானங்களில் சந்திரன் சஞ்சரிப்பதாலும், தன ஸ்தானத்தில் வெள்ளி ஆட்சி பெறுவதாலும் தனம், பொருள், மனை, வாகன, குடும்ப விருத்திகள் ஏற்படும். ஜென்மச் சூரியன் இடையிடையே உஷ்ண சோகத்தை உண்டாக்கும். நினைத்த காரியம் ஜெயம் பெறும். உறவினர், அயலவர், பெரியோர், நண்பர், உதவி, ஒத்துழைப்புக்கள் கிடைக்கும். உங்களைக் கௌரவிக்கக் கூடிய அளவுக்கு செல்வாக்கு இவ்வாரம் கிட்டும். தொழில்களுக்குரிய சிக்கல்கள் மறையும். உத்தியோகத்தர்கள் இவ்வாரம் ஏற்றம் காண்பர். உத்தியோகப் பெண்களும் செல்வாக்குப் பெறுவர். வேலைப்பழுக்கள் நீங்கும். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைகூடும். குடும்பப் பெண்களுக்கு கணவன், மனைவி, பிள்ளைகள் பாசபந்தங்கள் கூடும். வியாபாரிகளின் நிதி வரவு மனநிறைவைத் தரும். விவசாயிகளுக்கு அரச மானியங்கள் உரிய வேளைகளில் வந்து சேரும். ஆசிரியர் - மாணவர்கள் உறவு சீர் நிலையடையும்.

## துலாம்

**(சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் பாதம்)**

உங்கள் இராசிக்கு சுபர் ஸ்தானங்களாகிய 9, 10, 11ஆம் இடங்களில் சந்திரன் யோக சஞ்சாரஞ் செய்வதாலும், ஜென்ம ராசியில் வெள்ளி ஆட்சி பெறுவதாலும், 11இல் புதன், செவ்வாய் பலமடைவதாலும் இவ்வாரம் யோக பலன்களை எதிர்பார்க்கலாம். தனம், பொருள், மனை வாகன, குடும்ப அபிவிருத்திகள் ஏற்படும். இல்லற சுகம் கிடைக்கும், சுப கருமங்கள் நிகழ இடமுண்டாகும் தாயார் சுகமும், கல்வி விருத்தியும் கிட்டும். சத்துரு தொல்லைகள் அகலும் உத்தியோகத்தர்க்கு உத்தியோக அதிகாரம் உண்டு. உத்தியோகப் பெணகளும் ஏற்றம் காண்பர். கன்னிப் பெண்களின் திருமணம் நிறைவு பெறும் குடும்பப் பெண்களுக்கு சௌபாக்கிய யோகம் உண்டு. அஷ்டமத்துச் சனி, ராகு தோஷம் நடப்பதால் தேகாபிமானம் அவசியம். மாணவர்க்குக் கல்வியில் அபிவிருத்தி பெற வாய்ப்புண்டாகும். ஆசிரியர் - மாணவர் உறவு சீர்பெறும்.

## விருச்சிகம்

**(விசாகம் 4, அனுஷம், கேட்டை)**

உங்களுக்கு இவ்வாரம் சந்திரன் 9, 10, 11ஆம் புண்ணிய, கர்ம, இலாப ஸ்தானங்களில் சஞ்சரிப்பதாலும், 9இல் குரு உச்சமும், 10இல் புதன், செவ்வாய் திக்கு பலமடைவதும் யோகமாகும். புண்ணி தர்ம கருமங்களில் ஈடுட ஏதுவாகும் பிதாவழி மூலம் உதவிகள் கிட்டும். செய் தொழில் இலாபமும் ஈடுபடும் காரியமும் வெற்றியாக அமையும். களஸதிர ஸ்தானத்தில் தீய கிரகங்களின் பார்வையேற்படுவதால் களத்திர சுகம் கிட்டாது. கணவன் - மனைவி கருத்து முரண்பாடுகள் இடையிடையே தோன்றும். உத்தியோகத்தர்களுக்கு ஏற்றமும் செல்வாக்கும் உண்டாகும். வியாபாரிகள் தம் முயற்சியால் பயனடைவர். வங்கியிருப்புக்கள் மனநிறைவைத் தரும். விவசாயிகளுக்கு பண்ணைகளில் இலாபம் ஏற்படும். அரச மானியங்கள் உரிய வேளைகளில் கைகளில் வந்துசேரும். பெண்களுக்கு இல்லத்தில் சுபமங்கள கொண்டாட்டங்களுக்கும், ஆடை ஆபரணங்களுக்கும் குறைவிராது. மாணவர்கள் கல்வியில் ஏற்றமடைவர்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம்)**

உங்களுக்கு இவ்வாரம் 10இல் சூரியன் திக்குபலமும், இலாப ஸ்தானத்தில் வெள்ளி ஆட்சி பெறுவதாலும் செய் தொழில் வளம் உண்டாகும். காரியங்கள் ஜெயமளிக்கும். அஷ்டமத்துக் குருவும் 6இல் தீய சேர்க்கையுமிருப்பதால் இடையிடையே தேகசுகம் பாதிப்பதால் வைத்தியச் செலவுண்டாகும். நீண்ட பயணம், அலைச்சல், அடிக்கடி பிரயாணம் முதலியவற்றை உண்டாக்கும். சிலருக்கு வயிற்றில் கோளாறு அல்லது உஷ்ண ரோகம் ஏற்படும். தொழில் ரீதியாக நன்மைகள் கிட்டும். நிதி நெருக்கடி தீரும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் அழுத்தம் குறைவடையும் வேலைக் கஷ்டம் ஓரளவு அகலும். வியாபாரிகள் தம் முயற்சிக்கேற்ப இலாபம் பெறுவர். விவசாயிகள் சந்தைப்படுத்தல் மூலம் இலாபமடைவர். கூலியாட்கள், வேலை கொள்வோர் உறவு சீரடையும் பெண்களுக்கு தேகாபிமானம் அவசியம். மாணவர் கல்வியில் சித்தியும், ஊக்கமும் பெறுவர்.

## மகரம்

**(உத்தராடம் 2, 3, 4 திருவோணம், அவிட்டம் 1, 2ஆம் பாதம்)**

உங்கள ராசியை உச்ச குரு நோக்குவதாலும், சந்திரன் சுப ஸ்தானஙகளில் சஞ்சரிப்பதாலும், 10இல் வெள்ளி ஆட்சியாவதாலும் நன்மையான யோக பலன்களை எதிர்பார்க்கலாம். தனம், பொருள், மனை விருத்தி பெறும். இல்லத்தில் இன சன கொண்டாட்டங்கள் நிகழும். மணமாகாதோர்க்கு திருமணப் பேச்சுக்கள் இடம்பெறும். தொழிலால் இலாபமும் செய் தொழில் விருத்தியும் உண்டாகும். மனோதைரியமும், குடும்பத்தில் அமைதியும் கிட்டும். தொழில் மூலம் ஏற்படும் தடை தாமதங்கள் விலகும். வெளிநாட்டுப் பிரயாண வசதிகள் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகச் செல்வாக்கு அதிகரிக்கும். சக உத்தியோகத்தர்களின் உதவி, ஒத்துழைப்புக்களால் வேலைப் பொறுப்புக்கள் நீங்கும. அதிகாரிகளின் பாராட்டுக் கிட்டும வியாபாரிகளின் வியாபாரம் முன்னேற்றம் பெறும். 10இல் வெள்ளி ஆட்சி பெறுவதால் விவசாயிகளின் நிதி வசதிகள் உச்சம் பெறும். பெண்களுக்கு சௌபாக்கிய யோகம் இவ்வாரம் உண்டு. மாணவர் கல்வியில் உயர்வடைவர்.

## கும்பம்

**(அவிட்டம் 3, 4 சதயம், பூரட்டாதி 1, 2, 3)**

உங்களுக்கு இவ்வாரம் அஷ்டமத்தில் சூரியன், 6இல் குரு, 7இல் செவ்வாய், அசுப ஸ்தானங்களில் சந்திரனும் சஞ்சரிப்பதால் நன்மையான பலன்களை எதிர்பார்க்க முடியாது. தேகநலம் பாதிப்பு, அலைச்சல், மன உழைச்சல் அடிக்கடி பயணம் கிட்டும். செய் தொழிலால் விருத்தியின்மை, வரவுக்கு மிஞ்சிய செலவு, பண விரயம் முதலியன உண்டாகும். தற்போது தெசாபுத்திகளின் பலன்கள் பலமாகவிருந்தால் மேற்குறிப்பிட்ட தீயபலன்களின் தாக்கம் தணியும். உத்தியோகத்தர்க்கு கணிசமான வேலைப்பழு உண்டாகும். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த இலாபம் கிடைக்காது. விவசாயிகளின் விளைச்சல் மந்தநிலை பெறும். சந்தைப்படுத்தலில் கஷ்டமுண்டாகும். வங்கியிருப்புகள் மனநிறைவைத் தராது. பெண்களுக்கு இடையிடையே தேகசுகம் பாதிக்கப்படுவதால் வைத்தியச் செலவுண்டு. தேகாபிமானம் தேவை. மாணவர்க்கு கல்வியில் மந்தநிலையேற்படுவதால், கல்வியைத் தொடர ஊக்கமும் விடாமுயற்சியும் தேவை.

## மீனம்

**(பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)**

உங்களுக்கு இவ்வாரம் 4, 5, 7ஆம் யோக ஸ்தானங்களில் சந்திரன் சஞ்சரிப்பதாலும், 5இல் குரு உச்சயோகம் பெறுவதாலும் நன்மையான பலன்கள் ஏற்படும். மனக் கவலை நீங்கி, குடும்பத்தில் அமைதி தோன்றும். தனம், பொருள், மனை, வாகன, குடும்ப விருத்திபெறும். இல்லற சுகம் இனிதே நடக்கும். சுப மங்கள கொண்டாட்டத்திற்கும் இல்லத்தில் இடமுண்டு. புத்திச் சாதுரியம், புத்திர வழியில் அனுகூலமும் கிட்டும். சத்துரு ஜெயம், நோய் நிவர்த்தி, கடன் பழு அகலும் வழக்கு முயற்சிகளில் சாதக பலன் கிட்டும். செய் தொழில் விருத்தியும், கரும காரியங்களில் உற்சாகமும் பிறக்கும்.

**த.சத்தியதாஸன் (சத்யா)**

உத்தியோகத்தர்களுக்கு பதவி அதிகாரமுண்டு. உத்தியோகப் பெண்களும் ஏற்றமடைவர். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைகூடும். குடும்பப் பெண்களுக்கு கணவன், மனைவி, பிள்ளைகள், பாசபந்தங்கள் திகழும். வரவுக்கேற்ற செலவுண்டு. வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழிலால் கணிசமான இலாபம் பெறுவர். மாணவர் படிப்பில் கவனம் செலுத்துவர். மாணவர், ஆசிரியர் உறவு வலுக்கும்.

* * *

# அந்தப்பறவைகள் எங்கே?

இந்து சமுத்திரத்தில் அமைந்திருக்கும் மொரிஸியஸ் தீவில் முன்னர் டோடோ (Dodo) என்னும் ஒரு இனப் பறவைகள் வசித்தன. இந்தப் பறவைகள் உருவத்தில் மிகப் பெரியவை. ஆனால் பறக்கும் ஆற்றல் இல்லாதவை. இவை உலகில் மொரிஸியஸ் தீவில் மட்டுமே காணப்பட்டன. இந்தப் பறவைகளைத் தாக்கக்கூடிய வேறு பெரிய மிருகங்கள் எதுவும் அங்கிருக்கவில்லை. 1598ஆம் ஆண்டுவரை அங்கு பெரும் எண்ணிக்கையில் டோடோ பறவைகள் வாழ்ந்துள்ளன. அதே ஆண்டில் முதன்முறையாக மொரிஸியஸ் வந்திறங்கிய டச்சுக்காரர் பின்னர் அத்தீவைத் தமது காலணி ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். அவர்கள் அங்கு வரும்போது தம்முடன் வேட்டை நாய்களையும் பன்றிகளையும் கொண்டு வந்தனர். இப்படி மொரிஸியஸில் குடியேறிய டச்சுக்காரர் இறைச்சிக்காக டோடோப் பறவைகளை வேட்டையாடத் தொடங்கினர். அவர்கள் கொண்டு வந்த வேட்டை நாய்கள் பறக்கும் சக்தியில்லாத அந்தப் பறவைகளை மிக இலகுவாகப் பிடித்துக் கொன்று தள்ளின. டச்சுக்காரர்களினால் கொண்டு வரப்பட்ட பன்றிகளோ டோடோப் பறவைகள் இட்ட முட்டைகள் எல்லாவற்றையும் தேடித் தின்று தீர்த்தன. டச்சுக்காரரின் வருகையின் பின்னர் மொரியஸியஸில் வாழ்ந்த டோடோ பறவைகளின் எண்ணிக்கை மிக வேகமாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. 1680ஆம் ஆண்டளவில் - டச்சுக்காரர் முதன் முதலாக மொரிஸியஸுக்கு வந்து முழுவதுமாக ஒரு நூற்றாண்டு கழிவதற்கு முன்னரே - அங்கு வாழ்ந்த டோடோப் பறவைகள் அனைத்துமே கொன்றொழிக்கப்பட்டு விட்டன. இதனால் டோடோப் பறவை இனம் இவ்வுலகிலிருந்து முற்றாகவே அழிந்துவிட்டது.

டோடோப் பறவை மட்டுமல்லாது இவை போன்ற இன்னும் எத்தனையோ உயிரினங்கள் இது வரை முற்றாகவே இல்லாதொழிககப்பட்டுவிட்டன. இன்றுங்கூட பல தாவர இனங்களும் மிருக இனங்களும் இவ்வுலகிலிருந்து முற்றாகவே அழிந்துவிடும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன. சுய நலத்துக்காக இவற்றைக் கண்மூடித்தனமாக அழித்துவரும் மனித வர்க்கமே இந்நிலைக்கான பொறுப்பை ஏற்கவேண்டும். இன்று ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் ஒரு தாவர இனமோ அல்லது மிருக இனமோ இவ்வுலகிலிருந்து முற்றாகவே அழிந்து கொண்டிருக்கிறது. இந்நிலை தொடருமானால் மிக விரைவிலேயே இப்போதிருக்கும் தாவர இனங்களிலும் மிருக இனங்களிலும் 1/... பங்கானவற்றை நாம் உலகில் எங்குமே காணமுடியாது போய்விடும்.

*("More about our living world" - Janaki Galappatti)*

# புலிகளுக்கு ஆத்திரம் ஊட்டும் யாழ். குடாநாட்டுப் படையினர்

## போர்ச் சங்கொலி மீண்டும் ஒலிக்குமா?

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும இடையே தாய்லாந்தில் முதற்



கட்ட சமாதானப் பேச்சுக்கள் இடம் பெற்றிருப்பது இலங்கை வாழ் மக்கள் மனங்களில் ஒரு வித மகிழ்வையும், மன நிம்மதியையும் உருவாக்கியுள்ளது.

இச் சமாதானம் நீண்டு நிலைக்க வேண்டும் என்பதும், நிம்மதியான வாழ்வு நிரந்தரமாக வேண்டும் என்பதும் மக்களின் பேராவலாகும்.

இரு தசாப்தங்களாக கொழுந்து விட்டெரிந்த போர்த்தீயில் எத்தனையோ உயிரழிவுகள், சொத்தழிவுகள் ஏற்பட்டு, அதன் தாக்கத்தோடு உளவியல் ரீதியான பாதிப்புக்களும் மக்களை வாட்டுகின்றது.


இவற்றுக்கெல்லாம் நிரந்தர முடிவாகவே இன்றைய சமாதானம ஏற்பட்டிருக்கின்றது என்பதும், ஓர் அழிவுச் சாம்ராச்சியத்துக்கு இறுதி முடிவு எட்டப்பப் போகின்றது என்பதையும் கட்டியம் கூறுவதாகவே இச் சமாதானச் சூழல் உருவாகியுள்ளது என்பதும், மக்களின ஆவலில் எழுந்த நம்பிக்கையான எதிர்பார்ப்பாகும்.

விடுதலைப் புலிகள் போரில் வல்லவர்கள், மக்களின் விடியலில் அவர்களின் நல் வாழ்வில் அக்கறை கொண்டவர்கள்.

மக்களுக்காகவே போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என் பதை வெளிப்படுத்தும் வகையில்,

சமாதானத்தின் மீது புலிகளுக்கும் விருப்பம் உண்டு, அதற்கான கதவு நிரந்தரமாக திறக்கப்பட்டே உள்ளதென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள்பல தடவை வெளிபபடையாகத் தெரிவித்திருந்தார்.

இத்தகைய புலிகளின்நிலைப் பாட்டில் அவர்களால் ஒரு தலைப் பட்சமாக அறிவிக்கப்பட்ட போர் நிறுத்தத்தின் மூலமே விளைநதது இன்றைய சமாதானம். அவர்களின தந்திரோபாயமான அரசியல் நகர்வு ஏற்படுத்திக் கொடுத்ததே



இன்றைய சமாதானப் பரிசு.

இதனைக் கைநழுவவிடாது தக்கதொரு சூழல் ஏற்பட்டுள்ளது என்பதை புரிந்து கொண்ட அரசாங்கமும பதிலுக்கு போர் நிறுத்தத்தை பிரகடனப்படுத்தி துப்பாக்கிகளுக்கும் வெடி குண்டுகளுக்கும் ஓய்வைக் கொடுத்தது.

யுத்தத்தின் சத்தம் ஓய்ந்து இலங்கை வானில் கருக்கட்டியிருந்த யுத்த மேகம் காற்றோடு கலைந்து போனது. சமாதானப் பூக்கள் மெல்ல முகிழ் விட்டு மலர்ந்து முகம் காட்டத் தொடங்கியது.

ஆஹா அருமையானதொரு சூழல அற்புதமாக உருவாகியுள்ளது என்று மக்கள் மகிழ்ந்து ஆர்ப்பரித்தனர்.

இதன் விளைவில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில புரிந்துணர்வு ஏற்பட்டு, இரு தலைவர்களும் அதனை நிரந்தரமாக்க உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

சமாதானப் புறச்சூழலில் மக்களோடு இணைந்து இயல்பு வாழ்க்கையை கட்டியெழுப்பும் வகையில், விடுதலைப் புலி உறுபபினர்கள் அரசியல் நடவடிக்கை



களை முன்னெடுக்க, தமது கட்டுப்பாட்டில் இல்லாத தமிழர் தாயகப் பிரதேசங்களுக்கும் செனறனர்.

அரச படைகள், விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர், போராளிகள், த்மிழ்க் கட்சிகள், மக்கள் அனைவரும் ஒரே பிரதேசங்களில் தத்தமது நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற இந் நிலையில், எத்தனையோ அர்ப்பணிப்புக்கள், இழப்புக்களுக்கு மத்தியில் ஏற்படுத்தப்பட்ட சமாதான நல்லெண்ணச் சூழல் கலைந்து போகுமோ என்ற அச்சம் தற்போது ஏற்பட்டுள்ளது.

### மக்கள் மத்தியில் அச்சம்

யாழ்குடாநாட்டில் சமாதானத்திற்கு எதிராக, புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணாக சில சம்பவங்கள் நடந்துள்ளன.

இ:.து சமாதானத்தை சீர்குலைதது விடுமோ என்ற அச்சத்தை மக்கள் மத்தியில் எற்படுத்தியுள்ளது.

சமாதான இயல்பு நிலையில் தமது பிரதேசத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் விடுதலைப்புலிப் போராளிகளை சீண்டிப் பார்ப்பது, அவமானப் படுத்துவது, அவர்களோடு மல்லுக்கட்டுவது போன்ற சம்பவங்கள் தீவகம் மற்றும் வடமராட்சியில் நிகழந்துள்ளதை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு செய்யப்பட்ட முறைப்பாடுகள் உறுதி செயகின்றன.


இத்தகைய வேண்டாத நடவடிக்கைகள் நிரந்தர சமாதானத்திற்கு ஆரோக்கியமானது அல்ல.

இவை எத்தனையோ இடரகள் துன்பங்களுக்கு மத்தியில் ஏற்பட்ட அருமையான சமாதானத்தை குழப்பி, மீண்டும் மக்களை அவல வாழ்ககைக்குள் தள்ளிவிடும்.

நெடுந்தீவுப் பகுதியில் பாரியதொரு கடற்படை முகாம் அமைக்க முயற்சித்தமை, தீவகத்தின அல்லைப்பிட்டிச் சோதனை சாவடியில் விடுதலைப் புலிகளின் போாரளிகளை சீண்டிப்பார்க்கும் வகையில் படையினர் செயற்படுகின்றமை, வடமராட்சிப் பகுதியில் போராளிகளின் பிரதேச நுழைவுகளுக்கு தடை விதிக்கின்றமை போன்ற சம்பவங்கள், குடா நாட்டில் ஓர் இறுக்கமான சூழல் ஏற்பட்டு வருகின்றது என்பதையே வெளிப்படுத்துகின்றது.

இந் நிலைமை நீண்டு தொடருமேயானால் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பரஸ்பர நல்லுறவு உடைந்து முறுகல் நிலை அதிகரிக்கும.

இதனால் பெரும் அச்சஉணர்வு குடாநாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. தற்பொழுது ஏனைய தமிழர் தாயகப் பிரதேசங்களிலும் பார்க்க முறுகல் நிலையும் உடன்படிக்கை மீறல்களும் குடா நாட்டிலேயே அதிகரித்துள்ளன. அதன் வெளிப்பாடாகவே நல்லூரில் இடம்பெற்ற தியாகி திலீபனின் 15ம் ஆண்டு இறுதி நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையா



ற்றிய விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.இளம்பரிதி "குடாநாட்டில் அதிகரித்து வரும படையினரின் கெடுபிடி நடவடிக்கைகள் சமாதானத்துக்கு பெரும் அச்சுறுத்தல்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலைமைகளின் அடிப்டையில் படையினரின் வேண்டாத நடவடிக்கைகள் அதிகரிப்பு சமாதானத்தை சீர்குலைத்துவிடுமோ என்ற அச்சத்தை ஏறபடுத்தியுள்ளது.

குடாநாட்டின் நடவடிக்கைகளே போர்ச்சங்கை முதலில் ஊதப் போகின்றனவோ என்ற அச்சமும் கூடவே ஏற்பட்டுள்ளது.

சமாதானத்தை சீர்குலைத்து மண்டுமோர் யுத்தம் வெடிக்குமேயானால் ஏற்படப்போகும் விபரீதம் மக்களைப் பெரிதும் பாதிக்கும். இடப்பெயர்வுகளும், அழிவுகளும், மரண ஓலங்களும், போர் இரைச்சலும் மீண்டும் ஏற்படுமோ என்பதை எண்ணும்போது மனங் கலங்குகின்றது. ஆண்டவனே அத்தகைய ஒரு சூழலை மீண்டும் ஏற்படுத்தி விடாதே என்றும் மனங்கள் உள்ளுர வேண்டுகின்றன.

சமாதானத்தை அடைய கொடுக்கப்பட்ட விலையை எண்ணிப் பார்த்து, அதற்கான அர்ப்பணிப்புக்களை சிந்தித்து அதனைக் காப்பாற்ற பாடுபடுவது அனைவரதும் பொறுப்பாகும்.

### சர்வதேசம் பாராட்டு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சமாதானத்தை அடைவதில் அவர் காட்டுகின்ற அக்கறை, அவரின் அரசியல் நகர்வின் வெளிப்படுத்தல், அதன் முதிர்ச்சி, அவரின உயரிய இலக்கு, அதன் வழி



நடத்தல் ஆகியவற்றை எண்ணிச் சர்வதேசமே இன்று மூக்கில் விரலை வைத்து வியப்படைந்துள்ளது.

அவரின் முயற்சிக்கும் நடவடிக்கைளுக்கும் உலகத் தலைவர்களிடம் இருந்து பாராட்டுக்களும் வரவேற்புக்களும் கிடைத்த வண்ணமேஉள்ளன.

கட்டுக்கோப்பான விடுதலை அமைப்பின், விடுதலைப் போராட்ட நகர்வின் இன்னொரு கட்ட் வெளிப்பாடே சமாதானத்திற்கான முயற்சியும் ஆதரவும் என்று அவர்கள் புலிகளின் தலைவரை வாயார வாழ்த்துகின்றனர்.

போரியல் விடுதலை, சமாதான விடுதலை இரண்டிலும் அவர் சளைத்தவர் அல்ல என்பதை யும் சர்வதேசம் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என்று முதலில் அறிவித்த இலங்கை அரசாங்கமே அந்த நிலைப்பாட்டில் இருந்து மாறி, அவ்வமைப்பின் மீதான தடையை நீக்கி, அவர்களை அங்கீகரித்து ஆரத்தழுவி நிற்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மற்றும் அரசின் உயர்பீடத்தவர்கள் அனைவருமே பிரபாகரன் என்னும் நாமத்தை உச்சரித்து அவரின் நடவடிக்கைகளை பாராட்டி, புகழ்மாலை சூட்டி சமாதானத்தை நேசிக்கின்றனர்.

இத்தகைய நிலையில் கட்டியெழுப்பப்பட்டு வருகின்ற சமாதானத்தை சீர்குலைக்க படையினர்முயற்சிப்பதாவது "தலையிருக்க வால் ஆடுவது" போன்றதாகும்.

உரிமைகளை இழந்து, அழிவுகளையும் இழப்புக்களையும்

**கோவையூர் ஜெயன்**

சந்தித்த தமிழ் இனம் உரிமைகளைப் பெற்று, இழப்புக்கள் அழிவுகளில் இருந்து விடுபட்டு, நிம்மதியாக வாழ்வதென்பது அவர்களின் வாழ்வாதார அடிப்படை உரிமை அதனை மறுதலிப்பது எவ்வகை நியாயம், அதற்காக அவர்கள் பாடுபடுவதும் போரா டுவதும் குற்றமாகுமா?.

சமாதானம் என்னும் விருட்சம் பற்றிப்படர்ந்து எங்கும் அமைதிச் சூழலை ஏற்படுத்தி, அனைவரும் மன நிறைவுடன் அமைதியாக வாழ, அதன் புறச் சூழலைத் தாக்கும் சமாதான விரோத எதிர் நடவடிக்கைகளை நிறுத்துவோம்.

மக்களின் எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்ப அனைவரும் ஒரே தொனியில் ஒருமித்துப் பாடுபடுவதே சிறந்த ஒரு வழியாகும் என்பதை உணருவோம்.

* * *

**அன்பு மாணவர்களே!**

**உங்களின் கவிதைத் திறனை வெளிப்படுத்த நவாரத்திரிக் காலத்தில் வலம்புரியில் வெளி வரும்**

**நவராத்திரி பாமாலைக்கு**

**4 தொடக்கம் 8 வரிக்குட்பட்ட கவிதைப் பாமாலைகளை அனுப்பி வையுங்கள்.**

*மு.குறிப்பு:* மாணவர்களுக்கு மட்டும் இதில் சந்தர்ப்பம் வழங்கப்படுவதால் மாணவர்கள் தமது சொந்த ஆக்கத்தை மட்டுமே அனுப்பி வைக்க வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி:-

**"நவராத்திரி பாமாலை"**
**வலம்புரி - சங்குநாதம்**
**இல.15, வெள்ளாந் தெரு,**
**யாழ்ப்பாணம்.**

# ஓமந்தையில் கைதிகள் பரிமாற்றம்

## ஸ்ரீலங்கா - தமிழீழ தளபதிகள் சந்திப்பு





கேணல் தீபன், பானு ஆகியோருடன் லயனல் பலகல்ல (நடுவில்) உரையாடுகிறார்.

சம்பிரதாய விடுதலைக்காக காத்திருக்கும் கைதிகள்







போயாகொடவின் தாய் புலிகளுக்கு நன்றி கூறுகிறார்.

சிறை மீண்ட புலிவீரன் தளபதி கேணல் தீபனுடன் ஆரத் தழுவுகிறார்.

பாசப்பிணைப்பில் சகோதரியுடன்







புதுமுகத்திற்கு உறவைக் காட்டும் தாய். . .

புலிகளிடமிருந்து விடைபெறும் கப்டன் போயாகொட

சிறைமீண்ட படைவீரன் தன் தளபதியுடன்







பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரீன் பெர்னான்டோ கேணல் தீபனுக்கு கைலாகு கொடுக்கிறார்.

பாசப்பிணைப்பில் புலிவீரன்

# அற்புதங்கள் பல செய்து அனைவரையும் ஈர்த்த மத சமரச சின்னம் சத்குரு ஷீர்டி சாயி பாபா

**பகவான் ஷீர்டி சாயி நாதரின் அவதார தினம் செப்டெம்பர் 27ஆம் திகதி ஆகும். அவரின் மஹா சமாதி தினம் செப்டெம்பர் 30ஆம் திகதி விஜயதசமி அன்று வருகிறது.**

வட இந்தியாவில் மஹாராஷ்டிரமாநிலத்தில், அஹமத நகர் பிரிவில் ஷீர்டி கிராமம் உள்ளது. மகான் சாயி நாதர் 1858 லிருந்து 1918 வரை தொடர்ந்து இக் கிராமத்தில் வாழ்ந்ததால் ஷீர்டி சாயி பாபா என அழைக்கப்படுகிறார். அங்கு வாழ்ந்த அறுபது ஆண்களில் இறுதி பத்து ஆண்டுகளில் மஹாராஜா ஆகவே கொண்டாடப்பட்டார். ஆயினும் ஏழ்மை வாழ்க்கையையே வாழ்ந்து காட்டிப் போயுள்ளார். மத சமரச சின்னமாக விளங்கினார்.

1940இல் ஸ்ரீ சத்யசாயி பாபா தாம் சாயி பாபா என்னும் ஷீரிடி சாயியின் மறு அவதாரம் என்றும் வெளிப்படுத்தினார். அப்பொழுது அவருக்கு வயது பதினான்கு 1990ல் ஷீர்டி சாயியினுடைய பிறப்பை அவர் வெளிப்படுத்தினார்.

## வளர்ப்பு பிறப்பு

ஷீர்டி சாயி அவதரித்த இடம் பத்ரி என்று நிரூபித்துள்ளனர். கங்கா பவாத்யா என்ற அந்தணருக்கும் தேவகிரி அம்மாவுக்கும் மூன்றாவது பிள்ளையாக அவதாரம் செய்தார். ஆலமர நிழலிலே, தாய், ஷீர்டி நாதரை ஈன்றாள். படீல் என்ற இசுவாமிய தம்பதியினர் இப்பிள்ளையைக் கண்டு எடுத்து வளர்த்தனர். பாபு என்று பெயரிட்டனர். ஐந்து வயதளவில் திரு. படீல் உடலை நீத்தார்.

திருமதி படீல் பாபுவை கோபால் ராவ் தேஷ்முக் என்ற வெங்கடாசலபதி பக்தரிடம் ஒப்படைத்தார். இவரே ஷீர்டீ சாயி குருவாகக் குறிப்பிட்ட வெங்கூசா என்பர்.

குரு, சீடன்மேல் மிகுந்த பாசம் வைத்தார். பொறாமை கொண்ட மற்றைய சீடர்கள் செங்கல்லால் எறிய, குரு அதை தாம் ஏற்றுக் கொண்டதாகவும், பாபாவுக்கு அச்செங்கல் பட்டதாகவும் இரு வேறு விதமாகவுக் கூறுவர். இச் செங்கல்லால் ஷீர்டீ பாபா, மசூதியான 'துவாரகாமயி' யில் தலைக்கு அணையாக வைத்துக் கொண்டார்.

மலட்டுப் பசுவில் இருந்து பால் பெற்று அப்பால் ஊடாக தம் ஞானத்தையெல்லாம் பாபாவுக்கு கொடுத்து மேற்கு நோக்கிச் செல்லும்படி குரு பணித்தார்.

ஆரம்பத்தில் ஷீர்டியில் பதினாறு வயது மதிக்கத்தக்க அழகான இளைஞராக பாபா காணப்பட்டார். வேப்ப மரம் ஒன்றின் கீழ அமர்ந்து மூன்று வருடங்கள் வாழ்ந்ததாக தெரியவருகிறது.

ஷீர்டியின் கண்டோபா கோவில் பூசகரான மஹல்சபதியும் காசிநாத் என்ற தையற்காரரும் பாயாஜாபாய் என்ற அம்மையாரும் பாபாவின் மேல் பாசம் வைத்தார்.

திடீரென்று ஒரு வருடமாக பாபா ஷீர்டியில் காணப்பட்டவில்லை.

## சாயிபாபா

1858ஆம் ஆண்டு சாந்தி படீல் என்ற இசுவாமிய பக்தர் குடும்பத்தின் திருமண ஊர்வலத்துடன் பாபா ஷீர்டியை மீண்டும் வந்தடைந்தார். மஹல்சபதி அடையாளம் கண்டு 'யா சாயி' சர்துவே உமக்கு நல்வரவாகுக என்று வரவேற்றார். அன்றிலிருந்து சாயி பாபா என்று அழைக்கப்படுவதை ஷீர்டி சத்குரு ஏற்றுக்கொண்டார்.

1858 இலிருந்து 1918 இல் உடலை உடுத்தது வரை சாயி ஷீர்டியிலேயே வாழ்ந்தார். நிம்கோன் றஹாதா என்ற நான்கு மைல்களுக்குள் இருந்த கிராமங்களுக்கு மட்டும் இடையே சென்று மீள்வார்.

வேப்ப மரத்தின் கீழ் வாழ்ந்த அவர் ஒரு வெள்ளத்தின் பின் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கி பாழடைந்த மசூதியை இருப்பிடமாகக் கொண்டார். அதை துவாரகாமயி என்றார். மசூதியின் ஒரு பகுதியில் 'துனி' என்ற நெருப்பை வளர்த்தார். அதன் சாம்பல் அல்லது 'உதி' யை மன உடல் நோய்களுக்கு மருந்தாகக் கொடுத்தார்.



## உணவும் உடையும்

தினமும் ஐந்து வீடுகளில் பிச்சை ஏற்பார். 'துனி'க்கு ஆகுதியாக சிறிது அளிப்பார். பானையிலும் இடுவார். நாய், பூனை பிச்சைக்காரர் உண்டபின் எஞ்சியதை பக்தர்களுடன் பகிர்ந்து உண்பார். தத்யா கோடே படீல் கிழக்கு வரை கிழிந்த கம்பளியையே தைத்து அணிவார். சாக்குத் துணியிலேயே தூங்காது துயில் கொண்டார்.

## அற்புதங்கள்

தொடர்ந்து இலவசமாக எண்ணெய் கொடுக்க மனமில்லாது இல்லை என்று மளிகைக் கடைக்காரர்கூறியபோது தண்ணீரையே விட்டு அகல் விளக்குகளை ஏற்றினார். கோதுமையை கிராம எல்லைப் புறத்திற் தூவச் செய்து காலராவை ஷீர்டியில் இருந்து விரட்டினார். 1910ல் துனிக்குள் தம் கையை விட்டு பிறிதோரிடத்தில் நெருப்பில் வீழ்ந்த இரும்புக்கொல்லனுடைய பிள்ளையைக் காப்பாற்றினார். புயலையும், மழையையும் பொறுமையாக இரு என்று கூறி நிறுத்தியுள்ளார். 1886இல் தம் உடலை பக்தர் மஹல்சபதியிடம் ஒப்படைத்து மூன்று நாட்கள் அல்லாஹ் இடம் சென்று மீண்டும் உடலுக்குள் புகுந்தார். வயோதிப் புலிக்கு நற்கதி கொடுத்து தம் சந்நிதியில் அது உயிர் விட அருளினார்.

ஊர்ச் சாவடி ஒன்றிலும் இரவிற் தங்கினார். லெண்டித் தோட்டத்துக்கும் செல்வார்.

(அல்லா மாலிக் இறைவன் பெரியவன்) அல்லா பலா கரேகா (ஆண்டவன் அருள்செய்வான்) என்று எப்பொழுதும் கூறிக் கொண்ட இருந்தார்.

## மஹாசமாதி

உடலை உகுப்பதற்கு முன் இரண்டு வாரங்கள் மூன்று முறை ஹிந்தி ஸ்ரீராம விஜயத்தை ஓத செவிமடுத்தார். 1918 விஜயதசமி அன்று ஒக்டோபர் 15 ஆம் திகதி மாலை மூன்று மணியளவில் பாயாஜி என்ற அடியவரின் உடலிற் சாய்ந்து மஹசாமதி அடைந்தார்.

நாக்பூர் கோடீஸ்வரர் பூட்டியின் முரளிதரனுக்கு என எண்ணி அமைக்கப்பட்ட 'வாடா' வில் அவர் பூத உடல் அடக்கம் செய்யப் பட்டது. இதுவே இன்றுள்ள சாயி மந்திர் ஆகும்.

## எல்லாம் அறிந்தவர்

எல்லாம் அறிந்தவர் என்பதை சுவரில் சத்தமிட்ட ஒரு பல்லி வாயிலாகவும், சுந்தானந்தர், சோல்கர், மூலே சாஸ்திரி ஆகியோரின் சம்பவங்கள் மூலமும் வெளிப்படுத்தியுள்ளார்.

இராமராகவும், பண்டைரீபுர விட்டல் ஆகவும் காட்சி கொடுத்துள்ளார்.

தாஸ்கணு என்ற பக்தருக்காக கங்கை, ஜமுனை 'பிரயாகைத் தீர்த்தத்தை தம் விரல்களில் ஊற்றெடுக்கச் செய்தார். கபீர் உடன் தம்மை இணைந்துக் கொண்டார். அல்லாஹ், இராமர், யேசு அவர் திருமுன் ஒன்றே.

துவாரகாமியை மிதிப்பவன் துயரங்கள் நீங்கி மிகுந்த சந்தோஷத்தை அடைவான் என்றும், நாம் அவரை நோக்கினால் தாம் எம்மை நோக்குவார் என்றும் தமது பக்தர்களுடைய வீட்டில் குறைவென்பதே இருக்காது என்றும் கூறியுள்ளார்.

ஷீர்டி சாயியின் புகழைப் பரப்பியவர்களில் முக்கியமானவர் நரசிம்மசுமாமிஜி ஆவார் தாஸ்கணு, உபாசன் மஹராஜ் இருவரும் ஷீர்டி சாயி புகழ் பாடியுள்ளனர்.

ஷீர்டி சத்குருவின் பிரதான ஆலயம் ஷீர்டி ஆலயம் சென்னையில் ஷனாய் நகர், ஈஷஞ்சம்பாக்கம் மயிலாப்பூர் ஆகிய இடங்களில் அவர் ஆலயங்கள் உள்ளன.

**ஷீர்டி சத்குருவின் பாதம் பணிவோம்.**

* * *

க. பாலசுப்பிரமணியம்
B.A. (Cey) Dip.in Ed., M.A. (Ed)

# அவினாசி விக்கிரகங்கள் அலங்கரிக்கும் அருள்மிகு வழிவிடு வேல்முருகன் ஆலயம்



நாடி வரும் அன்பர்களுக்கு தேடி வரம் ஈர்ந்தளிப்பவன் எங்கள் முத்துக்குமரன். தலைநகரிலே தமிழ் மக்கள் செறிந்து வாழும் வெள்ளவத்தையில் புதியதோர் ஆலயம் அமைக்கப்படுகிறது. அதன் நாமம் தான் "அருள்மிகு வழிவிடுவேல் முருகன் திருக்கோயில்" இலங்கை, இந்தியா மக்களின் நன்கொடைகளால் நிர்மாணிக்கப்படுகிறது. இத்திருக்கோயில். தற்பொழுது இல. 11/ 49, பரகும்பா பிளேபில் அமைந்துள்ள அருள் மிகு வழிவிடு வேல்முருகன் திருக்கோயிலின் விக்கிரக ஆவாகனப் பூஜை சித்திரைப் புத்தாண்டு தொடக்கம ஆரம்பமாகி நடை பெறுகிறது.

## அவினாசி விக்கிரங்கள்

அருள்மிகு வழிவிடுவேல் முருகன் திருக்கோயிலில் 23 விக்கிரங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இவ்விக்கிரகங்கள் அனைத்தும் இந்தியாவில் பிரசித்தி பெற்ற அவினாசி சிற்பக் கலைக் கூடத்தில் செதுக்கப்பட்டவை ஆகும். விக்கிரங்களுக்கான கற்கள் ஊத்துக்குளியில் இருந்து அவினாசிக்கு எடுதது வரப்பட்டு விக்கிரகங்கள் வடி வமைக்கப்பட்டன. இவை இறுதி வடிவம் பெறுவதற்கு ஏறக்குறைய 1 1/2 வருடம் எடுத்திருக்கிறது.

சுமார் 7 அடி உயரமான திருவாசியுடன் கூடிய வலம்புரி சித்தி விநாயகர் விக்கிரகத்தில் திருவாசியில் சப்த ஒலி பிறக்கும் அத்துடன் பாணலிங்கம் சப்த தீர்த்தங்களில் ஒன்றை நர்மதா ஆற்றங்கரையில் இருந்து ரேகையுடன் பெறப்பட்டுள்ளது. வள்ளி தெய்வானையுடன் சிரித்த முகத்துடன் சுப்பிரம்மணியர் திரிபுவன சுந்தரி லட்சுமி, சரஸ்வதி, தட்சணா மூர்த்தி, காலபைரவர் போன்ற விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

இவற்றுடன் விஷேடமாக தேவியருடன்கூடிய நவக்கிரங்கள் தத்தமது வாகனங்கள் சகிதம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளமை இக் கோயிலின் சிறப்பம்சமாகும்.

விக்கிரங்கள் கலை நுணுக்கத்துடனும் தெய்வீக சிறப்புடனும் அமைந்திருக்கின்றன.

## அனைவர்க்கும் அமைதி வேண்டும்

இத்திருக்கோயிலின் ஆதீன கர்த்தா ஜெயரெட்ணம் கூறுகையில், 'இந்த விக்கிரகங்களை நிறுவியதன் மூலம் இலங்கையில் அமைதி நிலவவேண்டும், வன்முறைகள் ஓய வேண்டும் என்பதே எமது விருப்பம் என்று கூறினார்.

வடக்கில் சமாதான மொட்டு அரும்பி இருக்கும் இக்காலப்பகுதியில் வழிவிடு வேல்முருகன் திருக்கோயிலில் ஆத்ம சக்திக்கான விக்கிரக ஆவாகனப் பூஜை நடைபெறுவது இறை சித்தம் என்றே சொல்ல வேண்டும். வழிபாட்டுடன். இந்தக் கோயில் மூலம் பல சமூக சேவைகளையும் ஆற்றவிருக்கின்றனர் கோயில் நிர்வாகத்தினர்.

- கணனி பயிற்சி (பல மாவட்டங்களில் அமைகிறது)
- இந்து மிஷன் வைத்தியசாலை (வவுனியா மாவட்டம்)
- முதியோர் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு நிலையம்.
- இலவச திருமண சேவை மண்டபம் (கொழும்பு)

போன்ற சேவைகளை ஆற்றுவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

பக்தர்களுக்கு அருளாசியை வழங்குவதுடன் ஆதரவற்றோருக்கு சேவை வழங்க வெள்ளவத்தையில் எழுந்தருளியுள்ளார் அருள்மிகு வழிவிடு வேல்முருகன்.


பிரம்மஸ்ரீ ம. பிரதாபஷர்மா


## அதிசய உலகம்!



சிட்ணி மிருகக் காட்சிச் சாலையில் கிரிபா எனப்படும் 23வயது பெண் கொரில்லாவுக்கு மிருகவியல் நிபுணர் லாரி வொயினல்ற்ஸ் முன்பு பொருத்தப்பட்ட கற்பத் தடைக் கருவிகளை நீக்கி உடலைப் பரிசோதிப்பதைப் படத்தில் காணலாம். இந்த கிரிபாவுக்கு வாய் மூலமாக கற்பத்தடை மருந்து வழங்கி, நல்ல இன விருத்தியை ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளனர்.

இது மேற்கு ஜெர்மனியின் கொலொனில் நடைபெற்ற புகைப் படக் கண்காட்சியில் 26.09.2002 காட்சிக்கு வைக்கப்பட்ட இரு விரல்களுக்குள் அடக்கக்கூடிய படப்பிடிப்புக கருவி. இதன் கொள்ளளவு 32Mb. 99 பிம்பங்களை களஞ்சியப்படுத்தக் கூடியதாகும். இதன் நிறை 95 கிராம். இதன் பிம்பங்களைக் கணனிக்கு மாற்றலாம்.





பிரெஞ்சுக் கலைஞர் ஜீன் பிலிப் ஜாபினி ஒரு கப்பலை வடிவமைத்துள்ளார். 400 மீட்டர் நீளமும் 300 மீட்டர் அகலமும் கொண்ட இந்தக் கப்பலில் ஆயிரம் அறைகள் அமைக்க திட்டமிட்டுள்ளனர். 2003 மார்ச்சில் மியாமி கடற்கரையில் இதன் கட்டுமானப் பணி தொடாங்கவுள்ளது.